14.8.2023
திங்கட் கிழமை

*அவனே எவனேனுமாம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. அகிஞ்சனர்களான சம்சாரி ஜீவர்கள் ஸ்வ ஸ்வரூபத்தை உணர்ந்து, ப்ராக்ருத பலன்களில் உள்ள தோஷங்களை தெளிந்து, பரம புருஷார்தத்தில் உயர்த்தியை புரிந்து கொண்டு, ஸர்வேஸ்வரன் விதித்த லகு உபாயத்தை அநுஷ்டித்து மோக்ஷ பலனை பெறுகிறான் என்பது, சாஸ்த்திர விளக்கம்.

# ஜீவனைச் சார்ந்த தர்ம பூத ஞானத்தினால், குரு முகேந காலக்ஷேபம் செய்து, ஸ்வ ஸ்வரூப தன்மைகள் அவன் அறிகிறான் ; ஜீவனுக்கு பரமாத்ம சம்பந்தமானது, ஆதேயத்வம், நியாம்யத்வம், சேஷத்வம் ; இதனை ப்ரமாணங்கள் விளக்கும் போது,

*நாயம் தேவோ ந மர்த்யோ வா த்ரியக் ஸ்தாவரோபி வா ஞானானந்த மயஸ்வாத்மா சேஷோஹி பரமாதமன:*

என்கிறது ; அதாவது, இந்த ஜீவன் தேவனல்லன், மனுஷ்யனல்லன், த்ரியக் அல்லன், தாவரமல்லன் ; ஞானம் மற்றும் ஆனந்தத்தை ஸ்வரூபமாக க் கொண்ட இந்த ஜீவன் பரமாத்மாவான எம்பெருமானுக்கு சேஷன் ; சரீர ஆத்ம சம்பந்தம் உடையவன்.

# அனைத்து ப்ராக்ருத பலன்களிலும் ஏழு விதமான குற்றங்கள் இருப்பதாக சாஸ்த்ரங்களால் கூறப்படுகின்றன. அதாவது,

*அல்பத்வம்* - ஸுகத்தின் அளவில் குறைவு

*அஸ்திரத்வம்* - நிரந்தரம் அற்ற தன்மை கொண்ட ஸுகம்

*துக்க மூலத்வம்* - அந்த ஸுகத்தை அடையும் முயற்சியில் உள்ள துக்கம்

*துக்க மிஸ்ரத்வம்* - அநுபவிக்கும் போது துக்கம் கலந்த ஸுக ரூபமான பலன்

*துக்கோதர்கத்வம்* - ஸுகானுபவம் முடியுமே என்ற துக்கம்

*விபரீத அபிமான மூலத்வம்* - தன்னைப் பற்றிய உண்மையற்ற எண்ணங்கள்

*ஸ்வாபிக ஆனந்த விருத்வத்வம்* - துக்கம் கலசாத இயல்பான சந்தோஷத்திற்கு மாறானது

# ஆக, ஒரு முமுக்ஷுவானவன்,

*பரமாத்மனி யோ ரக்த: விரக்த: அபரமாத்மனி ஸர்வேஷணா விநிர்முக்த: ஸ பைக்ஷம் போக்தும் அர்ஹதி*

என்கிற ஸ்ம்ருதி ப்ரமாணத்தின் படி,

எவன் உலக அநுபவங்களில் உள்ள தோஷங்களை உணர்ந்து, பரமனை அடைவதையே முக்கிய ப்ரயோஜனமாகக் கொண்டு முமுக்ஷுவாக இருக்கிறானோ, அவன் கர்ம அநுகுணமாக பிக்ஷை எடுத்து புஜிக்க வேண்டிய நிலையிலும் கலங்க மாட்டான்.

# ஸந்த்குமார ஸம்ஹிதையில்,

*யகுயோ நிஷ்வபி ஸஞ்சாதோ ஸ: ஸக்ருத் சரணம் கத: த மாதா பித்ரு ஹந்தாரம்பி பாதி பவர்திஹா*

என்கிறது, அதாவது

எந்த ஜாதி பிறந்தவராயினும், தாய் தந்தையை கொல்லும் அளவிற்கு தீய குணங்களைக் கொண்டவனாயினும், ஒரு முறை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனிடத்தில் சரணாகதி அநுஷ்டித்தானேயானால், கருணை உள்ளம் கொண்ட ஸர்வேஸ்வரன், அவனை சம்சார பந்தத்திலிருந்து விடுவித்து மோக்ஷமளிக்கிறான்.

2. முமுக்ஷுத்வம் மோக்ஷ உபாய அநுஷ்டான ஹேது ; முமுக்ஷுவிற்கு மோக்ஷ பலன், ப்ரார்த்திக்காவிடால் ஸித்திக்குமோ என்னில், இதனை ப்ரமாண பலத்தினால் அறிய வேண்டும்.

# ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் வெளியிட்ட பாஞ்சராத்ர ஆகம சாஸ்த்திரப்படி,

*அப்ரார்திதோ ந கோபாயேத் இதி தத் ப்ரார்த்தனா மதி: கோபாயிதா பவேத் ஏவம் கோப்த்ருத்வ வரணம் ஸ்ம்ருதம்*

என்கிற ப்ரமாண வாக்கியத்தினால், ரக்ஷிக்க வேண்டும் என ப்ரார்த்தித்து, ஆத்ம ஸமர்ப்பணமாகிற சரணாகதியை செய்யாவிடில் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஒரு போதும் மோக்ஷ பலனை அளிக்க மாட்டான் என தெளிவாகிறது.

ப்ரபத்தி அநுஷ்டானத்தில், ***கோப்த்ருத்வ வரணம்*** என்கிற ரக்ஷக ப்ரார்த்தனையும் அங்கம்.

# தன் கருணையினால் ஜீவ ரக்ஷணத்தை செய்த போதும், எம்பெருமான் பரம புருஷார்த்தம் அளிக்க, ஒரு உபாயத்தை விதிப்பதற்கான ப்ரதான காரணம், தனக்கு வைஷம்ய நைக்ருண்ய தோஷம் வாராமைக்காக ; அதனால், பாஞ்சர்த்ர சாஸ்த்திரமானது,

*ஸர்வக்ஞோபி விச்வேச: ஸதா காருணகோபி ஸந். ஸம்ஸார தந்திர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே*

என்கிறது; அதாவது, கருணை உள்ளம் கொண்ட ஸர்வக்ஞனான எம்பெருமான், இந்த சம்சாரத்தை நடத்தும் பொருட்டு, சாஸ்த்திர விதிப்படி, சம்சாரி ஜீவர்களிடம் ரக்ஷண ப்ரார்த்தனையை, எதிர் பார்த்து பலனளிக்க காத்திருக்கிறான்.

# இதனால் ஸ்ரீராமானுஜர்,

*தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ*

என ஸ்ரீபாஷ்யத்தில் ***ஆனுமானாதிகரணத்தில்*** அருளினார். அதாவது, அங்க ப்பத்தியாகவோ (பக்தி யோக விஷயம்) ஸ்வதந்த்ர ப்ரபத்தியாகவோ பகவானின் திருவடிகளை பற்ற வேண்டுவதாகிறது.

# ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (7-14)

*தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே*

'என்னுடைய முக்குணங்களாலான ப்ரக்ருதி என்னும் மாயையை கடப்பதற்கு என்னையே சரண் அடைய வேண்டும்' என சொல்லப் பட்டிருக்கிறது.

# இவ்விஷயத்தை, பிள்ளை திருநறையூர் அரையர்,

*__ஒரு குருவி பிணைத்தபிணை ஒருவரால் அவிழ்க்கப் போகிறதில்லை; சர்வசக்தி கர்மானுகுணமாகப் பிணைத்த பிணையை அவனையே கால் கட்டி அவிழ்த்துக் கொள்ளும் இத்தனைகாண்__*

என்று விளக்குவர்.

அவன் இன்னருளே ஒரு லகு உபாயத்தை விதித்து மோக்ஷ ஸித்திக்கு காரணமாக்குகிறது.

3. ஸர்வ வித பந்துவானவன், இந்த ஜீவனுக்கு ஸ்வாமியாய் இருக்க, இந்த துக்க மயமான சம்சார பந்தம் நீங்க, அவன் விதித்த லகு உபாயமே அநுஷ்டேயம்.

# பராசர மஹரிஷி, ஶ்ரீவிஷ்ணு புராணத்தில்

*__ஸர்வம் துக்க மயம் ஜகத்__*

என்று உலகில் உள்ள அனைத்து பலன்களும் துக்க கலப்புண்டவையே, என அருளினார்.

# உபநிஷத் *__காரணம் து த்யேய:__* என்கிறது. (அதாவது, உலகத்திற்கு எவன் காரணமோ அவனே ஆராதிக்கத் தகுந்தவன்)

ஶ்ரீமந் நாராயணனே ஜகத் காரணம் என்ற பரதேவதா நிர்தாரணம் ஶ்ரீ பாஷ்யத்தில், *__ஜன்மாத்யஸ்ய யத:__* ஸூத்ரம் கொண்டு செய்யப் பட்டிருக்கிறது.

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்தில் *__பல மத உபபத்தே:__* எனப் படுகிறது. (அதாவது, அனைத்து பலன்களும் உலகத்திற்கு காரணமான பரம் பொருளிடமிருந்தே பெறப் படுகிறது)

உபநிஷத் சாரமான பகவத் கீதையில் (9-24) கண்ணன், *__அஹம் ஹி ஸர்வ யக்ஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச__* என்கிறான். (அதாவது, ஸர்வேஸ்வரனான கண்ணனே ஸர்வ ஆராத்யன் மற்றும் பல ப்ரதன்)

மேலும், உபநிஷத் சாரமான பகவத் கீதையில் கண்ணன், *__லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹிதான்__* என்கிறான். (அதாவது, தேவதாந்தரங்களால் அளிக்கப் படுவதாக கருதப்படும் அனைத்து பலன்களும் ஸர்வேஸ்வரனான கண்ணனிடமிருந்தே பெறப் படுகிறது)

ஸ்வாமி நம்மாழ்வார் *__தேவன் எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே__* என அருளினார்.

# ஆக, இதர தேவதா சம்பந்தம் அநுசிதம் என்பதனை, ஸ்வாமி தேசிகனின் அதிகார ஸங்க்ரஹ வரி விளக்குகிறது :

*__அறிவித்தனர் அன்பர் ஐயம் பறையும் உபாயம் இல்லாத் துறவித்துனியில் துணை ஆம் பரனை வரிக்கும் வகை உறவு இத்தனை இன்றி ஒத்தார் என நின்ற உம்பரை நாம் பிறவித் துயர் செகுப்பீர் என்று இரக்கும் பிழை அறவே__*

அதாவது, நம்முடன் சம்பந்தம் சிறிதும் இல்லாமல், நம்மைப் போன்றவர்களான சிவன் சதுர்முகன் போன்ற வேறு தேவதைகள், நம் சம்சார துக்கத்தை போக்க யாசிப்பதாகிய குற்றம் நீங்குவதற்காக, நம்மால் அநுஷ்டிக்க இயலாத பக்தி யோகத்தை நினைத்து வருந்தி அகிஞ்சனாக இருக்கும் துர்தசையில், ஸர்வேஸ்வரனிடம் சரண் அடையும் ப்ரகாரத்தை, நம்மிடம் ப்ரீதி உள்ள ஆசார்யர்கள் நாம் தெளியும் படி உபதேசித்து அநுக்ரஹித்தனர்.

# இந்த சரணாகதி அநுஷ்டானத்தை ஐந்து அங்கங்களோடு கூடி அங்கி அநுஷ்டானமாக செய்ததை, ஸ்வாமி தேசிகன், *__அடைக்கலபத்து__* ப்ரபந்தத்தில், அருளியுள்ளார்.

*உகக்குமவை உகந்து உகவா அனைத்தும் ஒழிந்து உறவு குணம் மிகத்துணிவு பெற உணர்ந்து வியன் காவல் என வரித்து சகத்தில் ஒரு புகலில்லா தவம் அறியேன் மதிட்கச்சி நகர்க்கருணை நாதனை நல் அடைக்கலமாய் அடைந்தேனே*

பெருமாளுக்கு விருப்பமானவற்றையே அடியேனும் செய்வேனென்றும், அவருக்கு விருப்பமில்லாதவற்றை விலக்கி விடுவேனென்றும், ***அவருக்கும் அடியேனுக்கும் உள்ள உறவைப் புரிந்து கொண்டு*** , அவர் காத்தருள்வார் என்று உறுதி பூண்டு, என்னைக் காத்தருள வேண்டுமென அவரிடம் பிரார்த்தித்து, வேறு புகலற்றவனாயிருக்கும் அடியேன், காஞ்சீயில் விளங்கும் கருணை மிக்க பேரருளாளப் பெருமாளை அடைக்கலம் புகுந்தேன்.

4. பரமாத்மாவான பகவானுக்கும் ஜீவர்களுக்கும் நவ வித சம்பந்தங்கள் உண்டு என்பதை ப்ரமாண பலத்தினால் தெளியலாம்; இந்த சம்பந்தங்கள் உபமானம் காட்டி விளக்கப் படுகிறது.

***பிதா ச ரக்ஷக: சேஷி பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி, ஸ்வாமி ஆதாரோ மம அத்மா ச போக்தா சாத்யமநூதித:***

என்கிற ஸ்லோகம் கொண்டு விஷயீகரிக்கலாம்.

# ***பிதா-புத்ரன்*** - பகவானே ஸர்வ காரணபூதன்.

கஜேந்திரன், முதலையின் பிடியிலிருந்து தப்பிக்க,

***நமோஸ்துதே அகில காரணாய; நிஷ்காரணாய; அத்புத காரணாய***

எனக்கூறி, எம்பெருமானை அழைத்தான். அதாவது, எவன் லோகங்கள் அனைத்துக்கும் காரணமோ, எவன் ஒருவன் இருப்பிற்கு எந்த காரணமும் கிடையாதோ, லோகங்களில் காணப்படும் அனைத்து அத்புத விஷயங்களுக்கும் எவன் காரணமோ, அவனை சரணமாக பற்றுகிறேன்.

# ***ரக்ஷகன்-ரக்ஷிய வஸ்துக்கள்*** - பகவானே ஸர்வ ரக்ஷகன்

ப்ரணவத்தில் அகார வாச்யனான எம்ப்ருமானின், ***அவ ரக்ஷணே*** எனும் தாதுவினால் அறியப்படும் ரக்ஷகத்வத்தை, ***நிர்ஹேதுக க்ருபா விஷயம்*** , என ஸ்வாமி தேசிகனின் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் ***மூல மந்த்ராதிகாரத்தில்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***இந்த ரக்ஷகத்வம் அவச்சேதகமில்லாமையாலே ஸர்வ விஷயம். ரக்ஷா ப்ரகாரங்கள் விஷயங்கள் தோறும் ப்ரமாணங்கள் காட்டினபடியிலே விசித்திரங்களாயிருக்கும்***

# ***சேஷி சேஷ பாவம்*** - பகவானே ஸர்வ சேஷி

வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஶ்ரீ ராமானுஜர்,

***பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி***

என்று 'சேஷ - சேஷி' விஷயத்தை விளக்கி அருளியுள்ளார். அதாவது, 'சேஷன்' - தன் செயலினால் சேஷிக்கு உகப்பை ஏற்படுத்துபவன் ; 'சேஷி' - சேஷனின் செயலினால் உகப்பை அடைபவன் ; ஸர்வேஸ்வரனுக்கு போக ரஸத்தை நித்ய முக்தர்கள் உண்டு பண்ண, லீலா ரஸத்தை உண்டு பண்ணுபவர்கள் சம்சாரி ஜீவர்கள். ஆக, அவன் ஸர்வ சேஷி.

# ***கணவன்-மனைவி உபமானம்*** - பகவானே ஸர்வ நியந்தா

ஶ்ரீ ராம தூதனாக வந்த சிறிய திருவடியிடம், பிராட்டி கூறியதாவது,

*கௌசல்யா லோக பர்தாரம் ஸுஷுவே யம் மனஸ்வினி தம் மமார்த்தம் ஸுகம் ப்ருச்ச சிரஸா ச அபிவாதயா*

கோசலை நந்தனான லோக பர்தாவான ஶ்ரீராமனிடம் என்னுடைய நமஸ்காரங்களைத் தெரிவி.

# *அறிய வேண்டுபவன்- அறிபவன் பற்றிய விளக்கம்*

*அதாதோ ப்ருஹ்ம ஜிக்ஞாஸா* என்கிற ப்ருஹ்ம ஸூத்ரமானது கர்ம விசாரானந்தரம் ப்ருஹ்மத்தைக் குறித்த ஆய்வு சரியானதே ; அவனே அறிய வேண்டுபவன், என்றாகிறது.

# *ஸ்வாமி- தாஸ பாவம்* - பகவானே ஸர்வ ஸ்வாமி

கடோபநிஷத் கூறும் போது,

*அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேண உவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்*

என்று *அ* என்பதால், விஷ்ணு சொல்லப் படுகிறான்; *உ* பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு *ம* என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கம், எனப் பொருளாகிறது.

# *ஆதார-ஆதேய விளக்கம்* - பகவானே ஸர்வ ஆதாரன்

நாராயணன், தத் புருஷ சமாஸத்தினால் *நாராணாம் அயனம்* - அதாவது ஸகல சேதன அசேதன வஸ்துக்களும் இருப்பிடமாகக் கொண்டவன்; ஆக, நாராயண் *ஆதாரம்* ; மற்றவை *ஆதேயம்*

# *சரீரி சரீர சம்பந்தம்* - பகவானே பரமாத்மா

தைத்ரிய உபநிஷத்தில், *நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:* என்றும், ப்ருஹதாரண்யக உபநிஷத்தில், *யஸ்ய ஆத்மா சரீரம்* - ஜீவர்களை நாராயணனுக்கு சரீரம் - என்றும் சொல்லப்படுகிறது.

# *போக்தா-போக்ய விளக்கம்* - பகவானே ஸர்வ போக்தா

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸூத்ரம் *லோகவத்து லீலா கைவல்யம்* என்கிறது. அதாவது, ஸ்ருஷ்ட்டி முதலியவை எம்பெருமானுக்கு விளையாட்டே ப்ரயோஜனம் ; பரமபதத்தில் போக ரஸத்தையும், ப்ராக்ருத லோகங்களில் லீலா ரஸத்தையும் அநுபவிக்கிற போக்தா எம்பெருமான்.

ஆக, பகவத் உறவு ஒழிக்க ஒழியாது ; இதை உணராத போது *பொய் நின்ற ஞானம்* என்பதாகிறது ; ஆக, இந்த நவ வித சம்பந்தத்தினால், பகவத் உறவை உணர்த்தும் வகையிலலே,, ஆண்டாள் *உந்தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது* என அருளினாள்.

5. இந்த பகவத் சம்பந்தத் தெளிவை, ஸ்வாமி நம்மாழ்வாரின் பெரிய திருவந்தாதி விளக்குகிறது :

*அவனாம் இவனாம் உவனாம் மற்று உம்பர் அவனாம் அவன் என்றிராதே அவனாம் அவனே எனத் தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால் அவனே எவனேனும் ஆம்*

அதாவது,

சில சமயங்களில், எம்பெருமான் எளியவன் என்றும், வேறு சில ஸமயங்களில் அவன் துர்லபன் என்றும் தோற்றும்; மற்ற சில ஸமயங்களில் 'அவன் ஸுலபனுமல்வன், துர்லபனுமல்லன்; நடுத்தரமாயுள்ளவன்' என்றும் தோற்றும். மேலும் சில ஸமயங்களில் 'அவன் மிக உயர்ந்தவன் மேலோர்க்கும் மேலானவன் ஆகையால் அவனைப் பெறுதல் கூடுமோ' என்றும் தோற்றம். ஆக இப்படியெல்லாம் பல படியாகத்

தோன்றுவதை கருத்தில் கொள்ளாமல், அப்பெருமானுக்கு ஸ்வாபாவிகம் காருண்யம் என்று தெளிந்த ஞானத்தைப் பெற்று அவன் விதித்த சாஸ்த்திர விதிகளைப் பின்பற்றி அவன் திருவடிபளையே பற்றி நின்றால், அவன் நமக்கு ஸகலவித பந்துவமாய் நின்று எல்லா நன்மைகளையும் செய்தருள்வான், என்கிறார் ஸ்வாமி நம்மாழ்வார்.

ஆக, ***அவனே எவனேனுமாம்*** என்கிறபடி, பகவத் சம்பந்தத்தை சரி வர உணர்ந்து போவது, சம்சாரி ஜீவர்களுக்கு ஆத்ம உஜ்ஜீவன ஹேதுவாகும் ; அதாவது மோக்ஷ உபயத்தில் மூட்டும், என்றபடி.

இதன் தாத்பர்யத்தை, ஸ்வாமி தேசிகனின் ***அதிகாரி விபாகதிகாரத்தில்*** விளக்கியுள்ளார்.

***ப்ரபன்னாத் அந்யேஷாம் ந திஷதி முகுந்தோ நிஜபதம்***

***ப்ரபத்திக்கு அல்லது ஸர்வேஸ்வரன் பரம புருஷார்த்தம் கொடுக்க இரங்கான்***

அதாவது,

இப்படிப்பட்ட நிவ்ருத்தி தர்மத்திலே (மோக்ஷ பலனிலே) இச்சை கொண்ட அதிகாரிகள் இரு வகையாக சாஸ்த்திரங்கள் கூறுகின்றன:

***அத்வாரக ப்ரபத்தி நிஷ்டன்*** (மோக்ஷத்திற்காக செய்யப்படும் சரணாகதி அநுஷ்டானம்)

மற்றும்

***ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டன்*** (மோக்ஷ பலனுக்கான பக்தி யோகம் தடைபடிமல் இருக்க செய்யப்படும் சரணாகதி)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

15.8.2023
செவ்வாய் கிழமை

***பெருமாளுக்கு பல்லாண்டு பாடுவது அஹங்கார கர்பமா? - கேள்வி பதில் விஷயம்***

1. ஸ்வாமி தேசிகனின், ***தத்வ பதவீ*** என்னும் சில்லரை ரஹஸ்ய க்ரந்தம்  சேதநத்வத்தை விளக்குகிறது :

***சேதநமான அவர தத்வம் பரிசன்னமான அஹம் அர்த்தம் ; இதற்கு ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் பராயத்தங்களாய் இருக்கும்***

அதாவது, ஜீவ தன்மைகளாவது, அளவில் சிறியதான நான் என்பதற்கு பொருளாகும் ; இதற்கு, அறிவுடைமை, செயல் புரியும் தன்மை உடைமை, பலனை அநுபவிக்கும் தன்மை எம்பெருமானுக்கு அதீனமாக இருக்கும்.

அதாவது, ***அஹம் அர்த்தம்*** என்பது ‘நான்’ என்பதற்கான பொருள்.

# திருவஷ்டாக்ஷர தாத்பர்யத்தை, ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் விளக்குகிறார்.

***அஹம் ஆத்மா ந தேஹோஸ்மி விஷ்ணு சேஷோ அபரிக்ரஹ: தமேவ சரணம் ப்ராப்த: தத் கைங்கர்ய சிகீர்ஷயா***

அதாவது, ***நான்*** என்கிற சொல் ஆத்மாவை குறிக்கும்; எனது சரீரத்தை குறிக்காது; ஸர்வேஸ்வரனுக்கு நான் அடிமைப் பட்டவன்; எனக்கு அடிமைப்பட்டது என்பது எதுவும் கிடையாது. நமக்கு அடிமைப் பட்டதாக இங்கு தோன்றும் அனைத்தும் சரீர சம்பந்தத்தினால். ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை சரண் அடைந்திருக்கிறேன்; அவனுக்கு அடிமைத் தொழில் செய்வதற்காக.

இங்குள்ள ***அஹம்*** என்கிற நான் என்பது ஸ்வ ஸ்வரூபத்தை விளக்க வந்தது.

# ஜிதந்தா ஸ்தோத்திர வரிகள்:

***அஹம் பீதோஸ்மி தேவேஷ ! சம்சாரோ அஸ்மின் பயாவஹே. பாஹி மாம் புண்டரிகாக்ஷ ! ந ஜானே சரணம் பரம்***

அதாவது,

தேவர்களின் தலைவனே! பயத்தைத் தரும் சம்சாரத்தைக் கண்டு அஞ்சுகிறேன். தாமரைக் கண்ணா! புகல் ஒன்றில்லா அடியேனை தேவரீரே காத்தருள வேண்டும்.

இங்குள்ள ***அஹம்*** என்கிற நான் என்பது சம்சாரி ஜீவர்களின் தாபத்தை விளக்க வந்தது.

# இளைய பெருமாள் ஸ்ரீ ராமனிடம், வன வாஸத்தின் போது, நடத்திக் காட்டியது ஆரண்ய காண்டத்தில் உள்ளது:

***அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ருத: ஸ்வபதஸ்சதே. பரவானஸ்மி காகுஸ்த த்வயி வர்ஷ சதம் ஸ்திதே. ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாம் இதி மாம் வத***

என்று உரைத்தான் லக்ஷ்மணன். அதாவது, ஸ்ரீ ராமா! நீ நூற்றுக் கணக்கான வருடங்கள் இருந்தாலும், நான் உனக்கு ஸகல வித கைங்கர்யத்தையும் செய்வேன். தேவரீர் உகந்த இடத்தில் பரணசாலையை அமைக்குமாறு அடியேனுக்கு கட்டளை இட வேண்டும், என்று லக்ஷ்மணன் விண்ணப்பித்து கைங்கர்யம் செய்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இங்குள்ள ***அஹம்*** என்கிற நான் என்பது சம்சாரி ஜீவர்களின் பகவத் சேஷத்வத்தை விளக்க வந்தது.

# ***தேன வினா த்ருணம் அபி ந சலதி*** என்கிறது சாஸத்ரம்; அதாவது, அவன் அன்றி ஒரு புல்லும் அசையாது ; அந்த பகவத் சேஷத்வத்தை உணராது தன்னை ஸ்வதந்த்ரனாகக் கருதி வரும் ***அஹம்*** (நான்) என்கிற ப்ரம விஷயமான வ்யபதேசங்கள் ஹேயமானதாகும்.

இதனால், ***அஹம்*** என்பது விஷயத்தினால், ஜீவ குணம் வெளிப்பட்டதாகிறது ; அது ஸ்வாபாவிகமாகவோ ஹேயமாகவோ அமைவது விஷயத்தினால்.

2. ஸர்வேஸ்வரன் தனது உபதேசங்களில் பல ப்ரகரணங்களில் ***அஹம்*** என்னும் பத ப்ரயோகம் செய்திருக்கிறான்.

# வராஹ சரமஸ்லோகம் :

***ஸ்திதே மனஸி சுஸ்வஸ்தே சரிரே சதி யோ நர: தாது சாம்யே ஸ்திதே ஸ்மர்தா விஸ்வரூபம் ச மாமஜம் ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட பாஷாண சந்நிபம் அஹம் ஸ்மராமி மத் பக்தம் நயாமி பரமாம் கதிம்***

“எவனொருவன், தனது உடல் நிலை நல்ல நிலையில் இருக்கும்போது, என்னையே நினத்துக்கொண்டு இருக்கின்றானோ, அவனது கடைசி காலத்தில், மூச்சு, பேச்சின்றி, நாக்கு தடுமாறும் நிலையில், மரக்கட்டையாக இருக்கும்போது, என்னை நினைக்கத்தேவை இல்லை. நானே அவனை வந்து கூட்டிச்செல்வேன்.

இங்குள்ள ***அஹம் ஸ்மராமி*** என்கிற நான் என்பது ஸர்வேஸ்வரனின் பரத்வத்தை விளக்க வந்தது.

# ஸ்ரீ க்ருஷ்ண சரமஸ்லோகம் :

***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஷுச:***

அதாவது, ‘கடினமான மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் (கர்ம யோகம், ஞான யோகம் மற்றும் பக்தி யோகங்களையும்), செய்ய சக்தி அற்றவனாக நீ இருந்தால், அவைகளை விட்டு, என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே’

இங்குள்ள ***அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி*** என்கிற நான் என்பது ஸர்வேஸ்வரனின் பரத்வத்தை விளக்க வந்தது.

# ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களில் ஞானி ஏற்றமுடையவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-17) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***தேஷாம் க்ஞாநி நித்ய யுக்த ஏக பக்தி விஷிர்ஷ்யதே. ப்ரியோஹி க்ஞாநிநோர்த்யர்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:***

அதாவது, அவர்களுக்குள் ஞானி என்பவன் எனக்கு பிரியமானவன். ஏனெனில் அவன் என்னுடனேயே இருக்க ப்ரிய படுபவன். மற்றவர்கள் பலன் கிடைத்ததும் விலகுவார்கள்.

இங்குள்ள ***அஹம் ஸ ச மம ப்ரிய:*** என்கிற நான் என்பது ஸர்வேஸ்வரனின் ஸௌலப்யத்வத்தை விளக்க வந்தது.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் தானே, தன் வாக்கால், பகவத் கீதையில் (9-24) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***அஹம் ஹி ஸர்வ யஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச. ந து மாம் அபிஜாநந்தி அத தத்வேநது ச்யவந்திதே***

அதாவது,

‘ஸர்வேஸ்வரன் ஆராத்யனென்றும் பலனளிப்பனென்றும் தெளிவிக்கப் படுகிறது.’

இங்குள்ள ***அஹம்*** என்கிற நான் என்பது ஸர்வேஸ்வரனின் பரத்வ ஸௌலப்யத்வத்தை விளக்க வந்தது.

3. ஆக, ஜீவர்களின் ***அஹங்காரம்*** (ஸ்வதந்த்ரனான நான் என்கிற அகந்தை) குறையாகிறது எப்போது என்னில், ஜீவர்களின் ஸ்வ ஸ்வரூப விரோதமான வ்யபதேசங்கள் உண்டாகும் போது ; சேதநனுக்கு பத்த தசையில், மனஸ் என்னும் அசேதந இந்த்ரிய ஸாபேக்ஷமாக, தர்ம பூத ஞான நிலையான ஸங்கல்பம், என்பதினால் முடிவெடுக்கும் தன்மை உண்டாகிறது ; ஆக, இந்த ***அஹங்காரமான குணமானது*** மனத்தினால் உந்தப் பட்டு வாக்கு செயல்களில் பர்யவசிக்கிறது.

ஸ்வாமி தேசிகனின் ***தத்வ த்ரய சுளகம் - அநாத்ம நிரூபணாதிகாரம்***

*__ஆந்தரமாவது மனஸ். இது சம்சாரிகளுடைய ஸங்கல்ப ஸ்ம்ருத்யாதிகளுக்குத் தானே காரணமாய் பாஹ்ய இந்த்ரியங்களுக்குத் துணையுமாய் இருக்கும்__*

அதாவது, வெளியில் காண முடியாத மனஸ் என்னும் இந்த்ரியம், சேதநனுடைய தர்ம பூத ஞானத்தாலே, முடிவெடுக்கவும் நினைவில் கொள்ளவும் காரணமாய் இருந்து மற்ற புலன்களை இயங்கச் செய்யும்.

*__இது தானே சில இடங்களிலே அத்யவசாய-அபிமான-சிந்தைகளாகிற புருஷ புத்தி விசேஷங்களுக்குக் காரணமான தசையில் புத்தி-அஹங்கார-சித்த சப்தங்களாலும் சொல்லப் படும்__*

அதாவது, மனஸ் என்னும் இந்த்ரியம், சேதநனுடைய தர்ம பூத ஞானத்தாலே, மாறுபட்ட நிலைகளை அடைகிறது ; அதாவது,

அத்யவசாயம் என்பது நிச்சயம் செய்வது. இதுவே புத்தி.

அபிமானமாவது விபரீத ஞான விஷயமாக இருந்து போவது. இதுவே *__அஹங்காரம்__* .

சிந்தையாவது நிச்சயம் செய்வதற்கு முன்னால் சிந்தித்தல் என்பதாகிறது. இதுவே சித்தமாகும்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (3-27)

*__ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஸ: அஹங்கார விமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே__*

என அருளினான்.

அதாவது,

சம்சாரி ஜீவர்களின் சரீரமானது மூன்று குணங்களாகிய ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் உடைய ப்ரக்ருதி கார்யமான அசேதந தத்வத்தினால் ஆனது. ஆக, சம்சாரி ஜீவர்களின் செயல்கள், அந்த குணத்திற்கு ஏற்ப அமைகிறது ; அதனால் ஜீவர்களுக்கு பலன்கள் பயக்கின்றன என்று ப்ரக்ருதியின் தனமையை உபதேசித்தான் கண்ணன்.

# ஆக, *__அஹங்காரமாவது__* சரீரமே ஆத்மா மற்றும் ஸ்வதந்திரன் ஆத்மா ஆகிய ப்ரமத்தோடு கூடிய வ்யவஹாரம் ; அதாவது, 'கர்ம அதுகுணமாக பகவான் அளித்த ப்ராக்ருத சரீரத்தைக் கொண்டு, பகவானை மறந்து நான் செய்கிறேன்' என்கிற தற் பெருமையானது ; ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில், (18-59)

*__யத் அஹங்காரம் ஆஸ்ரித்ய ந யோத்ஸ்ய இதி மந்யஸே மித்யைஷ வ்யவஸாய: தே ப்ரக்ருதி: த்வாம் நியோக்ஷ்யதி__*

என அர்ஜுனனுக்கு அருளினான்.

அதாவது,

*__யத் அஹங்காரம் ஆஸ்ரித்ய__* - தன்னை ஸர்வமும் அறிந்தவன் என்று எந்த கர்வத்துக்கு வசப்பட்டு

*__ந யோத்ஸ்யே இதி மந்யஸே__* - நான் யுத்தம் செய்ய மாட்டேன் என்று நினைக்கிறாயோ

*__தே ஏஷ: வ்யவஸாய: மித்யா__* - உன்னுடைய இந்தத் தீர்மானம் பொய்யானது அதாவது மாறக் கூடியது

*__ப்ரக்ருதி: த்வாம் நியோக்ஷ்யதி__* - (ஏனெனில்) உன் ஸ்வபாவம் உன்னை போரில் ஈடுபடுத்தும்

தன்னை ஸர்வமும் அறிந்தவன் என்று எந்த கர்வத்துக்கு வசப்பட்டு நான் யுத்தம் செய்ய மாட்டேன் என்று நினைக்கிறாயோ உன்னுடைய இந்தத் தீர்மானம் பொய்யானது அதாவது மாறக் கூடியது ; ஏனெனில் உன் ஸ்வபாவம் உன்னை போரில் ஈடுபடுத்தும்.

இந்த ஸ்லோகத்தினால் தெளிய வேண்டுவது, ***அஹங்காரம்*** என்பது ஸர்வேஸ்வரனிடம் தனக்குள்ள பாரதந்த்ரியத்தை மறந்து, சாஸ்த்திர விரோத நிலைப் பாட்டை விளக்க வந்தது.

# ஆக, ***அஹம்*** என்கிற சப்த ப்ரயோகம் பொதுவாகவே ஹேயமென்பது பொருந்தாது ; அது விஷய வ்யவஹாரத்தைப் பொருத்து ஸித்திக்கும்.

4. ப்ரீதியை தெரிவிக்க மங்களகரமாக வாழ்த்துக்கள் கூறுவது ஸம்ப்ரதாய மரபு. இது பல ப்ரகாரங்களில் உள்ளன.

# வயதில் முதியோர் இளையோரை நூறாண்டு காலம் வாழ்க என்று வாழ்த்துவது ஒரு மரபு ; கல்வியில் பெரியோர், வளரும் மாணவர்களை, வாழ்த்துவது உண்டு ; பெற்றோர், தம் பிள்ளைகளை, வாழ்த்துவதும் உண்டு ; அதனால் தான், சுப கார்யங்களின் போது வாழ்த்துவதாவது,

***சதமானம் பவதி சதாயுஷ் புருஷ சதஸ்தேந்த்ரிய ஆயுஷ் வேதேந்திரியே, ப்ரதி திஷ்டதி***

என்று நூறு ஆண்டு காலம் நோய் இல்லாமல் வாழ வாழ்த்தப் படுகிறது.

# ஞான அநுஷ்டான சீலர்களான பெரியோர்கள் நல் வார்த்தைகள் பெற அவர்களை வணங்குவதுவும் அவர்களை வாழ்த்துவதாகிறது ; ஸகல உபநிஷத் சாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (4-34)

***தத் வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஷ்னேன ஸேவயா. உபதேஷ்யந்தி தே ஞானம் ஞாநிநஸ் தத்வதர்ஷிந:***

அதாவது,

ஆத்ம ஞானத்தை பெற விரும்பும் நீ அந்த ஞானத்தை பிழையற உணர்ந்த தத்வ வித்துக்களான பெரியோர்களிடம், ப்ரணாமாதிகளை செய்து பணிவுடன் அடங்கி கேட்டு அறிய வேண்டும்.

# நூலின் தொடக்கத்துக் கூறப்படும் மங்கள ஸ்லோகம் ; இது கடவுள் வாழ்த்தாகவும் அல்லது பகவத் ப்ரார்த்தனை போன்றதாகவும் அமையலாம் ; ஶ்ரீபாஷ்யத்தை தொடங்கும் போது, மங்கள ஸ்லோகத்தில்,

***அகில புவன ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே விநத விவித பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷே ஸ்ருதி சிரஸி விதீப்தே ப்ருஹ்மணி ஶ்ரீநிவாஸே பவது மம பரஸ்மின் சேமுஷி பக்தி ரூபா***

என ஶ்ரீ ராமானுஜர் அருளினார்.

‘ஜகத் வியாபாரத்தை லீலையாகக் கொண்டவன், ஜீவர்களை காப்பதில் ஸங்கல்பம் உடையவன், வேதங்களால் ப்ரகாசிக்கும் பரம் பொருளான ஶ்ரீநிவாஸன், அவனிடத்தில் எனக்கு பக்தியோடு சேர்ந்த ஞானம் ஏற்படட்டும்’ என்று அருளிச் செய்துள்ளார்.

***பவது மம பரஸ்மின் சேமுஷி பக்தி ரூபா* -** நூலை இயற்றுபவரின் பெருமை - அதாவது அவரின் எண்ணத்திலும் செயலிலும் உள்ள தூய்மை வெளிப்படுகின்றன ; அதாவது ***வக்த்ரு வைலக்ஷண்யம்* -** பகவத் அநுக்ரஹத்தை முன்னிட்டு வெளியிடப்படுகிற க்ரந்தமாகையில், அந்த க்ரந்த ஆசியருக்கு ஏற்றம் சொல்லப் படுகிறது.

*ஸ்ருதி சிரஸி விதீப்தே ப்ருஹ்மணி ஸ்ரீநிவாஸே* - நூலின் பெருமை - அதாவது உண்மைத்தனம், எளிமை, தெளிவு போன்ற அம்சங்கள் வெளிப்படுகின்றன ; அதாவது *க்ரந்த வைலக்ஷண்யம்* - திவ்ய தம்பதிகளை பர தத்வமாக ப்ரமாணத்தால் அறுதியிட்டு, அவர்கள் அநுக்ரஹித்த மோக்ஷ ஸாதனத்தை விளக்கி அருளி, அதனால் உண்டாகும் பரம புருஷாத்த ஸ்வரூபத்தை விளக்கிய க்ரந்தமாகையில், அந்த க்ரந்தத்துக்கு ஏற்றம் சொல்லப் படுகிறது.

*விநத விவித பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷே* - அந்த நூலில் சொல்லப் பட்ட விஷயங்களின் பெருமை - உயர்ந்த கருத்துக்கள் வெளிப்படுகின்றன ; அதாவது *விஷய வைலக்ஷண்யம்* - சம்சார பந்தத்திலே உழல்கிற ஜீவர்களுக்கு, பரமதங்களால் உண்டான ஹானிகளை நிரிஸித்து, ஸர்வேஸ்வரனின் ரக்ஷக ப்ரகாரத்தை தெளிவித்தபடியால், அந்த க்ரந்த விஷயத்துக்கு ஏற்றம் சொல்லப் படுகிறது.

# பாப நிவ்ருத்திக்காக பெரியோர்களை வணங்குவதும் ஸ்ரீவைஷ்ணவ இலக்கணம் ; இத்தை ப்ரமாணம் கொண்டு அறியலாம்.

***ரூக்ஷாக்ஷராணி ச்ருன்வன் வை ததா பாகவதேரி தான் ப்ரணாம பூர்வகம் க்ஷாந்த்யா யோ வதேத் வைஷ்ணவோ ஹி ஸ:***

என்கிறது சாஸ்த்ரம். அதாவது, 'ஒரு பாகவதன் தன்னை குறித்து கடுமையாகப் பேசினாலும், அவனை வணங்கியபடி நின்று , அவன் கோபத்திற்கு தான் இலக்கானதற்காக மன்னிப்பு கேட்பவனே உண்மையான ஸ்ரீவைஷ்ணவன் ஆவான்' என்பதாகும் .

# இதனால் தெளிய வேண்டுவது, ஸர்வேஸ்வரனை துதிக்கும் பொருட்டு வாழ்த்துவது *அஹங்காரம்* ஆகாது.

5. ஆக, வாழத்துவது ப்ரீதி கார்யம் ; ஜகத் காரணனான எம்பெருமானை *மங்களாசாஸனம்* பண்ணுவதும் ப்ரீதி கார்யமே ; அதில் பல ப்ரகாரங்கள் உள்ளன.

# பகவத் குணங்களை இட்டு அவன் மேன்மையை ஸ்லாகித்து *மங்களாசாஸனம்* செய்வது ஒரு ப்ரகாரம் ; இதனை, திருப்பாணாழ்வார்,

***அமலன் ஆதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன் நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிள் அரங்கத்தம்மான் திருக்கமல பாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே***

என அருளினார்.

அதாவது,

தூய்மையுடையவனாய், ஜகத்காரண பூதனாய், உபகாரகனாய், தாழ்ந்தவனான என்னை அடியாருக்கு ஆட்படுத்தியவனாய், திவ்ய தேஜசை உடையவனாய், நித்யசூரிகளுக்கு தலைவனாய், பரிமளம் மிக்க சோலைகளையுடைய திருவேங்கடமலைமீது தங்கியவனாய், ஆஸ்ரித பாரதந்த்ரனாய், அடியாருடைய குற்றங்களைக் பொருட்படுத்தாதவனாய், பரமபதத்துக்கு நிர்வாஹனாய், உயர்ந்த மதிள்களையுடைய கோயிலிலே கண்வளர்ந்தருளும் அழகிய மணவாளனுடைய திருவடித்தாமரைகள், தானே வந்து அடியேனுடைய கண்களில் புகுந்தது போலே இருக்கின்றன என்று *மங்களாசாசனம்* பண்ணுகிறார்.

# பகவத் அநுபங்களை இட்டு அதனால் உண்டாகும் பிரிவு ஆற்றமையால் *மங்களாசாஸனம்* செய்வது மற்றும் ஒரு ப்ரகாரம் ; இதன்னை, பெரியாழ்வார்,

***குருந்தம் ஒன்று ஒசித்தானோடும் சென்று கூடி ஆடி விழாச்செய்து திருந்து நால் மறையோர் இராப்பகல் ஏத்தி வாழ் திருக்கோட்டியூர் கருந்தட முகில் வண்ணனைக் கடைக்கொண்டு கை தொழும் பத்தர்கள் இருந்த ஊரில் இருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார் கொலோ***

என அருளினார்.

அதாவது,

எம்பெருமான் ஸ்வரூபங்களைப் பிழையறக் கூறுகையாகிற, நான்கு வேதங்களையும் கற்றறிந்த ஸ்ரீவைஷ்ணவர்கள், கண்ணின் சேஷ்டிதங்களான, ஒரு குருத்த மரத்தை முறித்தருளின (கம்ஸனால் ஏவப்பட்டவனமான ஒரு அஸுரன், கண்ணனை நலிவதற்காக அக்குருந்த மரத்தை ஆவேசித்துக் கிடந்தான்) விஷயங்களை அநுபவித்துக்கொண்டும், அவனை *மங்களாசாஸனம்* செய்துக் கொண்டும், இருக்கும் க்ஷேத்ரத்தில் வசிப்பவர்கள், என்ன தவம் செய்தார்களோ.

# திருமங்கை மன்னன் திருவிந்தளூர்ப் பெருமானைக் காண ஆசைப்பட்டு அது ஸித்தாயாமல் போக ஆழ்வாரின் வருத்தம், பகவத் ப்ரீதி அடங்காமல், வெளிப்படுகிறது ; 'உமது வடிவழகைக் காட்ட மறுத்த இந்தளூர் பெருமானே! உம் திருமேனியை நீரே கட்டிக்கொண்டு வாழ்ந்திடும்' என்று *மங்களாசாசனம்* செய்தார் ; அதாவது, திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழியில்

***ஆசை வழுவாது ஏத்தும் எமக்கு இங்கு இழுக்கு ஆய்த்து அடியோர்க்குத் தேசம் அறிய உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்குக் காசின் ஒளியில் திகழும் வண்ணம் காட்டீர் எம்பெருமான் வாசி வல்லீர் இந்தளூரீர் வாழ்ந்தே போம் நீரே***

என அருளினார்.

அதாவது,

இந்த க்ஷேத்திரத்திலே ஆசை குன்றாமல் துதிக்கின்ற எமக்கு இச்செயல் கெடுதலாய் வந்து முடிந்தது ; உலகமெல்லாம் அறியும்படியாக உமக்கே தொண்டராய்த் திரிகின்ற எமக்கு பொற்காசின் ஒளியைக் காட்டிலும் மிக உயர்ந்ததாக விளங்குகின்ற வடிவழகை காட்ட மறுக்கிறீரே இந்தளூர் எம்பெருமானே ! உம் பக்தர்களிடையே தாரதம்யம் பாராட்டுகின்றீர் ; உம்முடம்பை நீரே கட்டிக் கொண்டு வாழ்ந்துபோம். என *மங்களாசாஸனம்* செய்தார்.

# இதனால் தெளிய வேண்டுவது, ஸர்வேஸ்வரனை துதிக்கும் பொருட்டு வாழ்த்துவதும் நிந்திப்பதும் ப்ரீதி கார்யமே ; அது *அஹங்காரம்* ஆகாது.

6. பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு பாசுரத்தில், ப்ரீதி கார்யமாக, 'பெருமாளுக்கு பல்லாண்டு' என *மங்களாசாஸனம்* செய்தருள்கிறார்.

***எந்நாள் எம்பெருமான் உன்தனக்கு அடியோம் என்று எழுத்துப் பட்ட அந்நாளே அடியோங்கள் அடிக்குடில் வீடு பெற்று உய்ந்தது காண் செந்நாள் தோற்றித் திருமதுரையுள் சிலை குனித்து ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே உன்னைப் பல்லாண்டு கூறுதுமே***

அதாவது,

ஸ்வாமிந்! தேவரீர்க்கு நாங்கள் சேஷ பூதர்கள் என்று எங்களுடைய வாயில் சொற்கள் உண்டாகப் பெற்ற நாள் எந்த தினமோ, அந்த தினம் முதலாகவே அடியோங்களுடைய ஔபாதிக சேஷ வஸ்துக்கள் நல்ல கதியையடைந்து உஜ்ஜீவித்துவிட்டது ; நல்ல நக்ஷத்திரத்திலே திருவவதரித்து அழகிய வடமதுரையிலே கம்ஸனை முறித்து ஐந்து தலைகளையுடய காளிய நாகத்தினுடைய தலைமேலே குதித்தவனே! தேவரீருக்கு 'பல்லாண்டு' என மங்களாசாஸனம் செய்வோம்.

இந்த *பல்லாண்டு மங்களாசாஸனம்* ப்ரீதியினால் ஸித்திக்கிறது ; இதில் ஸ்வரூப விரோதம் எதுவும் அற்றமையால் இதில், *அஹங்கார கர்பம்* என்பது முற்றிலும் அநுபபன்னம்.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

******

15.8.2023
செவ்வாய் கிழமை

***கருணையில் சிறந்தவர் எம்பெருமானா, பிராட்டியா, ஆசார்யனா? - விவாத மேடை தொடர் கேள்வி***

1. சாஸ்த்திரங்களானது, பகவத் காருண்யத்தை, விசதாமக உரைக்கிறது.

# பகவத் ராமாநுஜர், சரணாகதி கத்யத்தில்,

***அகில ஹேய ப்ரத்ய நீக கல்யாணைகதாந ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷண***

என அருளி இருக்கிறார் ; அதாவது, விலக்ஷணமான கல்யாண குணங்களை உடையவன் எம்பெருமான்

# பாஞ்சராத்ர சாஸ்த்திரமும்,

***ஸர்வக்ஞோபி ஹி விஸ்வேஸ: ஸதா காருணிகோபி ஸந். சம்சார தந்த்ர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே***

என்கிறது ; அதாவது, எம்பெருமான் எல்லாம் அறிந்தவனாயும், பரம காருணிகனாக இருந்த போதிலும், ரக்ஷிக்க வேண்டும் என்கிற ப்ரார்த்தனையை எதிர் பார்க்கிறான், என்பதாயிற்று.

# எம்பெருமானின் ஆஸ்ருத பாரபக்ஷித்தை விளக்க வந்த ஒரு பாசுரம்.

***தன்னடியார் திறத்தகத்து தாமரையாள் ஆகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார்; செய்தாறேல் நன்று செய்தார் என்பர் போலும் மன்னுடைய விபீடண ற்கா மதில் இலங்கை திசை நோக்கி மலர் கண் வாய்த்த என்னுடைய திருவரங்கற்கன்றியும், மற்றொருவருக்கு ஆள் ஆவாரே***

என்ற பெரியாழ்வார் திருமொழி.

தன்னிடம் சரணாகதி அநுஷ்டித்தவர்களை, பெரிய பிராட்டியாரே குற்றம் கூறினாலும், அதை ஏற்று எம்பெருமான், தன் அடியார்களை கை விடமாட்டான் என்று விளக்குவதாக அமைந்த பாசுரம். இது **அக்ஞாத நிக்ரஹை** என போற்றப்படும் பிராட்டியின் ப்ரபாவத்தை குறைப்பது நோக்கமன்று ; எம்பெருமானின் காருண்யத்தின் ஏற்றத்தை சொல்ல வந்தது. இது கைமுதிக ந்யாய ஸித்தம்.

கீழே உதிக்கும் சூரியன் மேல் உதித்தாலும் உதிக்கலாம் ; சக்ரவர்த்தி திருமகன் உண்மை மாறி பேசுவது எப்படி ஸாத்யமாகலாம்.... என்பது போன்றது ***தாமரையாள் ஆகிலும் சிதகுரைக்குமேல்*** ; இங்கு கீழே உதிக்கும் சூரியன் மேல் உதிக்காது என்பது ஸித்தமோ, அது போல ஸர்வருக்கும் தாயான தாமரையாள் சிதகுரைக்க மாட்டாள் என்பதுவும் ஸித்தம்.

# ச்வேதாசுதர உபநிஷத்தில்,

***ஸர்வேந்த்ரிய குணாபாஸாம் ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம் ஸர்வஸ்ய ப்ரபுமீசானாம் ஸர்வஸ்தம் சரணம் ஸுக்ருத்***

என்கிறது, அதாவது

கருணைமிக்க ஸர்வேஸ்வரன் அனைவராலும் சரணம் புக ஏற்றவனாக உள்ளான்.

# அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வரியாவது,

*த்வமேவ உபாய பூதோ மே பவ இதி ப்ரார்த்தனா மதி: சரணாகதி ரித்யுக்தா ஸா தேவேஸ்மின் ப்ரயுஜ்யதாம்*

அதாவது, நீ எனக்கு உபாயமாக வேண்டும் என்கிற ப்ரார்த்திப்பது தான் சரணாகதி. இதை ஸர்வேஸ்வரனிடத்தில் செய்ய வேண்டும். இதனை, *த்வயாதிகாரத்தில்* ஸ்வாமி தேசிகன் விளக்குகிறார் :

*என் தலையில் உபாயாந்தரத்தை சுமத்தாதே. அவற்றைச் சுமந்தால் மேல் வரும் அபிமதமெல்லாம் தருகை ஸமர்த்த காருணிகனான உனக்கே பரமாக ஏறிட்டுக் கொள்ள வேண்டும்*

2. நிஷ்க்ருபனுடைய ஸ்வாதந்த்ரியம் பாதகம் ; அஸ்வதந்த்ரனுடைய காருண்யம் அநுபகாரகம் ; ஆக, பரத்வம் மற்றும் ஸௌலப்யம் உடைய எம்பெருமான் ஸர்வ ரக்ஷகன்.

# ஆக, ஸ்வாமி தேசிகனின் ரஹஸ்ய ரத்நாவளியில்,

*ஸ்ரீ மானான நாராயணன் ஒருவனே சர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம்*

என அருளினார்.

# சரணாகதி சாஸ்த்திரத்தை விளக்க வந்த ஸ்ரீமத் ராமாயணத்தில், விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில், சரண்ய க்ருத்யத்தை, சக்ரவர்த்தி திருமகன் விளக்குகிறான் ; சரண்யனுக்கு தேவையான பரத்வம் மற்றும் ஸௌலப்யம் உடையவன் என்பது தெளிவிக்கப் படுகிறது.

*பிஷாஷான் தானவான் யக்ஷான் ப்ருதிவ்யான் சைவ ராக்ஷஸான். அங்குள் அக்ரேந தான் அன்யன் இச்சன் ஹரிகணேஸ்வர*

அதாவது, 'வானர தலைவனே! வந்தவன் யாராக (யக்ஷனாகவோ, தேவனாகவோ, ராக்ஷஸனாகவோ) இருந்தாலும் சரி, அவர்களால் துன்பம் வர நேர்ந்தாலும், அவர்களை விரல் நகத்தினாலேயே அழித்து என்னை நான் காத்துக் கொள்ள முடியும்'. இங்கே *பரத்வம்* தெளிவிக்கப் படுகிறது.

*மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதௌ*

அதாவது, 'தோழனாக வேடம் தரித்து ஒருவன் என்னிடம் வந்தால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்'. இங்கே *ஸௌலப்யம்* தெளிவிக்கப் படுகிறது.

*ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதிச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி யேதத் வ்ரதம் மம*

அதாவது, 'என்னிடம் ஒரு முறை, 'நான் உன்னுடையவன்' என்று ஒருவன் சரண் புகுந்துவிட்டால், அவனை காத்தருள்வது எனது வ்ரதம்'. இங்கே *சரண்ய க்ருத்யம்* தெளிவிக்கப் படுகின்றன.

*அனயனம் ஹரி ஸ்ரேஷ்ட தத்தமஸ்யாம் அபயம் மயா. விபீஷணோவா ஸுக்ரீவ யதிவா ராவணஸ்வயம்*

அதாவது, ' வானர தலைவனே! விபீஷணனை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன் எனக் கூறு. நீ விபீஷணனை சந்திக்கும் தருணத்தில், அங்கு ராவணன், மனம் மாறி வந்திருந்தானேயானால், அவனையும்

நான் மன்னித்து ஏற்றுக் கொண்டதாக கூறுவாயாக'. இவ்வாறு ஸ்ரீராமன் பதிலளித்தான். இங்கே *ஸௌலப்யம்* தெளிவிக்கப் படுகிறது.

# ஆக, ***க்ருஷிவலம் திநௌதி*** என்ற கணக்கிலே, விவசாயி பயிரிட்டு அறுவடைக்கு காத்திருப்பது போல, எம்பெருமான் சரீரத்தையும் சாஸ்த்திரத்தையும் சம்சாரி ஜீவர்களுக்கு கொடுத்து அவர்கள் மோக்ஷம் பெற சரணாகதி அநுஷ்டிக்க காத்திருக்கிறான் என்பதாகிறது.

3. இப்படிப்பட்ட காருணிகனான எம்பெருமானுக்கு நிக்ரஹ ஸங்கல்பமும் உண்டு என்பதுவும் ப்ரமாண ஸித்தம் :

# ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீ ரஹஸ்ய ரத்நாவளி வரி :

***இவளைப் புருஷாகாரமாக்க வேண்டுவது ஈஸ்வரன் தண்ட தரனாகையாலே***

ஆக, பரம காருணிகனான ஈஸ்வரனுக்கு நிக்ரஹ ஸங்கல்பமும் உண்டு.

# ஸர்வேஸ்வரனான கண்ணன், சாஸ்த்திர விரோதமாக செயல்படும் அசுர குணம் உடையவனுக்கு ஏற்படும் கதி என்ன என்று பகவத் கீதையில் (16-19) உறுதி படுத்துகிறான்.

***தானஹம் த்விஷத: க்ரூரான் சம்சாரேஷு நராதமான். க்ஷிபாம்யஜஸ்ரம் அசுபான் ஆஸுரீஷ்வேவ யோனிஷு***

அதாவது,

'என்னிடம் த்வேஷம் உள்ளவர்கள், என்னை பற்றி சிந்திக்காமல் சம்சார ஸுகத்தில் மட்டும் ஈடுபடுபவர்களை நான் கடுமையாகத் தண்டிக்கிறேன், அசுர யோனியில் பிறக்க செய்கிறேன்.'

# வராஹ புராணத்தில், ஸர்வேஸ்வரன் ருத்ரனிடம் கூறுவதாவது,

***த்வம் ஹி ருத்ர மஹாபாஹோ மோஹ சாஸ்த்ராணி காரய தர்ஷயித்வா அல்பமாயாஸாம் பலம் சீக்ரம் ப்ரதர்சய***

ருத்ரனே ! நீ ஜனங்களுக்கு மோஹம் உண்டாகும் படியான (உண்மையான ஸர்வவேஸ்வரனை உணர முடியாதவாறு) சாஸ்த்திரங்களைச் செய்; அல்பமான செயல்களுக்கு உலக பலன்களை கிடைப்பதற்கு வழி காட்டு.

அதாவது பாபாத்மாவை தண்டிக்கும் பொருட்டு, மோஹன சாஸ்த்திரங்கள் வெளியாகின்றன.

ஆக. நிக்ரஹ ஸங்கல்பத்தோடு கூடிய அநுக்ரஹ ஸங்கல்மே ஈஸ்வரனுடைய க்ருத்யமாகிறது.

3. இவ்விஷயத்தில், ***அக்ஞாத நிக்ரஹையான*** பிராட்டியின் கருணையின் ஏற்றத்தை, ஸ்ரீமத் ராமாயண சம்பவம் கொண்டு உதாஹரிக்கலாம்.

# ஸ்ரீராம ராவண யுத்தத்திற்கு பிறகு, சினம் கொண்ட அநுமான், ஸீதா பிராட்டியை முன்பு துன்புறுத்திய அரக்கிகளை அழிக்க முன் வருகிறான்.

அப்போது, அந்த அரக்கிகளிடமும் க்ஷமா புத்தி கொண்டு,

***மர்ஷயாமீஹ துர்பலா***

அவர்களின் தவறுகளை நான் பொறுக்கிறேன்.

*__பாபானாம் வா சுபானாம் வா வதார்ஹாணாம் ப்ளவங்கம கார்யம் கருணம் ஆர்யேண ந கஸ்சித் நாபராத்யதி__*

பாபம் பண்ணவர்களோ, நல்லவர்ளோ, வதம் பண்ணக் கூடிய அளவுக்குத் தப்பு பண்ணினவர்களோ, யாராக இருந்தாலும் மன்னிக்க வேண்டும். ஒரு தப்புக் கூடப் பண்ணாதவன் யாருமே கிடையாது, அபராதமே செய்யாதவன், ஒருத்தனுமே கிடையாது. அதனால, கருணையோட இருக்க வேணும், தப்பை மன்னிக்க வேணும்.

என அருளினாள் ஸீதை.

அதாவது, தன்னை தூஷிப்பவர்களிடமும் கருணை காட்டுவது, பிராட்டிக்கு உண்டான ஏற்றம்.

# ஆனால், பிராட்டிக்கு நிக்ரஹ ஸங்கல்பம் உண்டோ எனில்,

# ஸீதா பிராட்டி, ராவணுக்கு ஹிதத்தை உபதேசித்த பிறகு சீற்றம் கொண்டாள் :

*__விதித ஸ ஹி தர்மக்ஞ: ஶரணாகதி வத்ஸல: தேந மைத்ரீ பவத் தே யதி ஜீவிதும் இச்சஸி__*

என்று செய்த தவற்றை உணர்ந்து ஶ்ரீராமனை தோழமையாக அணுக உபதேசிக்கிறாள் ராவணனிடம் ஸீதை.

அதனை அவன் ஏற்காத போது,

*__அஸந்தேஷாது ராமஸ்ய தபஸ்ச அநுபாலனாத். ந த்வா குர்மி தஸக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹ தேஜஸா__*

என்று தன் பாதிவ்ருத்யத்தினால், ராவணனை அழிக்க ஸமர்த்தள், என்கிறாள். இது நிக்ரஹ ஸங்கல்ப விஷயமாகிறது. மேலும், அவள்

*__சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்கா பரபலார்தன: மா நயேத்யதி காகுஸ்த தத் தஸ்ய ஸத்ருஷம் பவேத்__*

என்கிறாள் ; அதாவது, ஶ்ரீராமன் லங்கையை முற்றுகையிட்டு, ராவண வதம் செய்து, ஸீதையை கைப்பற்றுவதை, ஶ்ரீராமனின் பராக்ரமத்துக்கு ஸத்ருசமான காரியம் என உணர்த்துகிறாள் அவள். இதுவும் அவளது நிக்ரஹ ஸங்கல்ப விஷயமாகிறது.

4. அந்த பரம காருணிகனான எம்பெருமானை, கோதை நாச்சியாரால், வர்ணிக்கப் படுவது என்னவெனில்,

*__கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சிப் பழகிக் கிடப்பேனைப் புண்ணிற் புளிப்பு எய்தாற் போலப் புறம் நின்று அழகு பேசாதே பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான் அரையில் பீதக வண்ண வாடை கொண்டு என்னை வாட்டம் என்னை வாட்டம் தணிய வீசீரே__*

இங்கே *__பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான்__* என்று அவனது குணத்தை, தன் பிரிவாற்றாமையால், நிந்திக்கிறாள்.

ஆனால் இதற்கு ஸ்வாபதேச அர்த்தமானது, ஜீவ தத்வத்தின் ( *__பெண்ணின்__* ) பகவந் நிக்ரஹ அநிஷ்ட பல அநுபவமானது ( *__வருத்தம்__* ) ஈஸ்வர தத்வத்துக்கு அநுபவ பூர்வகமாகக் கிடையாது ( *__அறியாத பெருமான்__* ) ; ஶ்ரீமத் ராமாயண ஸ்லோகம்:

*__வ்யஸநேஷூ மனுஷ்யாணாம் ப்ருஷம் பவதி துக்கித:__*

அதாவது, மனிதர்களின் துக்கத்தைக் கண்டு ஸ்ரீராமனும் துக்கம் கொண்டவனாகிறான்.

இதற்கு விளக்கம், ஸ்வாமி தேசிகன் ***ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்***

***ஆகையால், அவதார வ்ருத்தாந்தங்களிலும், துக்க அபிநய மாத்திரமே உள்ளது***

என அருளினார்.

அதனால், பகவத் கீதையில் கண்ணன் அருளும் ***அநித்யம் அஸுகம் லோகம்*** என்பது அவனுக்கு ஸர்வக்ஞத்வத்தால் ஸித்திக்கிறதாகிறது.

ஆக, கர்ம அநுகுண பல ப்ரத ஈஸ்வர தத்வமான திவ்ய தம்பதிகளுக்கு, நிக்ரஹ ஸங்கல்பம் மற்றும் அநுக்ரஹ ஸங்கல்பம் இரண்டும் உண்டு ;

ஆனால், ஆத்ம விஷயத்தை உபதேசிக்கும் ஆசார்யனும், உபதேசம் பெறும் சிஷ்யனும் ஜீவ தத்வமே ! ஆனபடியால், அந்த ஸதாசார்யனுக்கு நிக்ரஹ ஸங்கல்பம் அற்ற அநுக்ரஹ ஸங்கல்பம் மட்டுமே சிஷ்யர்களிடம் கொண்டவர்கள் ஆகிறார்கள்.

# ஆக, ஒரு ஸதாசார்யன், சிஷ்ய குண பூர்த்தி உள்ளவனை தேர்வு செய்து, ஞான ப்ரதானம் செய்வது, சிஷ்யன் பால் அவனுடைய க்ருபா கார்யமே ; சிஷ்ய குண பூர்த்தி கொண்டவனை தேர்ந்தெடுக்க ஆசார்யன் முயற்சிக்க விதி இருக்கிறது ; சாண்டில்ய ஸம்ருதியில் கூறப் படுவதாவது,

***ஸம்வத்ஸரம் ததர்தம் வா மாஸத்ரயமதாபி வா பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நி:ஸ்ப்ருஹோ வேதத்***

அதாவது

ஆசார்யனாவன், ஸத் சிஷ்யனை ஒரு வருஷமோ ஆறு மாதமோ மூன்று மாதமோ பற்பல வகைகளில் சோதனை செய்து, சிஷ்யனின் நிஷ்டையை அறிந்து, தனக்கு ஒரு லாபத்தையும் எதிர் பார்பாமல் கருணையோடு உபதேசிக்க வேண்டும்.

ஆனால், இதற்கு விதி விலக்கு ஸாத்வத ஸம்ஹிதையில் அருளப் பட்டுள்ளது.

***யத்ருச்சயா உபாஸன்னானாம் தேசாந்தர நிவாஸானாம் இஷ்ட உபதேச: கர்தவ்யோ நாராயண ரதாத்மனாம்***

அதாவது,

ஸ்ரீமந் நாராயணனே பர தெய்வம் என்கிற தெளிந்த ஞானமுடையவன், தூர தேசத்தில் வசிப்பவர்களாய் இருப்பானாகில், அவன் தற்செயலாக சந்தித்தாலும் உபதேசம் பெற அர்ஹனாகிறான்.

ஆக, ஸத் ஸம்ப்ரதாயத்தில், திருவஷ்டாக்ஷர  உபதேசம் பெற்றடவர்களே (பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து கொண்டவர்களே) காலக்ஷேப உபதேசங்களுக்கு அர்ஹராகிறார்கள்.

# ஸ்வாமி தேசிகனின் அதிகார ஸங்க்ரஹ பாசுரம், ஆசார்யனின் கருணையை விளக்குகிறது :

***ஆளும் அடைக்கலம் என்று எமை அம்புயத்தாள் கணவன் தாள் இனி சேர்ந்து எமக்கும் அவை தந்த தகவு உடையார் மூளும் இருட்கள் விள முயன்று ஓதிய மூன்றின் உள்ளம் நாளும் உகக்க இங்கே நமக்கு ஓர் விதி வாய்க்கின்றதே***

அதாவது,

*எமக்கும் அவை தந்த தகவு உடையார்* என்கிறபடி ஸதாசார்யர்கள், திவ்ய தம்பதிகளின் திருவடிகளே பரம புருஷார்த்த த்துக்கான உபாயம் எனக் காண்ணி கொடுத்த காருணிகர்கள். நிக்ரஹ ஸங்கல்பம் முற்றிலும் அற்றவர்கள்.

# ஞான ப்ரதானம் செய்யும் ஆசார்ய லக்ஷணம், ஸ்வாமி தேசிகனால் விளக்கப் பட்டது :

***ஸ்ப்ரத்தா விப்லவ விப்ரலம்ப பதவீ வைதேசிகா தேசிகா:***

மூன்று குணங்கள் இல்லாது இருக்க வேண்டிய ஆசார்ய தன்மைகளாவது:

***ஸ்ப்ரத்தா*** - நாம் படித்தவர்கள் என்பதால் மற்றவர்களை அவமானப் படுத்துவதில் விருப்பம்

***விப்லவ*** - பூர்வாசார்யர்கள் அளித்த விளக்கங்களை மாற்றி அமைத்து ஸத் ஸம்ப்ரதாயத்தை அழிப்பது

***விப்ரலம்ப பதவி*** - தன் சிஷ்யர்களை ஏமாற்றும் எண்ணத்தோடு தன் பாண்டித்யத்தினால் சாஸ்த்திர விஷயங்களில் திசை திருப்புவது

# இவ்விஷயத்தில், ஸ்வாமி தேசிகனின் ***ஸித்தோபாய சோதனாதிகார*** வரி :

***ஸத்ஸம்ப்ரதாய ஸித்தியாவது தான் ஸத்வோத்தரனாய் ஸம்யக் உபஸந்நனாய் ஸாவதாநனாய் இருக்கும் அவஸ்தையிலே க்யாதி-லாப-பூஜா-நிரபேக்ஷனாய் காருண்ய- பரதந்ரனான ஸதாசாயன் ஸர்வருக்கும் ப்ரதாமாசார்யனான ஸர்வேஸ்வரன்  முதலாக உபேதச பரம்பரையாலே வந்த தத்வ ஹிதங்களை அநபேக்ஷித-விஸ்தரமும் அபேக்ஷித- ஸங்கோசமும் இல்லாத படி...உபேதசிக பெறுகை***

சிஷ்ய லக்ஷணம் ;

***தான் ஸத்வோத்தரனாய்***- ஸத்வ குணம் மேலிட்டவனாய்

***ஸம்யக் உபஸந்நனாய்*** - ஆசார்ய பக்தி கொண்டவனாய்

***ஸாவதாநனாய் இருக்கும் அவஸ்தையிலே*** - ஆசார்ய உபதேசத்தை கவனமாக க்ரஹிப்பவனாக இருக்க வேண்டும்.

ஆசார்ய லக்ஷணம் :

***க்யாதி-லாப-பூஜா-நிரபேக்ஷனாய்*** - பணம், பட்டம், பதவி முதலிய லௌகீக அபேக்ஷை அற்று

***காருண்ய- பரதந்ரனான ஸதாசார்யன்*** - சிஷ்யர்களிடம் உள்ள கருணையால் பூர்வர்கள் வழி மீறாத காலக்ஷேப விஷய தானத்தில் அந்வயிக்கும் ஆசார்யன், என்றபடி

***ஸர்வருக்கும் ப்ரதம ஆசார்யனான ஸர்வேஸ்வரன்  முதலாக உபேதச பரம்பரையாலே வந்த*** - லக்ஷ்மி நாதனிடம் தொடங்கி, குருகூர் சடகோபன் வழி வந்த நாதமுனி, யாமுனமுனி, ராமானுஜ முனிகளின் க்ரந்த விவரணங்களின் படி

***தத்வ ஹிதங்களை*** - சாஸ்த்திரத்தால் தெளிய வேண்டிய ஸ்வ ஸ்வரூபத்தையும், பகவத் ஸ்வரூபத்தையும், அதன் அடியாக அநுஷ்டிக்க வேண்டிய ஸாத்யோபாயத்தையும், குற்றமற்ற முறையிலே தெளிய

***அநபேக்ஷித-விஸ்தரமும் அபேக்ஷித- ஸங்கோசமும் இல்லாத படி*** -  தேவை அற்ற உதாரணங்கள் ஹாஸ்யங்கள் விளக்கங்கள் போன்றவற்றையும் தவிர்த்து, சம்சயங்கள் நீங்குகிற அளவிற்கு விளக்கி

*__உபதேசிக்கப் பெறுகை__* **-** அதாவது, தேவையற்ற விரிவையும் தேவையுள்ள விஷயத்தில் விரிவு கூறாமையும் சிஷ்யர்கள் சரியாக புரிந்து கொள்ள முடியாதபடி இருப்பதை கை விட்டு உபதேசிப்பவர்கள், காலக்ஷேபத்தில் விஷய தானம் பண்ண அர்ஹர்கள் என்றபடி.

# ஆனால், ஞானத்தில் சிஷ்யர்களுக்கு உள்ள ஞான வேறுபாடு ஆசார்ய பக்தி குறைவினால் உண்டாகிறது என்பதனை ஸ்வாமி தேசிகன் குருபரம்பரா சாரத்தில் வெளியிட்டிருக்கிறார் ; *__சேஷ ஸம்ஹிதா__* வாக்யம்

*__குரும் ப்ரகாசயேத் தீமான் மந்த்ரம் யத்னேன கோபயேத் அப்ரகாச ப்ரகாசாப்யாம் க்ஷீயதே ஸம்பதாயுஷீ__*

என்கிறது.

அதாவது, குருவை பலர் அறிய ப்ரகாசப் படுத்த வேண்டும். அவர் கற்றுவித்த மந்தரங்களை அனைவரிடமிருந்தும் மறைக்கப் பட வேண்டும்.

ஆசார்யனை ப்ரகாசப் படுத்தாமல் இருப்பதாலும் அல்லது மந்தரங்களை ரஹஸ்யமாக பாதுகாக்காமல் பலரிடம் கூறுவதாலும், ஸம்பத்தும் ஆயுஸும் குறைந்து போகும். ஞான ஸம்பத்தும், மந்தர நிஷ்டையும் குறைந்து போகும் எனபதாயிற்று.

# ஆசார்யர்கள் பலர் உள்ளனர் : ப்ருஹ்மோபதேசம் செய்துவிக்கும் ஆசார்யன் ; வேத அத்யயனம் செய்தருளும் ஆசார்யன் ; பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துவிக்கும் ஆசார்யன் ; சாமான்ய சாஸ்த்திர காலக்ஷேப ஆசார்யன் ; சாரீரக சாஸ்த்திர காலக்ஷேப ஆசார்யன் ;

சாரீரக சாஸ்த்திர ஞான ப்ரதானம் செய்து போகும் ஸதாசார்யன் மேன்மை குறித்து, ஸ்வாமி தேசிகனின் *__சிஷ்ய க்ருத்யாதிகார__* வரி :

*__ஸாக்ஷாத் முக்தே: உபாயாந் ய: வித்யா பேதேன உபாதிசத் கத்யதே மோக்ஷ சாஸ்த்ரேஷு ஸ து ஸ்ரேஷ்ட தமோ குரு:__*

அதாவது, அனைத்து ஆசார்யர்களுமே ஏற்றமுள்ளவர்களாயினும், *__ஸ்ரேஷ்ட தமோ குரு:__* (குரு ஸ்ரேஷ்டர்) என்று ஞான ப்ரதானம் செய்தருளும் ஆசார்யனுக்கு உயர்த்தி சொல்லப் பட்டதாகிறது.

# ஸ்வாமி தேசிகனின் வரிகளைக் கொண்டு பார்த்தால், ஆசார்யனின் கருணைக்கு ப்ரத்யுபகாரம் ஒன்றும் கிடையாது என்பது தெளிவாகும்.

*__ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை இருளனைத்தும், மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனும் காணகில்லான், போற்றியுகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்குபுகழ், சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே__*

அதாவது,

'ஆத்ம விஷயத்தில், சந்தேகத்துக்கு உறியனவாயும் தவறானதாயும் இருந்து வந்த, நமது ஞான குறைபாடுகளை அகற்றி, சாஸ்த்ரத்தில் உள்ளபடி, பிழையற ஞான விளக்கை நம்முள் ஏற்றி வைத்து, பல பிறவிகளாக துக்க மூலமான சம்சார கடலில் சிக்கித் தவிக்கும் நம்மை அதிலிருந்து விடுபட உதவிய நம் ஆசார்யர்களின் உதவிக்கு என்ன கைம்மாறு (பதில் உதவி) செய்ய முடியும் என எம்பெருமானும் அறிவதில்லை. அந்த ஆசார்யர்களைப் போற்றி உகப்பதும் எப்போதும் நினைவில் கொள்வதுமே நாம் செய்யக் கூடிய ஒரு சிறு தொண்டு'.

ஆக, ஆசார்யன் விஷயத்தில் நன்றி அறிதல் மிக மிக அவசியம். அதுவும், உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

ஆக, கருணையில் சிறந்தவர் எம்பெருமானா, பிராட்டியா, ஆசார்யனா என்னும் போது, ஆசார்யனின் கருணைக்கு பகவானாலேயே கைம்மாறு காண இயலாது, என்னும் போது, அந்த ஆசார்ய கருணை ஈடு இணை அற்றது, என்றாகிறது ; அதிலும், ***கத்யதே மோக்ஷ சாஸ்த்ரேஷு ஸ து ஸ்ரேஷ்ட தமோ குரு:*** என்கிறபடி சாரீரக சாஸ்த்திர ஞான ப்ரதானம் செய்து போகும் ஸதாசார்யன், ஜீவர்களின் சம்சார பந்தத்தைக் களைய உபஹரிப்பதால், அவரே மேன்மை வாய்ந்தவராகிறார்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

16.8.2023
புதன் கிழமை

***புத்தியில் ஸ்வ பர வ்யவஹாரம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. ஜீவ ஈஸ்வர ஸ்வாபாவிக லக்ஷணம் :

***சேதநத்வம்*** - ஞான ஆஸ்ரயமாய் இருக்கை

***ஏகத்வம்*** - பன்மை அற்ற ஒருமை

***ப்ரத்யக்த்வம்*** - தனக்கு தான் தோற்றுகை

***அநுகூலத்வம்*** - ஸகலமும் அநுகூலமாக இருப்பது ; இதனால் ***ஸ்வாபாவிக ஆனந்தத்வம்*** ஸித்திக்கிறது.

ஜீவ லக்ஷணம் பல ப்ரகாரங்களில் சாஸ்த்திரங்கள் விளக்குகின்றன :

# ஸ்வாமி தேசிகன் ***தத்வ த்ரய சிந்தனாதிகாரத்தில்*** அருளியுள்ளார் :

***ஆகையால், ஜீவ ஸ்வரூபத்தை ஞானத்வம், ஆனந்தத்வம், அமலத்வம், அணுத்வம் இத்யாதிகளான நிரூபக தர்மங்களையிட்டு நிரூபித்து ஞானம், ஆனந்தம், அமலம் அணு என்று இம்முங்களாலே சொல்லக்கடவது***

# சம்சாரி ஜீவர்களின் நிலையை, சாஸ்த்திரங்கள், ***பஞ்ச கோசங்கள்*** என்கிறது ; அதாவது ***கோசம்*** என்கிற பதம் உறை எனப் பொருள் கொண்டது ; அதாவது, உள் அடக்கியது ;

உதாரணமாக, ***ஶ்ரீகோசம்*** ஞான செல்வத்தை உள் அடக்கியது புத்தகம் என்பது போல ; பட்டர் அருளியது ***ஶ்ரீ குண ரத்ன கோசம்*** - பிராட்டியின் குணங்களை உள் அடக்கியது.

இது ஶ்ரீ பாஷ்ய ***ஆனந்த மயாதிகரணத்தின்*** விஷயம்.

***அன்ன மய கோசம்*** (உடலுக்கும், வாழ்வுக்கும் உணவின் முக்கியத்துவதை உணர்த்துவதே ‘அன்னமய கோசம்’ ஆகும்)

*ப்ராண மய கோசம்* (இந்த காற்றின் இயக்கத்தினால்தான், உடலின் அனைத்து உறுப்புகளும் சுதந்திரமாக இயங்குகின்றன. காற்றின் மூலம் செயலாற்றும் புலன்கள், உயிர் வாழ்வதற்கு அவசியமான உள் உறுப்புகள், அவற்றின் இயக்கங்கள் ஆகியவை 'பிராணமய கோசம்' என்று சொல்லப்படுகின்றன)

*மனோமய கோசம்* (மனித உணர்வுகளுக்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவது, மனம். அந்த மனதின் பல்வேறு அடுக்குகள், அவற்றின் செயல்பாடுகள் ஆகியவையே 'மனோமய கோசம்' என்று வகைப்படுத்தப்படுகின்றது)

*விக்ஞான மய கோசம்* (அறிவு சார்ந்த இயல்புகளும், செயல்பாடுகளும் அடங்கிய இடமே, 'விக்ஞானமய கோசம்' எனப்படுகிறது)

*ஆனந்தமய கோசம்* (மேற்கண்ட நான்கு அடுக்குகளுக்கும் அப்பாற்பட்டு இருக்கும் ஒரு நிலையே, 'ஆனந்தமய கோசம்' ஆகும். மற்ற நான்கு கோசங்களையும், நாம் உணரவோ, அறியவோ முடியும். ஆனால் ஆனந்தமய கோசம் என்பது நம்முடைய புலன் அறிவுக்கு அப்பாற்பட்டது)

2. தத்வ சாகர ஸம்ஹிதையில் விளக்கப் படுவதாவது :

*ஆத்மா ஸ து மகாரோயம் பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித:*

இந்த *ம* கார வாச்யனனான ஜீவனை ப்ரமாணம் 25வது தத்வம் என்கிறது.

# மகார வாச்யனான ஜீவ லக்ஷணம் அதனுடைய தாதுக்களால் அறியலாம்:

*ம* காரத்தின் தாதுக்காளாலே

*மன ஞானே* - என்பதால் ஞானமாய் இருப்பது

*மன அவபோதனே* - என்பதால் ஞானத்தை குணமாய் உடையது

*மஸ பரிமாணே* - என்பதால் அணு ஸ்வரூபன்

என்பதாகும்.

# ஞானம் என்பது என்ன?

*ஞானம்* என்கிற அறிவு என்பதன் பத விளக்கம் :

*கஸ்யசித் ப்ரகாசகத்வம்*, அதாவது தன்னுடையவாகவுமாம் வேறொன்றினுடையவாகவுமாம் ஏதேனுமொன்றினுடைய வ்யவஹார அநுகுண்யத்தை பண்ணுகை. அதாவது, தெளிவு படுத்துகை.

ஆக, *ஞானம்* / அறிவு எனும் போது,

யாருடைய ஞானம் / அறிவு ?

எதைப் பற்றிய ஞானம் / அறிவு ?

# *ஞானமாய் இருப்பது* என்றால் 'தன்னை தான் அறியும் சக்தி உடையது' என பொருள்.

சாஸ்த்ரம் இதை *தர்மி ஞானம்* என்கிறது. ஒவ்வொரு ஜீவனும் தன் *தர்மி ஞானத்தால்* தன்னைத் தான் எப்போதும் இடைவிடாது அறிகிறான். தூங்கும் காலத்திலும் தன்னை அறிகிறான். அதனால் தான், தூக்க

காலத்தில் புலன்கள் அனைத்தும் இயங்காத நிலையிலும், விழித்தவுடன் ***நான் நன்றாக தூங்கினேன்*** என்று உணர முடிகிறது.

இப்படி ஒவ்வொரு ஜீவனும் ஞானமாய் இருக்கிறான். ஆக, ***தர்மி ஞானம்*** சேதநர்களின் இருப்பை, எல்லா காலத்திலும் வேறு ஒரு ஞானத்தின் அபேக்ஷை இன்றி, வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது. அதானல், ***தர்மி ஞானம் ஸ்வயம் ப்ரகாசம்***

# ***ஞானத்தை குணமாக உடையது*** என்றால், தன்னைத் தவிர்த்த பிற வஸ்துக்களை அறியும் சக்தி உடையது என்று பொருள்.

சாஸ்த்ரம் இதை ***தர்ம பூத ஞானம்*** என்கிறது. தன்னை தவிர்த்த பிற வஸ்துக்களை தன்னுடைய ***தர்ம பூத ஞானத்தினால்***, ஒவ்வொரு ஜீவனும் அறிகிறான்.

அதை இந்த ஜீவன், இந்த ப்ராக்ருத லோகத்தில், தன் புலன்களால் உணர்கிறான். முக்த தசையில் ***கரண சாபேக்ஷதை*** கிடையாது. ஆக, இந்த தர்ம பூத ஞானத்திற்கு மலர்ச்சி மற்றும் சுருங்குதல் இயல்பு.

பத்த தசையில், தூங்கும் காலத்தில் இந்த தர்ம பூத ஞானம் எதையும் வெளிப் படுத்துவதில்லை. ***அறிவாளி*** மற்றும் ***அறிவற்றவன்*** என்ற சொற்கள் ***தர்ம பூத ஞானத்தில்*** ஏற்படும் மலர்ச்சி மற்றும் சுருங்குதல் காரணமாகவே ஏற்படுகிறது. இந்த ***தர்ம பூத ஞானத்தில்*** ஏற்படும் மலர்ச்சி மற்றும் சுருங்குதல் போன்ற வேறுபாட்டிற்கு காரணம், கர்மாவின் அடிப்படையில் உள்ள பாப புண்யங்களே.

ஆக, ***தர்ம பூத ஞானம்*** விஷய ப்ரகாசன வேளையில், ஸ்வ ஆச்ரயத்துக்கு, வேறு ஒரு ஞானத்தின் அபேக்ஷை இன்றி, தன் இருப்பை, வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது. அதானல், ***தர்ம பூத ஞானம் ஸ்வயம் ப்ரகாசம்***

3. அறிவு எனப்படும் ***ஞானம்*** என்பதன் பொதுவான விளக்கமாவது **-** ***கஸ்யசித் ப்ரகாசகத்வம்*** **-** தன்னுடையவாகவுமாம் வேறொன்றினுடையவாகவுமாம் ஏதேனுமொன்றினுடைய வ்யவஹார அநுகுண்யத்தை பண்ணுகை.

ஸ்வாமி தேசிகன், ***தத்வ த்ரய சிந்தனாதிகாரத்தில்*** விளக்குவதாவது:

***ஜீவ ஸ்வரூப ஆத்மா வர்க்கத்துக்கெல்லாம் பொதுவான லக்ஷணம் சேதனத்வமும் ப்ரத்யக்த்வமும் ; சேதனத்வமானது ஞான ஆஸ்ரயமாகை ; ப்ரத்யக்த்வமாவது தனக்குத் தான் தோற்றுகை***

அதாவது, அறிவு கொண்ட வஸ்துவாகவும், தன் இருப்பை தானே அறிவதுமாயும் இருப்பது, சேதன ஸ்வரூபம்.

அதாவது, ஏதேனும் ஒன்றை தெளிவிப்பதாவது ஞானம் என்கிற அறிவு. ஆக, ***ஞானம்*** / அறிவு எனும் போது,

# யாருடைய ஞானம் / அறிவு ?

# எதைப் பற்றிய ஞானம் / அறிவு ?

என்கிற கேள்விகள் அதனுடம் சார்ந்தே ப்ரஸங்கிக்கும்.

இதனால், ***சேதனனுடைய ஞானம் என்னும் போது, அந்த ஞானமானது, சேதனனுக்கு அறிவிக்கிறது*** என்பது புலப் படும். இந்த ஞானமானது, சேதன சம்பந்தம் அன்றிக்க இருக்க ஸாத்யமில்லை. இந்த தெளிவிக்கப் படும் விஷயமாவது, தான் ஆஸ்ரயத்து இருக்கும் சேதன த்ரவ்யத்துக்கு தெளிவிக்கும்.

4. ஸ்வாமி தேசிகனின் ***தத்வ த்ரய சுளகம் - அநாத்ம நிரூபணாதிகாரம்***

*ஆந்தரமாவது மனஸ். இது சம்சாரிகளுடைய ஸங்கல்ப ஸ்ம்ருத்யாதிகளுக்குத் தானே காரணமாய் பாஹ்ய இந்த்ரியங்களுக்குத் துணையுமாய் இருக்கும்*

அதாவது, வெளியில் காண முடியாத மனஸ் என்னும் இந்த்ரியம், சேதநனுடைய தர்ம பூத ஞானத்தாலே, முடிவெடுக்கவும் நினைவில் கொள்ளவும் காரணமாய் இருந்து மற்ற புலன்களை இயங்கச் செய்யும்.

*இது தானே சில இடங்களிலே அத்யவசாய-அபிமான-சிந்தைகளாகிற புருஷ புத்தி விசேஷங்களுக்குக் காரணமான தசையில் புத்தி-அஹங்கார-சித்த சப்தங்களாலும் சொல்லப் படும்*

அதாவது, மனஸ் என்னும் இந்த்ரியம், சேதநனுடைய தர்ம பூத ஞானத்தாலே, மாறுபட்ட நிலைகளை அடைகிறது ; அதாவது,

# *அத்யவசாயம்* என்பது நிச்சயம் செய்வது. இதுவே *புத்தி* ; சம்சாரி ஜீவனின் புத்தியாவது, ப்ரக்ருதி சம்பந்தத்தினால், விபரீத எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் ஹேதுவாகறிது என்பதனை, ஸர்வேஸ்வரனான கண்ணன், அர்ஜுனனுக்கு (பகவத் கீதை 2-62,63)

*த்யாயதோ விஷயாந்பும்ஸ: ஸங்கஸ்தேஷூபஜாயதே ஸங்காத் ஸம்ஜாயதே காம: காமாத் க்ரோதோ அபி ஜாயதே க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம: ஸ்ம்ருதி ப்ரம்ஷாத் புத்தி நாஷோ புத்தி நாஷாத் ப்ணஷ்யதி*

என்று உரைக்கிறான்.

அதாவது,

மனிதன் விஷயங்களைக் கருதும்போது அவற்றில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலால் விருப்பமுண்டாகிறது. விருப்பத்தால் சினம் பிறக்கிறது. சினத்தால் மயக்கம்; மயக்கத்தால் நினைவு தவறுதல்; நினைவு தவறுதலால் புத்தி நாசம்; புத்தி நாசத்தால் அழிகிறான்.

# *அபிமானமாவது* விபரீத ஞான விஷயமாக இருந்து போவது. இதுவே *அஹங்காரம்* ; சம்சாரி ஜீவனின் அபிமானமாவது, விபரீதமாகவும் ஹானிகாரகமாகவும் இருக்கிறது என்பதனை ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (3-27)

*ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஸ: அஹங்கார விமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே*

என அருளினான்.

அதாவது,

எங்கும் செயல்கள் மூல ப்ரக்ருதியின் ஸத்வ ரஜஸ் தமஸ் ஆகிய குணங்களால் செய்யப்படுகின்றன. தேஹாத்ம ப்ரமத்தால் தன் ஸ்வரூபம் உணராது மயங்கியவன், ( *அஹங்கார விமூடாத்மா* ) “நான் செய்கிறேன்” என்று நினைக்கிறான்.

# *சிந்தையாவது* நிச்சயம் செய்வதற்கு முன்னால் சிந்தித்தல் என்பதாகிறது. இதுவே *சித்தமாகும்* ; சம்சாரி ஜீவர்களின் சித்தமாவது, முக்குணங்களாலான ப்ரக்ருதி பரிணாம சரீரத்தின் உந்துதலால், சித்தமானது ஸ்வரூப விரோதமான பாதிப்பை அடைகிறது ; சம்சார பந்தத்தை விளக்கும் போது, ஸ்வாமி தேசிகன் *உபோத்காதாதிகாரத்தில்*

*கர்ம அவித்யாதி சக்ரே ப்ரதிபுருஷம் இஹ அநாதி சித்ர ப்ரவாஹே தத் தத் காலே விபக்தி: பவதி ஹி விவிதா ஸர்வ ஸித்தாந்த ஸித்தா*

என அருளினார். அதாவது, அந்தந்த உரிய காலங்களில், அநாதியாக கர்ம-அவித்யா-வாசனை-ருசி-ப்ரக்ருதி சம்பந்தம் என்கிற சக்ரத்தில், ஒரு வட்ட வடிவத்தில், சுழன்று இருக்கும் சம்சாரி ஜீவன்களுக்கு, அவரவர்கள் கர்ம வினைக்கு ஏற்ப பலன்கள் பலவாறாக வருகின்றன. இந்த சம்சாரி ஜீவர்களின். கர்ம அநுகுணமான பிறப்புக்களுக்கு, தொடர்பு உண்டு என்பது ப்ரமாண ஸித்தம்.

இந்த சம்சாரி ஜீவர்கள், கர்ம அநுகுணமான 'ப்ரக்ருதியால் ஆன சரீர' சம்பந்தம் காரணமாக செயற்கை தன்மையை அடைகிறார்கள். இந்த செயற்கை தன்மைக்கு காரணம் ஐந்து. அவையாவன:

*அவித்யை* - சரீரத்தையே ஆத்மாவாகவும், ஆத்மாவை சுதந்திரனாகவும் நினைத்தல் போன்ற உண்மைக்கு மாறான எண்ணங்கள்.

*கர்மம்* - அவித்ய்யையால் ஜீவன் செய்யும் சாஸ்த்திரத்தை மீறிய செயல்கள்.

*வாசனை* - அவித்யா மற்றும் கர்மம் காரணமாக ஜீவனுக்கு உண்டாகும் ஸம்ஸ்காரம் (தன்மை).

*ருசி* - வாசனைக்கு ஏற்ப உண்டாகும் செயலில் விருப்பம்.

*ப்ரக்ருதி சம்பந்தம்* - மேலுள்ள நான்கு காரணங்களினால் உண்டாகும் ப்ராக்குத சரீர சம்பந்தம்.

இதற்கு ஏற்ப சித்தாமனது செயல்படுகிறது.

5. ஆக, சம்சாரி ஜீவர்களின் *சித்தமானது* மனோ வ்யாபாரத்துக்கு ஹேதுவாகிறது ; இதன் இயக்கத்தால், புத்தியானது புலன்களைப் ப்ரேரித்து, செயலாக்கம் அடையச் செய்கிறது ; பூர்வ ஜன்ம வாஸனையானது, சித்தத்தில் தாக்கத்தை உண்டாக்கி, சம்சாரி ஜீவர்கள் முன் பிறவியில் கொண்ட எண்ணங்களும் செயல்களும், தொடர்வதர்க்கு காரணமாகிறது. அதனால் தான் நல்ல குடும்பத்தில் பிறந்தவன், அவன் குடும்ப பெருமைக்கு ஒவ்வாத ஒரு பெரிய தவற்றை இழைக்கும் போது தவனுடைய 'பூர்வ ஜன்ம வாசனை' என வ்யவஹரிக்கிறோம்.

# பராசர மஹரிஷி, ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் அருளியதாவது :

*அநேக ஜன்ம ஸாஹஸ்ரீம் சம்சார பதவீம் வ்ரஜன். மோஹ ஸ்ரமம் ப்ர்யாதோஸௌ வாசனா ரேணு குண்டிதஹ*

அதாவது,

பல ஜனமங்களாக இந்த சம்சாரத்தில் ஈடுபாடு வளர்ந்திருப்தால், மோஹம் ஸ்ரமம் என்கிற புழுதியாகிற வாசனையில் அமிழ்ந்து, உண்மை ஞானத்தை இழந்து இருக்கிறான் இந்த சம்சாரி ஜீவன், என்கிறார் பராசர மஹரிஷி.

ஆக, வாசனை என்பது பல பூர்வ ஜன்மங்களில் செய்த பல விதமான ஸம்ஸ்காரங்களினால் ஏற்படும் தன்மை. அது சித்தத்தை பாதிப்பு அடையச் செய்கிறது.

# சரணாகதி கத்யத்தில், ஸ்ரீ ராமானுஜர்,

*மதீய அநாதி கர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம் பகவத் ஸ்வரூப திரோதா நகரீம் விபரீத ஜ்ஞான ஜநநீம் ஸ்வ விஷயா யாஸ்ச போக்ய புத்தேர்ஜநநீம் தேஹேந்த்ரிய த்வேன போக்யத்வேன ஸூக்ஷ்ம ரூபேண ச அவஸ்திதாம் தைவீம் குண மயீம் மாயம்*

என அருளியுள்ளார்.

அதாவது,

அநாதி பாப புண்ய கர்மங்களின் வாசனையால், பகவானைப் பற்றி அறியாமல், பகவானின் உண்மை நிலையை தவறாக அறிந்து கொள்வதும், சரீரமே ஆத்மா மற்றும் ஆத்மா ஸ்வதந்திரன் என்கிற தவறான எண்ணங்களோடும், நிரந்தரமற்ற துக்க கலப்போடு கூடிய ஸுக அநுபவத்தை பெற தான் பிறந்திருப்பதாக கருதிக் கொண்டும் இருக்கிற நிலை, பாபத்திற்கு தண்டனையாக, பகவந் மாயையால் சூழப் பட்டிருப்பதாக,

விவரிக்கிறார்.

ஆக, அநாதி வாசனை என்பது பல பூர்வ ஜன்மங்களில் செய்த பல விதமான ஸம்ஸ்காரங்களினால் ஏற்படும் தன்மை.

6. ப்ரக்ருதி சம்பந்தத்தினால் ஏற்படும், சம்சாரி ஜீவர்களின் ஞான குறைப்பாட்டைப் பற்றி, ஸ்ரீ உடையவர் சரணாகதி கத்யத்தில் கூறுவதாவது :

*மதீயானாதி கர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம் பகவத் ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஜ்ஞான ஜனனீம் ஸ்வவிஷயாயாஸ்ச போக்த புத்தேர் ஜனனீம் தேஹேந்த்ரியத்வேன போக்யத்வேன சூக்ஷ்மரூபேண சாவஸ்திதாம் தைவீம் குணமயீம் மாயாம் தாஸபூத சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ : இதி வக்தாரம் மாம், தாரய*

அதாவது,

இந்தப் 'ப்ரக்ருதி' அநாதிகாலமாக அடியேன் செய்த கர்மவினை என்கிற ஆற்று வெள்ளத்தில் அடித்துத் தள்ளப்பட்டு பகவானின் ஸ்வரூபத்தை அறியாதபடி செய்கிறது. ஸ்ரீமந் நாராயணன் பரமன்; அவனுக்கு நாம் அடிமை செய்ய வேணும் என்கிற நல்ல எண்ணங்கள் தோன்றாதபடி தடுத்து, அதற்கு எதிரான எண்ணங்களை நினைக்கச் செய்கிறது. ஒரு பொருளை, வேறு ஒரு பொருளாக நினைக்கச் செய்கிறது. தனக்குத் தானே இன்பமானவன் என்கிற எண்ணத்தைத் தோன்றச் செய்கிறது. மாயாவித்யை செய்பவன்,காண்பவரை மயக்க , தன் கையில் மயில்தோகை வைத்திருப்பதைப் போன்று ப்ரக்ருதியானது ,சரீரத்தையும் , இந்த்ரியங்களையும் தன்வசம் வைத்து ஜீவனை மயக்கி அவன் உண்மையை அறியாமல் , அவனுக்குத் தவறான அறிவைக்கொடுத்து, புலன் இன்பங்களில் ஈடுபடச் செய்கிறது. 'நான் உமக்கு அடிமை ; உம்மையே தஞ்சமாகப் பற்றினேன்' என்று சரணாகதி மந்த்ரத்தைச் சொல்லும் அடியேனை, இந்தப் ப்ரக்ருதி ஸம்பந்தத்திலிருந்து தாண்டும்படி செய்து அருளவேணும்,

என ப்ரார்த்திக்கிறார் ஸ்ரீ ராமானுஜர்.

# பகவத் ராமானுஜர், ஸ்ரீபாஷ்யம் விலக்ஷணத்வாதி அதிகரணத்தில்

*யஸ்ய சேதநஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மனா ஸ்வார்த்தேஷு நியந்தும் தாரயிதும் ஷக்யம் தத் ஸேஷதைக ஸ்வரூபம் தத் தஸ்ய சரீரம். இதர: சரீரி*

என அருளினார்.

அதாவது, சேதநமான ஆத்மா, அப்ருதக்ஸித்த சம்பந்தமுடைய த்ரவ்ய சேதந அசேதநங்களைச் சரீரமாக்க் கொள்ளலாம், என்றபடி.

*ஆத்மா ஆதாரம்* - ஆத்மா இல்லாமல், அதனுடைய சரீரம் நிலை குலையக்கூடியது.

*ஆத்மா நியந்தா* - ஆத்மாவின் விருப்பப்படியே, அதனுடைய சரீரம் இயங்கக்கூடியது.

*ஆத்மா சேஷி* - ஆத்மாவின் உபயோகத்திற்காகவே அதனுடைய சரீரம் இருக்கிறது.

மேற் கூறிய இலக்கணத்தினால், ஸகல ஜீவர்களும் பகவானுக்கு சரீரம் என்றபடி ;

# ஆக, ப்ரக்ருதி சம்பந்தத்தினாலான, சம்சாரி ஜீவர்களின் மனஸின் நிலையான புத்தியானது, விபரீத எண்ணங்களுக்கு விஷயமாகும் போது, ஸர்வ வஸ்துக்களும், பகவானுக்கு சரீரமான படியால், ஆநுகூல்யமே ஸ்வபாவம் என்பதனை மறந்து செயல் படும் நிலை உருவாகிறது. ஆக, பத்த தசையில் ***புத்தியில் ஸ்வ பர வ்யவஹாரம்*** ஸித்திக்கிறது. அது அநுகூலமாயும் ப்ரதிகூலமாயும் பல வகைப் படுகிறது. இதற்கு காரணம் கர்ம சம்பந்திம். ஆனால் முக்த தசையில், ப்ரக்ருதி பரிணாமமான மனஸ் என்பதில் உள்ள விபரீதங்களான புத்தி, அஹங்காரம் மற்றும் சித்தம் ஆகியவைகளின் தாக்கம் அற்றபடியால், அனைத்தும் பகவத் விபூதி என்கிற உணர்வு தழைத்தோங்கும்.

இவ்விஷயத்தில், ஸ்வாமி திருப்பாணாழ்வார், அமலனாதிபிரானில் அருளியது :

***கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை அண்டர் கோன் அணி அரங்கன் என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே***

அதாவது,

ஸர்வருக்கும் ஸ்வாமியாய், ஆதாரமாய், நியந்தாவாய் இருக்கும், சக்ரவர்த்தி திருமகனுக்கே ஆராத்ய தெய்வமான அரங்கன், ஸௌலப்யத்தால் வெண்ணை திருடியவனாக அவதரித்தாலும், அவனே பரதத்வம் என்கிற எண்ணம் என் நினைவில் இருந்து எப்போதும் நீங்காது. அதனை உணர்ந்த பின்பு, ஸர்வம் ப்ருஹ்மாத்கம் என தெளிந்து, ஸகல வஸ்துக்களும் பகவானுக்கு விபூதி என்கிற படியால், அவைகளுக்கு ஆநுகூல்யமே ஸ்வபாவம் என்பதொரு எண்ணம் உருவாகும்.

சாந்தோக்ய உபநிஷத்தில்,

***யோவை பூமா தத் ஸுகம். யத்ர நாந்யத் பச்யதி. நாந்யத் ஸ்ருணோதி. நாந் யத் விஜாநாதி. ஸ பூமா***

என்கிறது

இதையே விஷய வாக்யமாகக் கொண்டு, வேதவ்யாஸர் ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

***பூமா ஸம்ப்ரஸாதத்யுபதேஷாத்***

என அருளியிருக்கிறார்.

அதற்கு ஶ்ரீராமானுஜர் தனது ஶ்ரீபாஷ்யத்தில் விளக்கம் அருளியுள்ளார்.

அதாவது, எல்லையற்றதுமான, மிகச் சிறந்ததுமான, ஆனந்த ரூபமான ப்ருஹ்மத்தை (ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனை), அவனது குணங்களோடும் ஐஸ்வர்யங்களோடும், பரமபதத்தில் முக்த ஜீவர்கள், அநுபவிக்கும் போது அநுபவிப்பவன் வேறொன்றையும் காண்கிறதில்லை; கேட்பதில்லை; அறிகிறதில்லை. காரணம், ஸர்வேஸ்வரனை ஆத்மாவாக கொள்ளாத (ப்ருஹ்மத்தின் ஆதிக்கத்தில் இல்லாத) பொருட்கள் எங்கேயும் கிடையாதபடியால் !

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

17.8.2023
வியாழன் கிழமை

*விதி வகை பரவுதல் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. ஸத் ஸம்ப்ரதாயத்தில், ப்ரமாணம் கொண்டு ப்ரமேய நிர்தேசத்தில், தர்க்கத்திற்கு இடமுண்டு.

# இதிஹாஸ ஸமுச்சயத்தில், மஹரிஷி,

*ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்*

அதாவது, சாஸ்த்திர ப்ரமாணம், ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருந்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும், என அருளிகிறார்.

# அதனால், ப்ரமாண வரம்பு மீறாமல், அதீந்த்ரிய விஷய விவாதம் *ஸத் தர்க்கமாக* இருக்க வேண்டும். அதாவது, சாஸ்த்திர பலத்தினால் முன்னோர்கள் காட்டிய வழி மாறாமல் விவாதிப்பதாகும். அது ஸத் தர்க்கம் ; இவ்விஷயத்தில், ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் அருளிய ஒரு சில வரிகளை நினைவு கொள்ள வேண்டும்:

# *தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய் போருகிறது*

அதாவது, புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயத்தில், அதாவது ஈஸ்வர தன்மைகளையும், மோக்ஷ சாதனங்களையும், நம் தர்க்க அறிவைக் கொண்டு நிர்ணயிக்கலாகாது; அதற்கு, சப்த ப்ரமாணங்களான, ஸ்ருதி பலமும் நம் ஸம்ப்ரதாய பூர்வாசார்யர்களான ஸ்ரீமந் நாதமுனி, யாமுன முனி, ஸ்ரீ ராமானுஜ முனி ஆகியோரின் ஸ்ரீ ஸுக்திகளுமே, ஆதாரம்.

# மநு ஸ்ம்ருதியில் கூறப்படுவதாவது,

*ஆர்ஷம் தர்மோபதேசம் வேத சாஸ்த்ரா விரோதிநா யஸ்தர்க்கேண அநுஸந்ததே ஸ தர்ம வேத நேத்ர:*

அதாவது, வேத வேதாந்தங்களுக்கு விளக்க உரையாக உள்ள க்ரந்தங்களை, அதாவது ஸம்ருதி, புராணம், ப்ருஹ்ம ஸுத்ரம் போன்றவைகளை, விளக்கும் போது, வேத வேதாந்த வரிகளுக்கு, விரோதம் வராத வகையில் யார் அறிந்து கொள்கிறானோ அவனே தர்ம சாஸ்த்திரம் அறிந்தவன். இவ்விதம் உணராதவன் தர்ம சாஸ்த்திரம் அறிந்தவனாக மாட்டான்.

ஆக, அனைத்து வித வைதீக தர்க்கங்களிலும், ப்ரமாண விரோத விவாதங்கள் அஸத் தர்க்கங்களாகும்.

2. ஸத் ஸம்ப்ரதாயத்தில், ப்ரமாணங்கள் என்பது *சாஸ்த்திர ப்ரமாணம்* என்றும் *ஸம்ப்ரதாய ப்ரமாணம்* என்றும் இரு வகையாகச் சொல்லப் படுகிறது.

*சாஸ்த்திர ப்ரமாணம்* என்பது வேத வேதாந்தமும், அதனோடு ஒத்த கருத்து கொண்ட உப ப்ருஹ்மணங்களின் நிர்வாஹம்.

*ஸம்ப்ரதாய ப்ரமாணம்* என்பது நம் ஸதாசார்யர்கள் *சாஸ்த்திர ப்ரமாண* விரோதம் அல்லாமல், அதற்கு *உபபத்தி* பண்ணும் வகையில் ஏற்படுத்திய ஸம்ப்ரதாய க்ரந்தங்கள்.

***உபபத்தி*** என்பது பொருந்தச் செய்வது; முன்னோர் மொழிந்த க்ரந்தங்களுக்கு அர்த்த விரோதமில்லாமல் மேலும் உபமானங்களலயோ அல்லது வேறு விதத்திலோ விளக்குவது ***உபபத்தி*** செய்வதாகும்.

# சம்சார பந்தத்தை விளக்கும் போது, ஸ்வாமி தேசிகன் ***உபோத்காதாதிகாரத்தில்***

***கர்ம அவித்யாதி சக்ரே ப்ரதிபுருஷம் இஹ அநாதி சித்ர ப்ரவாஹே தத் தத் காலே விபக்தி: பவதி ஹி விவிதா ஸர்வ ஸித்தாந்த ஸித்தா***

என அருளினார். அதாவது, அந்தந்த உரிய காலங்களில், அநாதியாக கர்ம-அவித்யா-வாசனை-ருசி-ப்ரக்ருதி சம்பந்தம் என்கிற சக்ரத்தில், ஒரு வட்ட வடிவத்தில், சுழன்று இருக்கும் சம்சாரி ஜீவன்களுக்கு, அவரவர்கள் கர்ம வினைக்கு ஏற்ப பலன்கள் பலவாறாக வருகின்றன. இந்த சம்சாரி ஜீவர்களின். கர்ம அநுகுணமான பிறப்புக்களுக்கு, தொடர்பு உண்டு என்பது ப்ரமாண ஸித்தம்.

இந்த சம்சாரி ஜீவர்கள், கர்ம அநுகுணமான 'ப்ரக்ருதியால் ஆன சரீர' சம்பந்த காரணமாக செயற்கை தன்மையை அடைகிறார்கள். இந்த செயற்கை தன்மைக்கு காரணம் ஐந்து. அவையாவன:

***அவித்யை*** **-** சரீரத்தையே ஆத்மாவாகவும், ஆத்மாவை சுதந்திரனாகவும் நினைத்தல் போன்ற உண்மைக்கு மாறான எண்ணங்கள்.

***கர்மம்*** **-** அவித்ய்யையால் ஜீவன் செய்யும் சாஸ்த்திரத்தை மீறிய செயல்கள்.

***வாசனை*** **-** அவித்யா மற்றும் கர்மம் காரணமாக ஜீவனுக்கு உண்டாகும் ஸம்ஸ்காரம் (தன்மை).

***ருசி*** **-** வாசனைக்கு ஏற்ப உண்டாகும் செயலில் விருப்பம்.

***ப்ரக்ருதி சம்பந்தம்*** **-** மேலுள்ள நான்கு காரணங்களினால் உண்டாகும் ப்ராக்குத சரீர சம்பந்தம்.

இங்கு ***கர்ம அவித்யாதி சக்ரே*** என்பது பாபங்களைச் சேர்ப்பதாகிற, ***கர்மாவை*** உணர்த்துகிறது ; சாஸத்திர விதிகளை மீறும் போது பாபங்களும், சாஸ்த்திர விதிகளை பின்பற்றும் போது புண்யங்களும் ஸித்திக்கும்

***ந புக்தம் க்ஷீயதே கர்ம கல்ப கோடி ஸதைரபி***

என்கிற சாஸ்த்திர விதிப்படி, கல்ப கோடி காலங்களானாலும், பாப புண்ய கர்மாக்கள் அநுபவியாமல் அழியாது ; புண்யம் மற்றும் பாபம் என்ற சொற்களின் ஸாமான்ய விளக்கம்:

***புண்யமாவது*** இந்த சம்சாரி ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிப்படி உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஏற்படும் சந்தோஷம்; அதன் விளைவாக ஏற்படும் அநுகூலங்கள்.

***பாபமாவது*** இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிக்கு மாறாக உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஏற்படும் சீற்றம்; அதன் விளைவாக ஏற்படும் ப்ரதிகூலங்கள்.

இங்கு ***ந புக்தம் க்ஷீயதே கர்ம*** என்பது பாப புண்யங்களைக் கழிக்கப் படுகிற, ***கர்மாவை*** உணர்த்துகிறது.

3. வைதீக மதங்கள் (வேதத்தை ப்ரமாணமாக ஏற்ற மதங்கள்) பல விதமாக உள்ளன ; வேத வரிகளிலும் அதன் உப ப்ருஹ்மணங்களிலும் சில வரிகளை ஏற்று மற்ற வரிகளைக் கைவிட்டு, சில மதங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன ; ஸ்ரீராமானுஜர் நிர்வஹித்த ***விசிஷ்டாத்வைதத்தில்*** வேத வரிகளுக்குள் ஏற்ற தாழ்வு கிடையாது; அனைத்து வரிகளும் சம வலிமை கொண்டனவே என அருளி, ***பேத ஸ்ருதி*** மற்றும் ***அபேத ஸ்ருதி*** இரண்டையும் ***கடக ஸ்ருதியைக்*** கொண்டு இணைத்து, சரீர-ஆத்ம

சம்பந்தத்தைக் கொண்டு, ***இதி ஸர்வம் ஸமஞ்சஸம்*** அதாவது ‘இவ்வாறு முரண்பாடுகள் களையப் பட்டன' என ஸ்ரீ ராமானுஜரின் ஸ்ரீபாஷ்யத்தில் உறுதி செய்தார்.

இப்படி நிர்வஹித்த விசிஷ்டாத்வைதத்தில் ***ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த ஏகதேசிகளின்*** ஸ்ரீ ராமாநுஜ க்ரந்த விரோத பக்ஷமாவது :

# ***பர தத்வம்*** -

முமுக்ஷூபடி க்ரந்தத்தில்,

***இதில் முற்கூற்றால் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈஸ்வரன் திருவடிகளை உபாயமாக் பற்றுகிறது ; பிற்கூற்றால் அச்சேர்த்தியிலே அடிமையையிரக்கிறது*** (எண் - 122 ) எனப் படுகிறது ;

த்வய மந்திரத்தில் முன் வரியில் உள்ள ஸ்ரீமத் சப்தத்தில், பிராட்டிக்கு ஸித்தோபாயம் கிடையாது என உரைத்து, பின் வரியில் உள்ள ஸ்ரீமத் சப்தத்தில், பிராட்டியோடு சேர்ந்த ஈஸ்வரனுக்கு ஸித்தோபேயம் உள்ளதாகக் கூறி, பிராட்டியின் ஈஸ்வரத்வத்தை நிஷேதிக்கின்றனர்.

# ***பரம ஹிதம்*** (அகிஞ்சனர்களுக்கு சரணாகதி அநுஷ்டானம்) -

வசன பூஷண க்ரந்தத்தில்

***ஸ்வ யத்ன நிவ்ருத்தி பாரதந்த்ரிய பலம்; ஸ்வ ப்ரயோஜன நிவ்ருத்தி சேஷத்வ பலம்*** (எண் - 71 ) எனப் படுகிறது ;

ஆக, ஸாத்யோபாய அநுஷ்டானமன்றிக்கே ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம், எனப்படுகிறது.

# ***பரம புருஷார்த்தம்*** (பிறவிப் பிணி நீங்க மோக்ஷ பலன்) -

கைவல்யம் என்கிற ஆத்மானுபவம் நித்யமென்றும் ஸர்வ கர்மங்களிலிருந்தும் விடுபட்டு பரமபதத்தை அடைந்து அங்கு தன்னை மட்டும் அநுபவிக்கிறதாகிற ஆத்மானுபவத்தை பெறுகிறான் என்று ஏகதேசிகள் சொல்லியிருக்கறார்கள் - ஸ்வாமி நம்மாழ்வார்,ஆத்மானுபவத்தை அருளியதாவது :

***குறுகா நீளா இறுதி கூடா எனையூழி, சிறுகா பெருகா அளவிலின்பம் சேர்ந்தாலும், மறுகா லின்றி மாயோ னுனக்கே யாளாகும், சிறுகா லத்தை யுறுமோ அந்தோ தெரியிலே?*** அதில், ***இறுதி கூடா*** என்று அருளியுள்ளார்.

ஆகையால், அதன் தாத்பர்யமான நிண்ட கால அநுபவம் என்பதனை உணராது, கைவல்ய ஆத்ம அநுபவ புருஷார்த்தமாவது, பரம பதத்தில், நித்யமானது என்பர்.

# ஸ்ரீ ராமாநுஜ ஸ்வாமி தேசிக க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த பேதங்களை உடையது ஸித்தாந்த ஏகதேசிகளின் பக்ஷ க்ரந்தங்கள் ; ஆனால், ***ஸ்ரீராமாநுஜ க்ரந்த விளக்கங்களாவது*** :

# ***பர தத்வம்*** (ஸ்ரீமந் நாராயணனே) -

வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது,

***அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி***

எனக் கூறி, பிராட்டியின் தன்மை எம்பெருமானைப் போன்றதே என்கிறார்.

# ***பரம ஹிதம்*** (அகிஞ்சனர்களுக்கு சரணாகதி அநுஷ்டானம்) -

உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸூத்ரங்கள்

***நாநா சப்தாதி பேதாத் ; விகல்ப: அவிஸிஷ்ட பலத்வாத்*** என்கின்றன;

அதாவது பலவாறாக உள்ள ஸகல ப்ருஹ்ம வித்யைகளுக்கும் மோக்ஷ பலன் ஒன்றே.

# ***பரம புருஷார்த்தம்*** (பிறவிப் பிணி நீங்க மோக்ஷ பலன்) -

ஸ்ரீராமானுஜரின் கீதா பாஷ்ய விளக்கமானது,

***ப்ரக்ருதி பந்தாத் விமுக்த: தேவ மனுஷ்யாதி சப்த அபிலாப அநர்ஹம் ஞானானந்தைகதானாம் ஆத்மாநம் ப்ராப்நோதி*** என்கிறது ;

அதாவது, கைவல்ய பலனாவது, தேவ மனுஷ்யாதி சரீரங்களான மாறுதலை அடைகிற ப்ரக்ருதியின் பரிணாமமான விஷயானுபவங்களிலிருந்து விலகுகிறான் ; ஆக, கைவல்யார்த்தி, பலதசையில், பரமபதத்தை அடைவதில்லை.

4. பரதேவதா நிஷ்கர்ஷ விஷயத்தில், சாஸ்த்திர மற்றும் ஸம்ப்ரதாய ப்ரமாணங்களைக் கொண்டு, தெளிய வேண்டுவதாகிறது.

# சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணமாவது -

***யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி***

அதாவது,

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

மேலும் ப்ரமாணங்களைக் கணிசிக்கும் போது, மஹா ப்ரளய காலத்தில் தானே இல்லாத ஒருவனுக்கு, ஸ்ருஷ்டி செய்ய வழி கிடையாது அல்லவா? ஆதலால், ப்ரளய காலத்திலும் எவன் நிலைத்து இருக்கிறானோ, அவனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா), என்பதாகிறது.

# மஹோபநிஷத்தில்,

***ஏகோஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஸாந நேமே ஜாவா ப்ருத்வி நக்ஷத்ராணி***

என்கிறது.

அதாவது,

நாராயணன் ஒருவனே, மஹா ப்ரளய காலத்தில், இருந்தான்; சதுர்முக ப்ருஹ்மாவும் இல்லை; சிவனுமில்லை; லோகங்கள் இல்லை; நக்ஷத்திரங்கள் இல்லை என்று மஹாப்ரளய காலத்தில் பல இல்லாத வஸ்துக்களையும் உபநிஷத் கூறுவதினால்,

மஹாப்ரளயத்தில் இருக்கிற ஸ்ரீமந் நாராயணனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா),

என்பதாகிறது.

# தைத்ரீய உபநிஷத், நாராயண ஸுக்தத்தில்

***நாராயண பரப்ரஹ்ம! தத்வம் நாராயண: பர: நாராயண பரோஜ்யோதி ஆத்மா நாராயண: பர:***

என்ற வரி காணப் படுகிறது.

அதாவது,

நாராயணனே ப்ரப்ரஹ்மம்! நாராயணனே பரதத்வம்! நாராயணனே மேலான ஜோதி! நாராயணனே பரமாத்மா !

# ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில்,

***மத்த: பரதரம் நாந்யத்கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய! மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ***

என்று

'தனஞ்ஜயா, என்னைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறெதுவுமில்லை',

என அருளினான்.

இவ்வாறு நிர்தேசிக்கப் பட்ட பரம்பொருள், நாராயணன் மட்டுமே ; அதில் பெரிய பிராட்டியை சேர்க்கலாகாது என ***ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த ஏகதேசிகளின்*** ஸ்ரீ ராமாநுஜ க்ரந்த விரோதமாக அறுதியிடுகின்றனர் ; இது, வேறு சில ப்ரமாண வரிகளை ஏற்காத தால் உள்ள அவர்களின் குற்றமாகும்.

# பராசர மஹரிஷி அருளிய விஷ்ணு புராணத்தில்,

***தேவ த்ரியக் மநுஷ்யாணாம் புன்னாமா பகவான் ஹரி: ஸ்த்ரி நாம்நி லக்ஷ்மிர்மைத்ரேய நாந்யோர் வித்யதே பரம்***

என்று கூறியதால்,

பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாரும் மற்றும் ஹரியைத் தவிர வேறு யாரும், ஸர்வ சேஷியாக, அதாவது பரமாத்மாவாக மாட்டார்கள்.

# ஸ்வாமி தேசிகனின் ***ஸித்தோபாய சோதனாதிகார*** வரிகளாவது :

***எம்பெருமானைச் சொன்னவிடத்தில் பிராட்டியையும் சொல்லிற்றாம் - என்று தொடங்கி உடையவர் அருளிச் செய்த வார்த்தையை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்சீயர் ஸங்க்ரஹித்தார்*** ;

ஆக, திவ்ய தம்பதிகளே பர தத்வம் என விளக்கினார்.

# ஸ்ரீ ஸுக்த வரிகளாவது:

***தாம் பத்மிநேமீம் சரணம் அஹம் ப்ரபத்யே: லக்ஷ்மீர்மே நஷ்யதாம் த்வாம் வ்ருணே***

என்கிற ஸ்ருதி வாக்யத்தால்,

லக்ஷ்மி தேவியை சரணமடைந்து பாபத்தைப் போக்கி அருளப் ப்ரார்த்திப்பதாக கூறுவதால், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

# பராசர பட்டர், ஸ்ரீகுணரத்நகோசத்தில், (34)

*__யுவத் வாதௌ துல்யேபி அபரவஷதா சத்ரு சமன் ஸ்திரத்வாதீன் க்ருத்வா பகவதீ குணாத் பும்ஸ்தவ ஸுலபான். த்வயீ ஸ்த்ரீத்வைகாந்தான் மதிம் பதி பாரார்த்ய  கருணா க்ஷமாதீன்வா போக்தும் பவதி யுவயோ: ஆத்மிநி பிதா__*

அதாவது,

ஓ ரங்கநாயகியே ! பரதத்வமான இருவருக்கும் தன்மைகள் ஒன்றாக இருப்பினும், தாங்களாகவே அதை பகிந்ந்து கொண்டிருக்கிறீர்கள். 'பதி பாரார்த்யம்' என்கிற குணத்தை நீ, ஸ்த்ரீ லக்ஷணமாகக் கொண்டு, உன் இஷ்டபடி நீயே ஏறிட்டு கொண்டிருக்கிறாய் !

ஆக, பிராட்டிக்கு விபுத்வம், உபாயத்வம் மற்றும் ஜகத் காரணத்வம் அனைத்தும் எம்பெருமானைப்போல் உண்டு, என்பது சாஸ்த்திர விளக்கம்.

# பராசர பட்டர், ஸ்ரீகுணரத்நகோசத்தில்,

*__தத் அந்தர்பாவாத்வாம் ந ப்ருகபிததே ஸ்ருதிரபி__*

என அருளினார்.

அதாவது, எம்பெருமானுடன் சேர்ந்தே இருப்பதினால், பிராட்டியை தனியாக ஸ்ருதிகள் கூறவில்லை.

# இதையே ஸ்வாமி தேசிகன், *__ஸந்நியோகஸிஷ்ட வ்யாகரண நியாயத்தாலே__* ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் விவரித்தார்.

அதாவது, *__ஸஹவா ப்ரவ்ருத்தி, ஸஹவா நிவ்ருத்தி__* (சேர்ந்தே இருக்கும் அல்லது சேர்ந்தே போகும்) என்கிற அந்த நியாயம் என்னவென்றால், ஒரே இடத்தில் சேர்ந்தே இருக்கக் கூடியவைகளைக் கூறும் போது, ஒன்றை சொல்லும் போது மற்றொன்றும் கூறியதாகும்.

ஆக, எம்பெருமானை சொல்லும்மிடமெங்கும், *__அகலகில்லேன்__* என்று இருக்கும் பிராட்டியையும் சொல்லிற்றாம் என்பதாக விளக்கப் படுகிறது.

ஆக, மஹாலக்ஷ்மி தாயார், விபுவான பெருமாளைப் போல் ஈஸ்வர தத்வமே என அறியலாம்.

# அதனால், ஸ்ரீமந் நாராயணனே ஸர்வேஸ்வரன், என்பதாகிறது.

5. இதனால், பகவானான ஸ்ரீமந் நாராயணனே ஸர்வ ஆராத்யனாகிறான், என்கிறது ப்ரமாணங்கள்.

# பரம்பொருள் யார் என அறியாமல் துதிக்கக் கூடாது என்பது சாஸ்த்திர (வேத) நியதி.

*__காரணம் து த்யேய:__*

என்பது உபநிஷத் வரி.

எவன் ஒருவன் உலகத்திற்கு காரணமோ, அவனே ஈஸ்வரன், அவனையே துதிக்க வேண்டும், என்கிறது.

# ஆக, பகவத் பாகவத ஆராதனமே ஸர்வருக்கும் உபாதேயம் என்பது ப்ரமாண ஸித்தம்.

*__ஆராதனானாம் ஸர்வேஷாம் விஷ்ணோர் ஆராதனம் பரம். தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீய ஆராதனம் பரம்__*

என்று மற்ற தேவதைகளை ஆராதிப்பதைக் காட்டிலும் விஷ்ணுவினுடைய ஆராதனம் மிகவும் உயர்ந்தது. அவ்விஷ்ணுவை ஆராதிப்பதைக் காட்டிலும் அந்த எம்பெருமானின் அடியார்களை ஆராதிப்பது உயர்ந்ததாக சாஸ்த்ரங்கள் கருதுகின்றன.

இதனால், ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனைத் தவிர்த்து இதர தேவதா ஆராதனம், அநுசிதம், என்பதும் ப்ரமாண ஸித்தம்

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (9-24) அருளுவதாவது:

*அஹம் ஹி ஸர்வ யஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச. ந து மாம் அபிஜாநன்தி அத தத்வேநது ச்யவந்திதே*

அதாவது,

‘எந்த ஒரு தேவதையை பூஜித்தாலும் நான் அன்றோ அவர்கள் செய்யும் பூஜைகளை ஏற்று கொள்பவனாயும் பலனை கொடுப்பவனாயும் இருக்கிறேன். இதை அறியாதவர்கள் மற்ற தேவதைகளை பூஜித்து, அற்ப பலனை பெற்று அதனையும் பறி கொடுக்கின்றனர்.’

# உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய

*ப்ருஹ்ம ஸூத்ரம்* (3-2-8-37) மற்றும் அதற்கு விளக்க உரையாக இருக்கிற ஶ்ரீ ராமானுஜர் அருளிய ***ஶ்ரீ பாஷ்யத்திலும்*** இது விளக்கப் படுகிறது :

***பலமத உபபத்தே:***

அதாவது, ஸகல பலனும் ப்ருஹ்மத்திடமிருந்தே.

அதாவது, ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணைத் தவிர எந்த ஒரு தாழ்ந்த தேவதை பலன் அளிப்பதாக சாஸ்த்திரங்கள் கூறினாலும், அவை அனைத்தும் பரம்பொருளான எம்பெருமானின் அநுக்ரஹத்தாலேயே என உணர வேண்டும், என்பதாகிறது.

# ஸ்வாமி பெரிய ஆழ்வாரின், திருமொழியில் (5-3-6)

***எருத்துக் கொடி உடையானும் பிரமனும் இந்திரனும் மற்றும் ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்து அறிவாரும் இல்லை மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா மறுபிறவி தவிரத் திருத்தி உன் கோயில் கடைப் புகப் பெய் திருமாலிருஞ்சோலை எந்தாய்***

எனப் படுகிறது ; அதாவது,

திருமாலிருஞ்சோலை எம்பெருமானே! எருதை வாகனமாகக் கொண்ட சிவனும் சதுர்முக ப்ரஹ்மாவும் தேவேந்திரனும் மற்றுள்ள எந்தத் தேவதைகளும் இந்த சம்சாரமாகிற வியாதிக்கு மருந்து அறிய வல்லவர் அல்லர்; இப்பிறவி நோய்க்கு மருந்தை அறியும் நீலமணி போன்றவனே! எனக்கு மற்றுமோர் பிறவி நேராதபடி அடியேனை காத்து உன் கோயில் வாசலில் வாழும்படி அருள்புரிய வேணும்.

# ஆக, மற்ற தேவதைகளின் ரக்ஷகத்வத்தில் தோஷம் இருக்கிறது, என்பது ப்ரமாண ஸித்தம்.

6. பகவத் ஆராதனம், ஸ்வரூப ப்ராப்தமாக இருக்க, அவர தத்வ தேவதைகளை ஆராதிப்பதாலும் பலன் பெறும் ப்ரகாரத்தை உணர வேண்டும்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (4-12) அருளுவதாவது:

***காங்க்ஷந்த கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர் பவதி கர்மஜா***

அதாவது,

'கர்மாக்களின் ப்ராக்ருத பலனை உடனே கால தாமதமின்றி விரும்புகிறவர்கள் ப்ரக்ருதியில் உள்ள தேவதைகளை உபாஸிக்கிறார்கள். அதன் மூலமாக விரைவிலேயை பலன் உண்டாகிறது.'

# ஸர்வேஸ்வரனான கண்ணனே ஸகல பலனையும் கொடுக்க தகுதி படைத்தவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-22) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***ஸ தயா ஸ்ரத் தயா யுக்த: தஸ்ய ஆராதனமீஹதே. லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹிதான்***

அதாவது,

'இதர தேவதையின் ஸ்ரத்தையான ஆராதனத்தாலே பலனை அடைகிறான். அந்த பலன்களும் என்னால் கொடுக்க பட்டவைகளே.'

# மேலும், பகவத் கீதையில் (9 -23) ஸர்வேஸ்வரனான் கண்ணன்,

***யேப் அன்ய தேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா: தேபி மாமேவ கௌந்தேய யஜந்தி அவிதி பூர்வகம்***

அதாவது,

'எவர்கள் மற்ற தேவதைகளை ச்ரத்தையுடன் ஆராதிக்கிறார்களோ, அவர்களும் என்னையை ஆராதிக்கிறார்கள், ஆனால் அவர்கள் சாஸ்த்ர விதிகளை பின் பற்றாமல் செய்கிறார்கள்; அதனால் அவர்களுக்கு கிடைக்க் கூடிய பலன்களும் குறைபட்டு போகின்றன.'

என்கிறான்.

# இதை மற்ற ப்ரமாணங்களும் அறுதியிடுகின்றன :

***யே து ஸாமான்ய பாவேன மன்யன்தே புருஷோத்தம தே வை பாஷாண்டினோ க்ஞேய: ஸர்வ கர்ம பஹிஷ்க்ருதா:***

என்பதால்,

எவன் ஒருவன் புருஷோத்தமனான ஸ்ரீமந் நாராயணனையும் இதர தேவதைகளையும் ஸமமாக நினைக்கிறானோ, அவன் பாஷாண்டி ஆகிறான்; எந்த ஒரு வைதீக கர்மாக்களை செய்யவும் தகுதி அற்றவனாகிறான்,

என்பதாகிறது.

# ஆக, வேதவ்யாஸர் மஹாபாரதத்தில்,

***ப்ருஹ்மாணம் சிதி கண்டம் ச யாச்சன்யா தேவதா ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா: ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்***

என அருளியதாக ப்ரமாணம் காட்டப் பட்டிருக்கிறது.

அதாவது,

'ப்ராக்ருத லோகத்தில் இருக்கும் ப்ருஹ்மா, நீலகண்டனான சிவன் போன்ற அவர தத்வமான தேவதைகளை, புத்தி உள்ளவர்கள் (மோக்ஷத்தில் ஆசை உள்ளவர்கள்), ஸேவிப்பதில்லை. அவர்கள் கொடுக்கும் பலன்கள் அல்பமாயும் அழிவடையும் தன்மையும் கொண்டுள்ளன என்கிற காரணத்தால்',

# ஆக, பகவத் பக்திக்கான ஸுஹ்ருதம் இல்லாத போது, சம்சார பந்த ஹேதுவான அவர தேவதாந்தர் சம்பந்தம், சம்சாரி ஜீவர்களுக்கு ஸித்திக்கிறது.

7. பகவானோடு இருக்கற பிரிக்க முடியாத 'சரீர- ஆத்ம' சம்பந்தத்தை உணர்ந்த பின்பு, ஜீவர்கள், துக்கமயமான சம்சாரத்தில் இருந்து விலகி மோக்ஷத்தை அடைய அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஐந்து என பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தில், ***ஹாரீத ஸம்ஹிதையில்*** விளக்கப் படுகிறது.

அவை,

***ப்ராப்யஸ்ச ப்ருஹ்மணோ ரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்யுகாத்மநஹா. ப்ராப்தி உபாயம் ஃபலம் சைவ ததா ப்ராப்தி விரோதி ச. வதந்தி ஸகலா வேதாஹா இதிஹாஸ புராணகாஹா***

என்கிற வரிகள் கொடுக்கும் அர்த்த பஞ்சகம்.

அதன் விளக்கமாவது: ***வதந்தி ஸகலா வேதாஹா இதிஹாஸ புராணகாஹா*** என்னும்படியாக வேத விரோதமற்று க்ரஹிக்க ப்ராப்தம்.

***ப்ருஹ்மம்*** - பரம் பொருள் - இந்த பதமாவது, சம்சார பிணியிலிருந்து விலக்கி மோக்ஷத்தை கொடுக்கும் பரம்பொருளைப் பற்றிய விளக்கமாகிறது. இதில், அவர தத்வம் மற்றும் பர தத்வ வித்யாசம் தெளிய வேண்டும்.

***சம்சாரி ஜீவர்கள்*** - இவ்வுலகில் காணும் மக்கள் - பாப புண்ய கர்ம சம்பந்தம் கொண்டு, சம்சார பிணியில் உழன்றுக் கொண்டிருக்கும் ஜீவர்களின் விளக்கம்.

***மோக்ஷ உபாயம்*** - மோக்ஷமடைய வழி - சம்சார பிணியிலிருந்து விலகி ஜீவர்கள் ஸுக ரூபமான பரமபத்தை, அடைய வழி. அதாவது, பிறவிக்கு காரணமான ஸகல பாப புண்யங்களும் நீங்கப் பெற்று, மோக்ஷானுபவத்தை பெறுவதற்கான வழி.

***மோக்ஷ பலன்*** - உபாயமளிக்கும் நல் விளைவு - சரணாகதி அநுஷ்டானத்திற்கு பலனான மோக்ஷத்தை, பரமபதத்தை, அடைவதனால் ஏற்படும் நமைகள்.

***மோக்ஷமடைய விரோதி*** - மோக்ஷத்தற்கு தடைகள் - சம்சாரி ஜீவர்கள், இது காலம் மோக்ஷத்தை, பரம்பதத்தை, அடைய விடாமல் இருந்த தடைக்கு காரணம்.

8. பல வகைப் பட்ட ப்ராப்தி விரோதியானது, தேவதாந்தர சம்பந்தத்தில் பர்யவசிப்பது கொடுமையானது ;

# இதனை, ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழி, விளக்குகிறது :

***அவர் அவர் தம தமது அறிவு அறி வகை வகை அவரவர் இறை அவர் என அடி அடைவர்கள் அவர் அவர் இறையவர் குறைவு இலர் இறையவர் அவர் அவர் விதி வழி அடைய நின்றனரே***

அதாவது,

கர்ம அநுகுணமாக சம்சாரி ஜீவர்கள் தங்கள் தங்களுடைய சங்குசிதமான தர்ம பூத ஞானத்தாலே அறியப்படுகிற பலபல படிகளாலே அவர தத்வங்களான தெய்வங்களை ஸ்வாமிகள் என்று எண்ணி

ஆச்ரயிப்பர்கள் ; அவ்வாறு தொழப்படுகிற தெய்வங்கள் அவரவர்கள் விரும்பின பலன்களைக் கொடுப்பதில் குறையற்றவர்கள் ; எதனாலே என்னில் ஸர்வஸ்வாமியான ஶ்ரீமந் நாராயணன் அந்தந்த சம்சாரி ஜீவர்கள் தங்கள் தங்கள் கர்ம அநுஸாரமாக பலன் பெறும்படியாக அந்தந்த தேவதைகளுக்கு அந்தர்யாமியாக எழுந்தருளி உள்ளான்.

ஆக, ***அவர் அவர் விதி வழி அடைய நின்றனரே*** என்பதாவது, ஸர்வ அந்தர்யாமியான எம்பெருமான், அவர தத்வங்களான தேவதைகளுக்கும் அந்தர்யாமி ஆனபடியால், இம்மாதிரியான அப்ராப்தமான துதிகளுக்கும், கர்மானுகுண பல ப்ரதனாகிறான்.

# ஸ்வாமி தேசிகனின் ***ஶ்ரீ வைணவதினசரி*** பாசுரம் :

***துதிகளும் அறிவு அரு சுருதியின் இறுதியின் இதயம் இது என முனி இறையவர் உரைகளும் மதுரம் மன் உதவிய மறைகளும் அடியவர் விதி வகை பரவுவர் மிக உளம் எழவே***

அதாவது,

பாகவதர்கள் உத்ஸாஹமடைய, ஸ்தோத்திரங்களையும் பாசுரங்களையும், மூல ப்ரமாணமான வேதத்தினுடைய தாத்பர்யம் இது தான் என்னும் படியாக, முனி ஸ்ரேஷ்டர்களின் விளக்க உரைகளையும், இனிமையான ஆழ்வார் அருளிய தமிழ் வேதங்களையும், வேத விரோதமற்று அநுஸந்தித்து பரவசமடைவர்.

இதில் உள்ள ***விதி வகை பரவுவர்*** என்பது  வேத விரோதமற்று அநுஸந்திப்பதாகும்.

# ஆக, ***விதி*** என்பதற்க்கு, சாஸத்திரம் வகுத்த வழி என்பதாகிறது ; அதாவது, ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனை பரதேவதையாக உணர்ந்து, மற்ற தேவதைகளின் சம்பந்தத்தை அடியோடு விலக்கி, ப்ராக்ருத பலன்களில் உள்ள தோஷங்களை உணர்ந்து, பரம ஹிதமான சரணாகதியை அநுஷ்டித்து, பரம புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்தை நிரந்தரமாக பெற வேண்டுவதாய் இருக்கிற மெய் ஞான சம்பாத்யமே  ***விதி வகை பரவுவர்*** என்பதன் தாத்பர்யம் ; மற்றபடி, சாஸ்த்திர விரோதமாக ஞானத்தை பெறுவதும், அந்த அசாஸ்த்ரீய ஞானத்துக்கு ஏற்ற அநுஷ்டானத்தை கையாள்வதும், பலத்த ப்ராரப்த பாப விசேஷத்தால் ஸித்திக்கிறபடியால், ***அவர் அவர் விதி வழி அடைய நின்றனரே*** என்று சாஸ்த்திர விரோத செயலினால் உண்டாகும் அநர்த்தம் விளக்கியபடி.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

18.8.2023
வெள்ளிக் கிழமை

***சரணம் என்கிற பதத்துக்கு ப்ரதியோகி - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. ஒரு பதத்திற்கு பல அர்த்தங்கள் இருக்க வாய்ப்பு உள்ளது.

# பதங்களின் தீர்ந்த அர்த்தங்களை நிர்ணயிக்க வேண்டிய முறையை ஸ்வாமி தேசிகன், ***மூல மந்த்ராதிகாரத்தில்*** விளக்குகிறார் :

*அர்த்தாத் ப்ரகரணாத் லிங்காத் ஔசத்யாத் ஏஷ காலத: சப்தார்தா: ப்ரவிபஜ்யந்தே ந சப்தாத் ஏவ கேவலாத்*

அதாவது, ப்ரயோஜநம், சந்தர்பம், அடையாளம், தகுதி, இடம், காலம் இவற்றுக்குத் தக்கவாறு சொற்களில் அர்த்த நிர்ணயம் ஸித்திக்கும் ; இவற்றை கணிசிக்காமல் சொற்களின் அர்த்தங்களை விளக்குவது முறை அன்று.

# அதில், *சரணம்* எனும் பதம் மூன்று அர்த்தங்களைக் கொண்டது - *ரக்ஷகன்* *உபாயம்* மற்றும் *வீடு* என்பதாகும்.

*உபாயே க்ருஹ ரக்ஷித்ரோ: சப்த: சரணமித்யயம் வர்த்ததே ஸாம்ப்ரதம் த்வேஷ உபாயார்த்தைக வாசக:*

என்கிறது அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வரி ; அதாவது, நீயே எனக்கு உபாயமாக வேண்டும் என்று ப்ரார்த்திப்பது சரணாகதியைக் குறிக்க வல்லது.

*ஸர்வஸ்ய சரணம் ஸுக்ருத்* - எம்பெருமான் ரக்ஷகனாகிறான், என்றாகிறது

*பறவை சரணாலயம்* - பறவைகளின் வீடு என்றாகிறது

*சரணம் வ்ரஜ* - உபாயமாக பற்று என்றாகிறது

# இதிஹாஸ ஸமுச்சயத்தில், வ்யாஸ மஹரிஷி,

*ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்*

அதாவது, சாஸ்த்திரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருத்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும்,

என அருளிகிறார்.

அதனால், சாஸ்த்திரங்களாக கருதப்படும் வேத வேதாந்தங்களையும், புராண இதிஹாஸ வரிகளையும், ஆழ்வார் பாசுரங்களையும் ஒன்றோடு ஒன்றை இணைக்காமலே, அதாவது சிலவற்றை ஏற்று மற்றதை கைவிட்டு, அர்த்தம் கூறுவதால், சாஸ்த்திரங்களை தவறாக புரிந்து கொள்ள நேரிடுகிறது.

அதனால் தான், சாஸ்த்திரங்களை, நல்லதொரு குரு பரம்பரையில் வந்த, நன்கு கற்று அறிந்த ஞானவானிடமே அடி பணிந்து சாஸ்த்திர அர்த்தத்தை கேட்டு அறிய வேண்டுவதாக கண்ணன் கீதையில் உரைக்கிறான்.

2. சாஸ்த்திரங்கள், *தேன வினா த்ருணம் அபி ந சலதி* என்கிறது; அதாவது, அவன் அன்றி ஒரு புல்லும் அசையாது ; ஸகல சேதன மற்றும் அசேதன வஸ்துக்களுக்கும் ஸர்வேஸ்வரன் ஆதாரமாயும், நியந்தாவாயும் மற்றும் சேஷியாயும் இருப்பது ப்ரமாண ஸித்தம் ; அதனால் ஸர்வேஸ்வரன் *பரமாத்மா* ஆகிறான் ; ஸகல சேதன மற்றும் அசேதன வஸ்துக்களும் அவனுக்கு *சரீரமாகின்றன*

# கண்ணன் அருளிய பகவத் கீதை (9-18) :

*கதிர்பர்தா ப்ரபு: ஸாக்ஷீ நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் ப்ரபவ: ப்ரலய: ஸ்தாநம் நிதாநம் பீஜமவ்யயம்*

*கதி:* - அடைய வேண்டிய இடமும்

*பர்தா* - தரிப்பவனும்

*ஸாக்ஷீ* - நேரில் பார்ப்பவனும்

*நிவாஸ:* - வீடு முதலியனவும்

*சரணம்* - கதி அற்றவர்க்கு தஞ்சமும்

*ஸுஹ்ருத்* - நல்ல மனம் பெற்றவனும்

*ப்ரபவ: ப்ரலய: ஸ்தாநம்* - பிறப்பிடமும் இறப்பிடமும்

* நிதாநம்* - உண்டாவதும் அழிவதும்

*அவ்யயம் பீஜம்* - அழியாத விதையும்

*ப்ரபு:* - அனைத்தையும் ஆள்பவன் நானே

அடைய வேண்டிய இடமும், தரிப்பவனும், நேரில் பார்ப்பவனும், வீடு முதலியனவும், கதி அற்றவர்க்கு தஞ்சமும், நல்ல மனம் பெற்றவனும், பிறப்பிடமும் இறப்பிடமும், உண்டாவதும் அழிவதும், அழியாத விதையும் அனைத்தையும் ஆள்பவன் நானே.

# ஆக, சரீர ஆத்ம பாவத்தினால், ஸர்வ லோக சாண்யனாகிறான் அந்த எம்பெருமான் ; பகவத் ராமானுஜர், ஸ்ரீபாஷ்யம் விலக்ஷணத்வாதி அதிகரணத்தில், பகவானோடு உள்ள சரீர- ஆத்ம சம்பந்தத்தை விளக்குகிறார்.

***யஸ்ய சேதநஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மனா ஸ்வார்த்தேஷு நியந்தும் தாரயிதும் ஷக்யம் தத் ஸேஷதைக ஸ்வரூபம் தத் தஸ்ய சரீரம். இதரஹ சரீரி***

என பொதுவான சரீர ஆத்ம இலக்கணத்தை அருளினார்.

அதாவது, சேதநமான ஆத்மா, அப்ருதக்ஸித்த சம்பந்தமுடைய த்ரவ்ய சேதந அசேதநங்களைச் சரீரமாக்க் கொள்ளலாம், என்றபடி.

ஆத்மா ஆதாரம் - ஆத்மா இல்லாமல், அதனுடைய சரீரம் நிலை குலையக்கூடியது.
ஆத்மா நியந்தா - ஆத்மாவின் விருப்பப்படியே, அதனுடைய சரீரம் இயங்கக்கூடியது.
ஆத்மா சேஷி - ஆத்மாவின் உபயோகத்திற்காகவே அதனுடைய சரீரம் இருக்கிறது.

ஆத்மா த்ரவ்யமாகவும், சேதநமாகவும் இருக்க ப்ராப்தம் ; சரீரம் த்ரவ்யமான சேதந அசேநங்களாய் இருக்க ப்ராப்தம் ; இரண்டுக்கும் அப்ருதக் ஸித்த சம்பந்தம் நியமம் ; மேற் கூறிய இலக்கணத்தினால், ஸர்வேஸ்வரன் (பரம) ஆத்மா ; சேதந அசேதநங்கள் அவனுக்கு சரீரம் என்றாகிறது.

# ஸ்ரீமத் ராமாயணத்தில், ஸ்ரீவிபீஷணனாழ்வார்,

***ஸர்வ லோக சரண்யாய ராகவாய மஹாத்மனே. நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணம் உபஸ்திதம்***

என்று வானரர்கள் மூலமாக ஸ்ரீராமனிடம் ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணமாகிய சரணாகதியைப் செய்து போக, ஸ்ரீராமனை பரத்வத்தோடு கூடிய பரம காருணிகத்வம் உடையவனாக ***சரண்யன்*** என்கிற பதத்தினாலே வ்யவஹரிக்கிறான்.

3. சாஸ்த்திரங்களில் இருந்து அறிந்து, ஶ்ரீராமானுஜ ஸித்தாந்த பூர்வ ஆசார்யர்களால் விளக்கப் பட்ட சரணாகதி அநுஷ்டானம், சரணாகதனால், சரண்யனிடம் அநுஷ்டிக்க வேண்டியது 1

இதற்காக, அறியப் பட வேண்டியவையான

*சரணாகதி* ,

*சரணாகதன்* மற்றும்

*சரண்யன்*

என்பதன் விளக்கங்கள்.

# ஶ்ரீ பராசர மஹரிஷி, தான் அருளிய ஶ்ரீவிஷ்ணு புராணத்தில்,

*தாவதார்த்தி ததா வாஞ்சா தவான் மோஹ ததாஸ் ஸூகம், யாவன் நயாதி சரணம் த்வாமஸேஷ அக நாசனம்*

அதாவது,

சரணாகதி அநுஷ்டானம் நான்கு வித (தர்ம, அர்த்த, காம, மோக்ஷ) பலன்களையும் அளிக்க வல்லது; அதாவது ஐஹிக ஆமுஷ்மிக கைவல்ய மோக்ஷ பலன்களை அளிக்க வல்லது, என விளக்குகிறார்.

# வேத வ்யாஸரின் வரிகளாவது:

*ஸர்வேஷாம் ஏவ லோகாநாம் மாதா பிதா ச மாதவ: கச்சத்வமேனம் சரணம் சரண்யம் புருஷ்ரப:*

அதாவது,

லக்ஷ்மிபதியான ஶ்ரீமந் நாராயணன் ஸகல ஜீவர்களுக்கும் தாம் தகப்பனாகிறான். அதாவது பலனளிக்க ஸித்தோபாயமாகிறான். அவனைச் சரணாமாக பற்றி பலன் பெறுவீர்களாக, பாண்டவர்களே!

இதனால், ஸர்வேஸ்வரன் பலனளிக்க காத்திருக்கும் ஸித்தோபாயமாகிறான்.

4. *சரணாகதி*

என்கிற செயலுக்கு அதிகாரம்:

*ஆகிஞ்சனயம்* - பக்தி யோகம் செய்ய இயலாமை

*அநன்ய கதித்வம்* என்பது இரு விஷயங்களை உள் அடக்கியது ; *ப்ரயோஜநான்தர வைமுக்யம்* - வேறு பலனை நாடாமை; *தேவதாந்தர வைமுக்யம்* - வேறு தேவதையை நாடாமை

ஆக, இந்த சரணாகதி என்கிற செயல், சரண்யனின் மன உகப்பிற்காக, அவன் சாஸ்த்திர வாயிலாக விதித்த ஐந்து அங்கங்களோடு கூடிய ஒரு அநுஷ்டானத்தை, செயல் படுத்துவது.

# *சரணாகதி* என்கிற செயல் பலனளிக்க வல்லது ; எவ்வாறு என்னில், ஸ்வாமி தேசிகன் *ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்* ,

*ஸமஸ்த புருஷார்த்தானாம் ஸாதகஸ்ய தயாநிதே; ஶ்ரீமத: பூர்வ ஸித்தத்வாத் ஸித்தோபாயம் இமம் விது: பக்தி ப்ரபத்தி ப்ரமுகம் தத் வசீகார காரணம்; தத்தத் பலார்த்தி ஸாத்யத்வாத் ஸாத்யோபாயம் விதுர்புதா:*

என அருளியுள்ளார். இதன் பொருளாவது: ஸகல பலன்களுக்கும் (ஐஹிக, ஆமுஷ்மிக, கைவல்ய, மோக்ஷ பலன்கள்) கொடுக்கும் திறன் உடையவனான கருணைக்கு இருப்பிடமான பிராட்டியோடு கூடிய எம்பெருமான் ப்ரபத்தி அநுஷ்டானத்துக்கு முன்பே இருப்பவனானபடியால் இந்த ஶ்ரீமந் நாராயணனை ஸித்தோபாயமாக வித்வான்கள் அறிகிறார்கள் பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் ஸித்தோபாயனை வசீகரிக்கக் காரணமாகிறது ; சம்சாரி ஜீவர்களின் அபேக்ஷித பலன்கள் வேறாக இருப்பதால் ஸாத்யோபாயத்தை வித்வான்கள் அறிகிறார்கள்.

# இதை விளக்கும் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வரியாவது,

*த்வமேவ உபாய பூதோ மே பவ இதி ப்ரார்த்தனா மதி: சரணாகதி ரித்யுக்தா ஸா தேவேஸ்மின் ப்ரயுஜ்யதாம்*

என்கிறது ;

அதாவது,

நீ எனக்கு உபாயமாக வேண்டும் என்கிற  ப்ரார்த்திப்பது தான் சரணாகதி. இதை ஸர்வேஸ்வரனிடத்தில் செய்ய வேண்டும்.

# இதனை, ***த்வயாதிகாரத்தில்*** ஸ்வாமி தேசிகன் விளக்குகிறார் :

***என் தலையில் உபாயாந்தரத்தை சுமத்தாதே. அவற்றைச் சுமந்தால் மேல் வரும் அபிமதமெல்லாம் தருகை ஸமர்த்த காருணிகனான உனக்கே பரமாக ஏறிட்டுக் கொள்ள வேண்டும்***

5. ***சரணாகதன்***

என்கிறவன் பலனிற்காக சரணாகதியை அநுஷ்டித்து சரண்யனை வேண்டி நிற்பவன்.

# ஆக, சரணாகதனுக்கு இலக்கணம் :

***பலனில் ஆசையும்*** மற்றும்

***அதற்கான உபாயத்தை அநுஷ்டிக்க (செயலில்) ஸாமர்த்யமும்***

அதனால், அறியப்படுவது என்னவென்றால், மோக்ஷத்தில் ஆசை உள்ளவன், பக்தி யோகத்தை அநுஷ்டிக்க, பரிபூரண ஞானமும், அதை அநுஷ்டிக்க சக்தியும் தேவையாகிறது.

இந்த ஞான, சக்தி அற்றவர்கள் பக்தி யோகத்தை அநுஷ்டிக்க தகுதி அற்றவர்கள். அவர்கள் மட்டுமே மோக்ஷத்திற்காக சரணாகதி அநுஷ்டானமே செய்யத் தகுந்தவர்கள்.

ஆக, சரணாகதன் விஷயத்தில், ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன், மனம் உகந்து, பலனுக்கு தடையான பாப புண்யங்களை விலக்குகிறான் என்பதே தாத்பர்யம்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் சரமஸ்லோகமாக பகவத் கீதையில் (18-66) அருளிவதாவது,

***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:***

அதாவது, இஷ்ட பலனுக்காக, ஒரு விதிக்ப் பட்ட சாதன உபாயத்தை செய்ய முடியாமல் வருந்துகிற நீ, அந்த சாதன உபாயத்தை விட்டு என் ஒருவனையே சரணமாகப் பற்று; அந்த பலனுக்கு தடையான அனைத்து பாபங்களில் இருந்தும் உன்னை விடுவிக்கிறேன்.

# ஆக, ஒரு முமுக்ஷுவானவன்,

*பரமாத்மனி யோ ரக்த: விரக்த: அபரமாத்மனி ஸர்வேஷணா விநிர்முக்த:  ஸ பைக்ஷம் போக்தும் அர்ஹதி*

என்கிற ஸ்ம்ருதி ப்ரமாணத்தின் படி,

எவன் உலக அநுபவங்களில் உள்ள தோஷங்களை உணர்ந்து, பரமனை அடைவதையே முக்கிய ப்ரயோஜனமாகக் கொண்டு முமுக்ஷுவாக இருக்கிறானோ, அவன் கர்ம அநுகுணமாக பிக்ஷை எடுத்து புஜிக்க வேண்டிய நிலையிலும் கலங்க மாட்டான்.

# ஸந்த்குமார ஸம்ஹிதையில்,

*யகுயோ நிஷ்வபி ஸஞ்சாதோ ஸ: ஸக்ருத் சரணம் கத: த மாதா பித்ரு ஹந்தாரம்பி பாதி பவர்திஹா*

என்கிறது, அதாவது

எந்த ஜாதி பிறந்தவராயினும், தாய் தந்தையை கொல்லும் அளவிற்கு தீய குணங்களைக் கொண்டவன் ஆயினும், ஒரு முறை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனிடத்தில் சரணாகதி அநுஷ்டித்தானேயானால், கருணை உள்ளம் கொண்ட ஸர்வேஸ்வரன், அவனை சம்சார பந்தத்திலிருந்து விடுவித்து மோக்ஷம் அளிக்கிறான்.

6. *சரண்யன்*

என்கிற பதம் தன்னை பூஜிப்பவர்களுக்கு பலன் அளிப்பவன் என்பதாகிறது.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் தன்னை பூஜிப்பதில் உள்ள ஏற்றத்தை மேலும் பகவத் கீதையில் (9-24) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

*அஹம் ஹி ஸர்வ யஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச. ந து மாம் அபிஜாநந்தி அத தத்வேநது ச்யவந்திதே*

அதாவது,

‘எந்த ஒரு தேவதையை பூஜித்தாலும் நான் அன்றோ அவர்கள் செய்யும் பூஜைகளை ஏற்று கொள்பவனாயும் பலனை கொடுப்பவனாயும் இருக்கிறேன். இதை அறியாதவர்கள் மற்ற தேவதைகளை பூஜித்து, அற்ப பலனை பெற்று அதனையும் பறி கொடுக்கின்றனர்.’

ஆக, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே ‘சரண்யன்’ என்கிற பதத்திற்கு அர்த்தமாகிறான்.

# ஸ்வாமி தேசிகன் *ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்* ,

*நிஷ்க்ருபனுடைய ஸ்வாதந்த்ரியம் பாதகம்; அஸ்வதந்த்ரனுடைய காருண்யம் பரர்க்கும் அநுபகாரமாய் தனக்கும் க்லேசாவகமாய் இருக்கும் ; ஸ்வதந்த்ரனுடைய காருண்யம் நினைத்தது முடிக்கையாலே தனக்கும் அதிரஸமாய் ஆஸ்ரயிப்பார்க்கெல்லாம் அன்றே அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்ட ப்ராப்திக்கும் உடலாய் இருக்கும்*

என அருளியுள்ளார். இதன் பொருளாவது: கருணை இல்லாதவனுடைய ஸர்வ சுதந்திரம் தீங்கை உண்டு பண்ணும் ; அதாவது, *காருண்யம்* அற்ற *பரத்வம்* கேடு விளைவிக்க காரணமாகும் ; சுதந்திரம் அற்றவனுடைய கருணை மற்றவருக்கும் உதவி அற்றதுவுமாய், தனக்கும் மன வருத்தத்திற்கு காரணமாக இருந்து போகும் ; அதாவது, *பரத்வம்* அற்ற *காருண்யம்* மற்றவருக்கும் உதவி அற்றதுவுமாய், தனக்கும் மன வருத்தத்திற்கு காரணமாக இருந்து போகும் ; கருணையோடு கூடின ஸர்வ சுதந்திரம் தனக்கு சந்தோஷிக்கத் தக்கதாயும் ; அதாவது, *பரத்வம்* மற்றும் *காருண்யம்* இரண்டும் சேர்ந்து இருக்குமாகில், அது தனக்கு சந்தோஷிக்கத் தக்கதாக இருக்கும் ; மற்றவருக்கும் உதவி பெறக் கூடிய வகையிலும் அமையும்.

# ஆக, சரண்யனுக்கு தேவையான இரண்டு இலக்கணங்கள்:

***பரத்வம்*** - தான் பலன் கொடுக்க நினைத்தால், அதை யாராலும் தடுக்க முடியாத நிலை.

***காருண்யம்*** - தன்னை அண்டி வருபவர்களிடம் கொள்ள வேண்டிய கருணை.

அந்த சரண்யனுக்கு மோக்ஷ ப்ரதத்வத்துக்கு உபயுக்த குணங்கள் *பரத்வம்* மற்றும் *காருண்யம்*

*பரத்வ உபயுக்மானவை* - *ஞானம்* (அனைத்தையும் எப்போதும் அறிபவன்), *பலம்* (ஸர்வத்தையும் தாங்குபவன்), *ஐஸ்வர்யம்* (அனைத்தையும் நியமிப்பவன்), *வீர்யம்* (மாறுதல் அற்றவன்), *சக்தி* (மிக எளிதாக எதையும் செய்வபவன்), *தேஜஸ்* (கண்டவுடன் வணங்கச் செய்பவன்)

*காருண்ய உபயுக்மானவை* - *வாத்ஸல்யம்* (தன் அடியார்களின் குற்றத்தைப் பாராமல் ஏற்றுக் கொள்வது), *ஸௌசீல்யம்* (அவதார காலத்தில் பாப சம்பந்தம் உடையவர்களிடமும் சரி சமமாக கலந்து பழகுதல்), *ஸௌலப்யம்* (எக்காலத்திலும் பாப சம்பந்தமே அற்ற நித்யஸூரிகளுக்கு சமமான போகத்தை முக்தர்களுக்கும் அளிப்பது)

7. *ப்ரதியோகி* என்கிற பதத்திற்கு அகராதியில், அர்த்தங்கள் காணின், பல உள்ளன :

*போட்டியாளர்* - விளையாட்டு, பேச்சுப் போட்டி போன்றவற்றில்

*பங்கேற்பாளர்* - கூட்டு முயற்சியில் அங்கம் வகிப்பவர்

*எதிர்ப்பாளர்* - வாதங்களில் விரோத கொள்கைகளை வெளிப்படுத்துபவர்

*எடுத்துக்காட்டு* - பிறர் பின்பற்ற முன்டோடியாக இருத்தல்

மேலும், ஒரு விஷயத்தை வ்யவஹரிக்கும் போது, *ப்ரதியோகி* என்பதாவது, அதைச் சார்ந்ததாகவோ அல்லது விரோதிப்பதாகவோ அல்லது மாற்று தன்மை கொண்டதாகவோ இருக்கலாம்.

# ப்ரணவம் மூன்று அக்ஷரம் கோண்டது; அதாவது *அ*, *உ* மற்றும் *ம* என்கிற அக்ஷரங்கள்.

கடோபநிஷத் கூறும் போது,

***அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேண உச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்***

என்று

*அ* என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய விஷ்ணு சொல்லப் படுகிறான்; *உ* என்பதால் பகவானோடு சேர்ந்தே இருக்கும் பெரிய பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய

தம்பதிகளுக்கு ***ம*** என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கும், எனப் பொருளாகிறது.

அதாவது, மகாரவாச்யனான ஜீவன் திவ்ய தம்பதிகளுக்கு தாஸனாகிறான் என்னும் போது, ஜீவனுக்கு ***ப்ரதியோகியாகிற*** திவ்ய தம்பதிகள் ஸ்வாமி ஆகிறார்கள்.

# ஆக, ***சரணம் என்கிற பதத்துக்கு ப்ரதியோகி*** என ஆராய்ந்தால், இது சம்பந்தமான

***சரணாகதி*** ,

***சரணாகதன்*** மற்றும்

***சரண்யன்***

என்பவை ஒன்றுக்கொன்று ப்ரதியோகி ஆகும்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

19.8.2023
சனி கிழமை

***பல் நிலை மூல எழுத்து - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா***

1. இலக்கண நூல்களில் ***எழுத்து*** என்ற சொல் மொழியில் வழங்கும் ஒலிகளைக் குறிக்கவும், அவ்வொலிகளுக்கு உரிய வரி வடிவத்தைக் குறிக்கவும் பயன் படுத்தப் பட்டுள்ளது. அவ்வகையில் ***அ*** என்ற எழுத்து ஒலி வடிவம், வரி வடிவம் இரண்டையும் குறித்து நிற்கின்றது.

ஆக, ***அகாரம் மூல எழுத்தாகிறது***.

# மந்திரங்களில் மூல மந்திரமாவது, ***திருவஷ்டாக்ஷரம்*** ; வேத மந்திரங்கள் பல வகையாக இருக்கும் ; அவைகளில் மூல மந்திரத்துக்கு ஏற்றம் உண்டு என்பது,

***மந்த்ராணாம் பரமோ மந்த்ர: குஹ்யாநாம் குஹ்யமுத்தமம் பவித்ரம் ச பவித்ராணாம் மூல மந்த்ர: ஸநாதந:***

என்கிறது நாரதீய கல்பம், அஷ்டாக்ஷர ப்ருஹ்ம வித்யை ; அதாவது, அநாதியான வேத மந்த்ரங்களுக்குள் மூல மந்த்ரமாகிய திருவஷ்டாக்ஷரம் மிகச் சிறந்தது ; ரஹஸ்ய மந்த்ரங்களுக்குள் மிக உயர்ந்தது ; தூய்மையை அளிக்கும் மந்த்ரங்களில் ஏற்றத்தை உடையது.

# இதில் உள்ள ப்ரணவம் மூன்று அக்ஷரம் கோண்டது; அதாவது ***அ***, ***உ*** மற்றும் ***ம*** என்கிற அக்ஷரங்கள். கடோபநிஷத் கூறும் போது,

***அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேண உவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்***

என்று

*அ* என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய விஷ்ணு சொல்லப் படுகிறான்; *உ* என்பதால் பகவானோடு சேர்ந்தே இருக்கும் பெரிய பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு *ம* என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கும், எனப் பொருளாகிறது.

அதாவது, மகாரவாச்யனான ஜீவன் திவ்ய தம்பதிகளுக்கு தாஸனாகிறான் என்னும் போது, ஜீவனுக்கு *ப்ரதியோகியாகிற* திவ்ய தம்பதிகள் ஸ்வாமி ஆகிறார்கள்.

2. ஆக, *அ* என்கிற பதம் ஸம்ஸ்க்ருத அகராதியில் விஷ்ணுவைக் குறிக்கும் ; அந்த *அ* என்கிற அக்ஷரத்திற்கு, *அவ ரக்ஷணே* என்கிற தாதுப் படி, *காப்பாற்றுபவன்* என்கிற பொருள் கிடைக்கும் ; ஆக, பகவான் ஸகல ஜீவர்களையும் *காப்பாற்றுவது* பல ப்ரகாரங்களில் அமைந்திருக்கிறது.

ரக்ஷண கார்யத்துக்கு உபயுக்தமான கருணையாவது *நிர்ஹேதுக க்ருபை* மற்றும் *ஸஹேதுக க்ருபை* என இரு வகைப் படும்.

# *நிர்ஹேதுக க்ருபையாவது* ஜீவர்களிடம் எதையும் எதிர்பார்க்காமல் எம்பெருமானுக்கு உள்ள கருணை காரணமாக அவன் ஜீவர்களுக்கு செய்து வரும் நன்மைகள்.

அதாவது,

ஆத்மாவை நித்யமாக வைத்திருத்தல்,

தர்ம்பூத ஞானத்தை நித்யமாக வைத்திருத்தல்,

நித்ய முக்தர்களுக்கு தடையற்ற கைங்கர்யத்தை கொடுத்தருளுதல்,

ப்ரளய தசையில் அசித் துல்யமாக இருந்த பத்த ஜீவர்களுக்கு ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் சரீரத்தையும் புலன்களையும் கொடுக்க ஸங்கல்பித்தல்,

இந்த ப்ரபஞ்சத்தை உண்டாக்குதல்,

சம்சாரி ஜீவர்களின் நலனுக்காக சாஸ்த்திரத்தை வெளியிடுதல்,

அந்த சாஸ்த்திரத்தில் எளிமையான மோக்ஷ வழியை அமைத்துக் கொடுத்தல்,

முக்தரை ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மீண்டும் சம்சாரதிதிற்கு அநுப்பாமல் காத்து இருத்தல்

போன்றவைகள் எம்பெருமானுக்கே உள்ள, ஜீவர்களிடம் எதையும் எதிர் பார்க்காத, ஒரு கருணை.

# *ஸஹேதுக க்ருபையாவது* ஜீவர்களிடம், பகவான் சாஸ்த்திரத்தில் விதித்தவற்றை, அவர்கள் செய்வதனால் அவனுக்கு ஜீவர்களிடம் ஏற்படும் கருணை.

ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரத்தில் விதித்த கார்யங்களை செய்து போகின்ற சம்சாரி ஜீவர்கள் பக்கலிலே உண்டாகும் கருணை.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய 'ப்ருஹ்ம ஸூத்ரம்' (3-2-8-37) மற்றும் அதற்கு விளக்க உரையாக இருக்கிற ஸ்ரீ ராமானுஜர் அருளிய ஸ்ரீ பாஷ்யத்திலும் இது விளக்கப் படுகிறது :

*பலமத உபபத்தே:*

அதாவது,

சதுர்வித புருஷார்த்தங்களும், ஜீவர்களின் ஒரு செயலினால் ப்ருஹ்மத்திடமிருந்தே பெறப் படுகிறது. அதாவது, ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணைத் தவிர எந்த ஒரு தாழ்ந்த தேவதை பலன் அளிப்பதாக சாஸ்த்திரங்கள் கூறினாலும், அவை அனைத்தும் பரம்பொருளான் எம்பெருமானின் அநுக்ரஹத்தாலேயே என உணர வேண்டும், என்பதாகிறது.

ஸர்வேஸ்வரனான கண்ணன் தன்னை பூஜிப்பதில் உள்ள ஏற்றத்தை மேலும் பகவத் கீதையில் (9-24) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***அஹம் ஹி ஸர்வ யஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச. ந து மாம் அபிஜாநந்தி அத தத்வேநது ச்யவந்திதே***

அதாவது,

'எந்த ஒரு தேவதையை பூஜித்தாலும் நான் அன்றோ அவர்கள் செய்யும் பூஜைகளை ஏற்று கொள்பவனாயும் பலனை கொடுப்பவனாயும் இருக்கிறேன். இதை அறியாதவர்கள் மற்ற தேவதைகளை பூஜித்து, அற்ப பலனை பெற்று அதனையும் பறி கொடுக்கின்றனர்.'

3. ப்ரணவத்தில் அர்த்தமான, இந்த ரக்ஷகத்வம் எந்த வரையறையும் தன்னிடம் கொள்ளாததால், இது பகவானின் ***நிர்ஹேதுக க்ருபையால்*** வரும் ***ஸர்வ ஜீவ சாமான்ய ரக்ஷகத்வம்*** என நம் பூர்வர்கள் விளக்கியுள்ளனர்.

# ஸ்வாமி தேசிகன், எம்பெருமானுக்கு நிர்ஹேதுக க்ருபையும் உண்டு, ஸஹேதுக க்ருபையும் உண்டு என ***உபகார ஸங்க்ரஹத்திலும்*** , ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ***ஸித்தோபாய சோதனாதிகாரத்திலும்*** அருளியுள்ளார்.

இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ***ரஹஸ்ய ரத்னாவளி ஹ்ருதயம்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***ப்ராப்தி உபாயமாவது இஜ்ஜீவன் சம்சார ஸாகரத்தைக் கடந்து அக்கரைப் படுகைக்கு அனபாய ஸாதனமாக ஸ்வ புத்தியாலே கோரும்படி சாஸ்த்தர உக்தமான அர்த்தம். இது ஸித்தமென்றும் ஸாத்யமென்றும் இரண்டு படியாய் இருக்கும்***

***ஸித்தோபாயம்* -** பலன் கொடுப்பனிடம், எப்போதுமே பலன் தர தயாராக இருக்கக் கூடியதான நிலை; அது, ஒரு உபாயம். இதுவே ப்ரதான உபாயம்.

திவ்ய தம்பதிகள் ஸர்வ சேஷி, என சாஸ்த்திரங்கள் அறிவிக்கின்றன. ஆக, பிராட்டியோடு கூடிய பெருமாளே ஸித்தோபாயம்.

***ஸாத்யோபாயம்* -** பலன் பெறுபவனால், ஸித்தோபாயனின் விதிப்படி, செய்ய வேண்டிய அநுஷ்டானம்; அது, ஒரு உபாயம். இது பகவத் அதீனமான அப்ரதான உபாயம். பகவத் சாஸ்த்திர விதி இருப்பதால், ஸாத்யோபாய அநுஷ்டானமும் பலனுக்கு தேவையாகிறது.

# ஸ்வாமி தேசிகன் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ***ப்ராதான ப்ரதிதந்த்ராதிகாரத்தில்***

***உடையவன் உடமையை ரக்ஷிக்கையும், ஸமர்த்தன் அஸமர்தனை ரக்ஷிக்கையும் ப்ராப்தமிரே. ரக்ஷிக்கும் போது கர்ம வஸ்யரை ஒர் உபாயத்தில் மூட்டி ரக்ஷிக்கை ஈஸ்வரனுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்***

என்று அருளிச் செய்தார்.

அதாவது,

அனைத்து சேதந அசேதநங்களும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், தன் ஆதார சக்தியாலும், தன் நியமிக்கும் சக்தியாலும், தன் அடிமை கொள்ளும் சக்தியாலும், 'சொத்துக்கு உடையவன்' எனப் பெயர் பெற்றிருந்தாலும், அவனது உடமையான சம்சாரி ஜீவர்களை பிறவிப் பிணியிலிருந்து காக்க, சம்சாரி ஜீவர்கள் செய்து போக, சாஸ்த்திரத்திரத்தில் ஒரு உபாயத்தை விதித்திருப்பது, பரிபூரண சுதந்திரனான எம்பெருமானின் தன் இச்சை காரணமாகவே.

4. ஆக, சம்சாரி ஜீவர்களின் மோக்ஷார்த்த ப்ராப்த்த்திக்கான, அதாவது, சம்சார பந்த நிவ்ருத்தியான பகவத் ரக்ஷணத்வம், *அ* என்கிற அக்ஷரத்தினால் அறிய ஒண்ணாது. ஆனால், மற்ற ப்ரமாணல்களினால், ஸாத்யோபாயம் சாஸ்த்திர விஹிதமே என தெளிய வேண்டும்.

# இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் ***மூல மந்த்ராதிகாரத்தில்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***இந்த ரக்ஷகத்வம் அவச்சேதகமில்லாமையாலே ஸர்வ விஷயம். ரக்ஷா ப்ரகாரங்கள் விஷயங்கள் தோறும் ப்ரமாணங்கள் காட்டினபடியிலே விசித்திரங்களாயிருக்கும். இது ஹேது நிர்தேஷம் பண்ணாமையாலே நிரூபாதிகமாய் தோன்றினாலும் ஸாபராத சம்சாரிகளுக்கு மோக்ஷாதிப்ரதானத்தில் ஸ்வதந்தரனான ஈஸ்வரன் தான் ஸங்கல்பித்து வைத்ததொரு வ்யாஜத்தை அபேக்ஷித்திருக்கும்***

# ஸர்வேஸ்வரன் சம்சாரி ஜீவர்கள் விஷயத்தில் உபாயமாக இருந்து ரக்ஷிக்கிறான் என்பது, ***நாராயண*** பதத்தில் உள்ள ***அயன*** சப்தம் காட்டுகிறது.

இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் ***மூல மந்த்ராதிகாரத்தில்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***எங்கனேயென்னில் 'இண் கதௌ' என்கிற தாதுவிலே 'இயதே அனேன' என்று அயன சப்தத்தில் கரண வ்யுத்பத்தியாலே ஈஸ்வரன் உபாயமாயும்***

என கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஈஸ்வரன் ஸித்தோபாயமாகிறான் என்பது தெளிவு.

ஆனால், உபாயம் என்பது ஸித்தோபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் சொல்லப் படுகிறது.

# திருவஷ்டாக்ஷரத்தில், ஸாத்யோபாயாமான சரணாகதி அநுஷ்டானம், அகிஞ்சனன் விஷயத்தில் மோக்ஷ காரணம் என்பது ***நம:*** என்கிற ப்ரமாண ஸித்தம்.

இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் ***ஸாத்யோபாய சோதனாதிகாரத்தில்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***நமஸ்ஸூ ஆத்மநிக்ஷேபபரமென்னுமிடம் 'நமஸ்காராத்மகம் யஸ்மை விதாய ஆத்ம நிவேதனம்' இத்யாதிகளிலே ப்ரஸித்தம். ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் 'ப்ரார்த்தனா பூர்வக ஆத்மநிக்ஷேபம்' கண்டோக்தமாயிற்று***

ஆக, ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரங்கள் விதித்த ஸாத்யோபாயத்தினால் ஸித்தோபாயனாகிறான்.

# சரணாகதி சாரமான சரமஸ்லோகத்தின் பொதுவான அர்த்தத்தை ஸ்வாமி தேசிகன், ***ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்தில்*** தெளிவு படுத்தி உள்ளார்.

***ஸூதுஷ்கரேண ஷோசேத்யோ யேன யேன இஷ்ட ஹேதுநா ஸ ஸ தஸ்ய அஹம் ஏவ இதி சரமஸ்லோக ஸங்க்ரஹ:***

அதாவது,

எந்த *பல அபேக்ஷைக்கு* ஸாதநமாகிய உபாயத்தை செய்ய முடியாமல் எவன் வருந்துகாறானோ, அவனுக்கு அந்த ஸாதநமாக நானே இருந்து *ரக்ஷிக்கிறேன்* என்பதே சரமஸ்லோகத்தின் திரண்ட பொருள்.

5. அந்த *அ* என்கிற அக்ஷரத்திற்கு, மேலும், *ஜகத் காரணன்* என்கிற பொருளும் கிடைக்கும்.

# பராசர பட்டரின் அஷ்ட ஸ்லோகி :

***அகாரார்தோ விஷ்ணு: ஜகத் உதய: ரக்ஷா ப்ரளய க்ருத் ; மகாரார்தோ ஜீவ: தத் உபகரணம் வைஷ்ணவம் இதம் ; உகாரோ: அநன்யார்ஹம் நியமயதி சம்பந்தம் அநயோ: த்ரயி சாரஸ்த்ரயாத்மா ப்ரணவ இமம் அர்த்தம் ஸமதிஷத்***

அதாவது,

***அகாரார்தோ விஷ்ணு: ஜகத் உதய: ரக்ஷா ப்ரளய க்ருத்* -** உலகத்தை படைத்து காத்து அழிக்கும் செயலான ஜகத் வ்யாபாரத்தை அகார வாச்யனான விஷ்ணுவைக் குறிக்கும்

***மகாரார்தோ ஜீவ: தத் உபகரணம் வைஷ்ணவம் இதம்* -** மகாரம் விஷ்ணுவின் சேஷ பூதனான ஜீவனைக் குறிக்கும் ;

***உகாரோ: அநன்யார்ஹம் நியமயதி சம்பந்தம் அநயோ: -** உகாரத்தினால் அவதாரணம் ( ***ஏவ*** - ***மட்டும்*** - ***ONLY*** ) ஸித்திக்கும் ; அதனால் மகார வாச்யனான ஜீவன் அகார வாச்யனான எம்பெருமானுக்கே சேஷ பூதன் ஆகிறான் ; வேறொருவருக்கும் இல்லை என்பது ***அந்ய யோக வ்யவச்சேதத்தால்*** ஸித்தம்

***த்ரயி சாரஸ்த்ரயாத்மா ப்ரணவ இமம் அர்த்தம் ஸமதிஷத்* -** மூன்று வேத சாரத்திலும் ப்ரணவத்தில் உள்ள மூன்று அக்ஷரங்களினாலும் (அ, உ, ம) இந்த விளக்கம் சொன்னபடி.

6. அந்த *அ* என்கிற அக்ஷரத்திற்கு, மேலும், *ஸர்வ ஆதாரன்* போன்ற பொருளும் கிடைக்கும்.

வாமந புராணத்தில்,

***அஷ்டாக்ஷர சரீராங்க ப்ரணவாத்யக்ஷரேண து ; அகாரேண அகில ஆதார: பரமாத்மா அபிகீயதே ; ஸமஸ்த சப்த மூலத்வாத் அகாரஸ்ய ஸ்வபாவத: ஸமஸ்த வாச்ய மூலத்வாத் ப்ருஹ்மணே அபி ஸ்வபாவத: வாச்ய வாசக சம்பந்த: தயோரர்த்தாத் ப்ரதீயதே***

எனப் படுகிறது.

அதாவது,

# ***அஷ்டாக்ஷர சரீராங்க ப்ரணவாத்யக்ஷரேண து* -** திருவஷ்டாக்ஷத்துக்கு ப்ரணவம் அங்கமாகிறது

# ***அகாரேண அகில ஆதார: பரமாத்மா அபிகீயதே* -** ப்ரணவத்தின் முதல் எழுத்தான அகாரம், ஸர்வ ஆதாரனான ஸர்வேஸ்வரன் சொல்லப் படுகிறான்

# ***ஸமஸ்த சப்த மூலத்வாத் அகாரஸ்ய ஸ்வபாவத:* -** சொல்லுக்கெல்லாம் மூல எழுத்தானது அகாரம்

# ***ஸமஸ்த வாச்ய மூலத்வாத் ப்ருஹ்மணே அபி ஸ்வபாவத:* -** அதானல் வஸ்துக்களுகெல்லாம் மூலமான ஸர்வேஸ்வரன் அகாரத்தின் பொருள்

# *வாச்ய வாசக சம்பந்த: தயோரர்த்தாத் ப்ரதீயதே* - இவ்விதமாக, எழுத்துக்கும் எழுத்தால் அறியப்படுபவனுக்கும் உள்ள தொடர்பால்ள, அகார வாச்யனான ஸர்வேஸ்வரன் அறியப் படுகிறான்ற.

7. அந்த ***அ*** என்கிற அக்ஷரத்திற்கு, மேலும், ***பெரிய பிராட்டி*** என்கிற பொருளும் கிடைக்கும் ; எவ்வாறு என்றால், அந்த ***அ*** என்கிற அக்ஷரத்திற்கு, ***அவ ரக்ஷணே*** என்கிற தாதுப் படி, பெரிய பிராட்டியின் நிலையும் சொன்னபடி ஆயிற்று :

# பிராட்டியோடு கூடிய எம்பெருமானே ரக்ஷகத்வத்துக்கு காரணம், என்பது ப்ரமாண ஸித்தம்.

***லக்ஷ்ம்ய ஸஹ ஹ்ருஷிகேச: தேவ்யா காருண்ய ரூபயா. ரக்ஷக ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே***

என்கிற பாஞ்சராத்ர சாஸ்த்திரங்களினாலும்,

எப்போதும் பிரியாத லக்ஷ்மி பிராட்டியுடன் சேர்ந்து எம்பெருமான் ரக்ஷண கார்யத்தை செய்கிறான், என அறியலாம்.

# பராசர பட்டர், ஶ்ரீகுணரத்நகோசத்தில், (34)

***யுவத் வாதௌ துல்யேபி அபரவஷதா சத்ரு சமன் ஸ்திரத்வாதீன் க்ருத்வா பகவதீ குணாத் பும்ஸ்தவ ஸுலபான். த்வயீ ஸ்த்ரீத்வைகாந்தான் மதிம் பதி பாரார்த்ய கருணா க்ஷமாதீன்வா போக்தும் பவதி யுவயோ: ஆத்மிநி பிதா***

அதாவது,

ஓ ரங்கநாயகியே ! பரதத்வமான இருவருக்கும் தன்மைகள் ஒன்றாக இருப்பினும், தாங்களாகவே அதை பகிந்து கொண்டிருக்கிறீர்கள். ‘பதி பாரார்த்யம்’ என்கிற குணத்தை நீ, ஸ்த்ரீ லக்ஷணமாகக் கொண்டு, உன் இஷ்டபடி நீயே ஏறிட்டு கொண்டிருக்கிறாய் !

ஆக, பிராட்டிக்கு விபுத்வம், உபாயத்வம் மற்றும் ஜகத் காரணத்வம் அனைத்தும் எம்பெருமானைப்போல் உண்டு, என்பது சாஸ்த்திர விளக்கம்.

# பராசர பட்டர், ஶ்ரீகுணரத்நகோசத்தில்,

***தத் அந்தர்பாவாத்வாம் ந ப்ருகபிததே ஸ்ருதிரபி***

என அருளினார்.

அதாவது, எம்பெருமானுடன் சேர்ந்தே இருப்பதினால், பிராட்டியை தனியாக ஸ்ருதிகள் கூறவில்லை.

இதையே ஸ்வாமி தேசிகன், ***ஸந்நியோகஸிஷ்ட வ்யாகரண நியாயத்தாலே*** ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் விவரித்தார்.

அதாவது, ***ஸஹவா ப்ரவ்ருத்தி, ஸஹவா நிவ்ருத்தி*** (சேர்ந்தே இருக்கும் அல்லது சேர்ந்தே போகும்) என்கிற அந்த நியாயம் என்னவென்றால், ஒரே இடத்தில் சேர்ந்தே இருக்கக் கூடியவைகளைக் கூறும் போது, ஒன்றை சொல்லும் போது மற்றொன்றும் கூறியதாகும்.

ஆக, எம்பெருமானை சொல்லும்மிடமெங்கும், ***அகலகில்லேன்*** என்று இருக்கும் பிராட்டியையும் சொல்லிற்றாம் என்பதாக விளக்கப் படுகிறது.

8. இவ்வாறு ***பல் நிலை மூல எழுத்து*** என்பது மூல எழுத்தான அகாரத்துக்கு, பல பொருட்கள் ஸித்தம் என்பது ப்ரமாண பலத்தால் உணரலாம்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

20.8.2023
ஞாயிறு கிழமை

***சூக்ஷ்ம சரீர விஸர்ஜனம் - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா***

1. சம்சாரி ஜீவன் ஒரு ப்ராக்ருத சரீரத்திலிருந்து மற்றொரு ப்ராக்ருத சரீரத்தை அடையும் போது, தன்னோடு சில ப்ரக்ருதி பரிணாமமான அசேதநங்களை இழுத்துச் செல்கிறது ; இதை, ப்ருஹதாரண்யக உபநிஷத் வரி :

***தமுத்க்ராந்தம் ப்ராணோ அநுக்ராமதி ப்ராண அநுக்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநுக்ராமந்தி***

என விளக்குகிறது ; அதாவது,

சரீரத்தை விட்டு வெளியேறும் ஜீவன், பூத ஸூக்ஷமங்களோடும், ப்ராண வாயு மற்றும் இந்திரயங்களோடும் செல்கிறான். பிறகு, ஸ்தூல சரீரத்தை பெறும் போது அத்துடனேயே பெறுகிறான். இதனால், அறிய வேண்டுவதாவது, ஸூக்ஷ்ம சரீரத்தோடு, சம்சாரி ஜீவர்கள் ஸ்தூல சரீரத்தை விட்டு கிளம்புகிறார்கள். மோக்ஷ உபாயத்தை அநுஷ்டிக்காத சம்சாரி ஜீவர்கள் விஷயத்தில், மற்றொரு ஸ்தூல தேஹம், கர்ம க்ருதமாக ஏற்படும் வரையில், இதே பூத ஸூக்ஷமங்களோடும், ப்ராண வாயு மற்றும் இந்திரயங்களோடும் அவர்கள் இருந்து போகிறார்கள்.

# இதையே, ஸர்வேஸ்வரனான கண்ணன் கீதையில் (15-8)

***சரீரம் யத் அவாப்நோதி, ய: ச அபி, உத்க்ராமாதி ஈஸ்வர:, க்ருஹித்வா ஏதாநி ஸம்யாதி, வாயு: கந்தாந் இவ ஆஸயாத்***

என அருளினான். அதாவது, சரீரத்தை விட்டு வெளியேறும் போதும் வேறொரு சரீரத்தை அடையும் போதும், சம்சாரி ஜீவன், பூத ஸூக்ஷமங்களோடும், ப்ராண வாயு மற்றும் இந்திரயங்களோடும் செல்கிறான். மணமுள்ள பூவிலிருந்து மணத்தை காற்று எடுத்துச் செல்வது போல இந்த்ரியங்களையும் நுண்ணிய பூதங்களையும் ஜீவன் எடுத்துச் செல்கிறான்.

# ப்ரமாணங்கள்,

***நாயம் தேவோ நா மர்த்யாவோ ந த்ரியக் ஸ்தாவரோபிவா. ஞானானந்த மய்ஸ்வாத்மா ஸேஷோஹி பரமாத்மன:***

என்கிறது.

அதாவது,

இந்த ஜீவன், தேவனல்லன், மனுஷ்யனல்லன், மிருகமல்லன், தாவரமல்லன். ஆனந்தமயமான இந்த ஜீவாத்ம பரமாத்மாவான ஶ்ரீமந் நாராயணனுக்கு சேஷன்.

# பராசர மஹரிஷி, ஶ்ரீவிஷ்ணு புராணத்தில்

*__அநேக ஜன்ம ஸாஹஶ்ரீம் ஸம்சார பதவீம் வ்ரஜன். மோஹ ஸ்ரமம் ப்ர்யாதோஸௌ வாஸனா ரேணு குண்டித:__*

என அருளினார்.

அதாவது,

சம்சாரி ஜீவன், அநேகமாயிரம் ஜன்மங்காளக, சம்சாரத்தில் சிக்கி,

ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் கலந்த ப்ரக்ருதி என்கிற அசேதந வஸ்துவின் பரிமாணங்களாலான சரீரத்தை பெற்று,

மோஹம், அக்ஞானம் போன்ற புழுதிகளால் மூடப்பட்டு,

இந்த துக்க மயமான சம்சார வாழ்வே போக்யம் என கருதும் அளவிற்கு 'ப்ரக்ருதியின் சேர்க்கை'

*__ஸம்ஸர்கஜா தோஷ குணா பவந்தி__* என்கிற வரிக்கு ஏற்ப,

இந்த சம்சாரத்தில் உழல்கிறான்.

# ஒவ்வொரு முறை சரீரத்தை விட்டுக் கிளம்பும் போது ஸூக்ஷ்ம ப்ராக்ருத சரீரத்தோடும், இந்த்ரிய ப்ராணனோடும் கிளம்புகிறான்.

2. இதனால், இந்த *__வாசனை__* மற்றும் *__ருசி__* ஆகியவைகளின், பிறவிதோரும் ஏற்படும் சம்பந்தத்திற்கு காரணமாகிறது ; இது, அந்த இந்த்ரியங்களின் தொடர்ச்சியினால் ஏற்படுகிறது ; ஸ்வாமி தேசிகனின் *__உபோத்காதாதிகரம்__*

*__கர்ம அவித்யாதி சக்ரே பிரதி புருஷம் இஹ அநாதி சித்ர ப்ரவாஹே தத் தத் காலே விபக்தி: பவதி ஹி விவிதா சர்வ சித்தாந்த சித்தா தத் லப்த ஸ்வ அவகாச ப்ரதம குரு க்ருபா க்ருஹ்யமாண கதாசித் முக்தைச்வர்ய அந்த சம்பத் நிதிரபி பவிதா கச்சித் இத்தம் விபச்சித்__*

அதாவது,

இந்த சம்சாரி ஜீவர்கள், கர்ம அநுகுணமான 'ப்ரக்ருதியால் ஆன சரீர' சம்பந்த காரணமாக செயற்கை தன்மையை அடைகிறார்கள். இந்த செயற்கை தன்மைக்கு காரணம் ஐந்து. அவையாவன:

*__அவித்யை__* - சரீரத்தையே ஆத்மாவாகவும், ஆத்மாவை சுதந்திரனாகவும் நினைத்தல் போன்ற உண்மைக்கு மாறான ப்ரமங்கள்.

*__கர்மம்__* - அவித்ய்யையால் ஜீவன் செய்யும் சாஸ்த்திரத்தை மீறிய செயல்கள்.

*__வாசனை__* - அவித்யா மற்றும் கர்மம் காரணமாக ஜீவனுக்கு உண்டாகும் ஸம்ஸ்காரம் (தன்மை).

*__ருசி__* - வாசனைக்கு ஏற்ப உண்டாகும் செயலில் விருப்பம்.

*__ப்ரக்ருதி சம்பந்தம்__* - மேலுள்ள நான்கு காரணங்களினால் உண்டாகும் ப்ராக்குத சரீர சம்பந்தம்.

இந்த சரீர சம்பத்தினால் மீண்டும் அவித்யை, கர்மம், வாசனை, ருசி மற்றும் ப்ரக்ருதி சம்பந்தம். இச்சுழலே மோக்ஷ பலனுக்கு தடையாகிறது.

3. சரீரத்திலிருந்து, முக்தனாகப் போகும் ஜீவன், வெளியேறி பரமபதத்தை அடையும் ப்ரகாரம் ;

# ஸ்வாமி தேசிகன் ***நிர்யாணாதிகாரத்தில்***

***மனஸி கரண க்ராமம் பிராணே புன புருஷே ச தம் ஜடிதி கடயன் பூதேஷ்வேநம் பரே ச தமாத்மநி ஸ்வவித் அவிதுஷோ இத்தம் சாதாரணே சரணேர்முகை நயதி பரதோ நாடீபேதை யதோசிதம் ஈஸ்வர***

என அருளினார் ;

அதாவது,

மனத்தில் இந்த்ரியங்களையும், மனத்தை ப்ராணனிடமும், ப்ராணனை ஜீவனிடமும், ஜீவனை பஞ்சபூதங்களிலும், பஞ்ச பூதங்களுடன் கூடிய ஜீவனை (அதாவது ஸூக்ஷ்ம சரீரத்தோடு) தன்னுடனும் எம்பெருமான் விரைவாக சேர்த்துக் கொள்கிறான். ஆக, ஜீவன் வெளிக் கிளம்புதல் என்பது பண்டிதன் முதல் பாமரன் வரை அனைவருக்கும் பொதுவாகவே உள்ளன. ஆனால் அவரவர்களுக்கு ஏற்றபடி, அவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு ஏற்ப, அதாவது நரகம், ஸ்வர்கம், கைவல்யம், மீண்டும் பிறவி, பரமபதம் போன்றவைக்கு ஏற்ப எம்பெருமான் மேற்கொண்டு வழி நடத்துகிறான்.

# ஸ்வாமி தேசிகன், அர்ச்சிராதி மார்க்கத்தை,

***ஜ்வலந திவஸ ஜ்யோத்ஸ்நா பக்ஷ உத்தராயண வத்ஸரான் பவந தபந ப்ராலேயாம்ஷூன் க்ரமாதச்சிரத்யுதிம் ஜலதர பதிம் தேவாதீஷம் ப்ரஜாபதிம் ஆகத: தரதி விரஜாம் தூரே வாசஸ்தத பரமத்புதம்***

என விளக்குகிறார் ;

அதாவது,

அக்னி, பகல் பொழுதின் தேவதை, சுக்ல பக்ஷத்தின் தேவதை, உத்தராயணத்தின் தேவதை, ஸம்வத்ஸரத்தின் தேவதை ஆகியோர்களின் இருப்பிடத்தை ஒரு சரணாகதன் சரீரத்திலிருந்து கிளம்பிய பிறகு அடைகிறான்; அதற்கு மேல், வாயு தேவதை, சூரியன், சந்திரன் ஆகியவர்களை அடைகிறான் ; பின், மின்னல் , வருணன் , இந்திர, ப்ரஜாபதி ஆகியவர்களை அடைகிறான் ; அதன் பின்னர் விரஜா நதியை கடக்கிறான் ; அதன் பின்னர் நடக்கவிருக்கும் வியப்பான செயல்கள் வார்த்தைக்கும் மனத்திற்கும் எட்டாதவைகளாகும்.

# ஸ்வாமி தேசிகன், பரமபத ப்ராப்தியை,

***விதமஸி பதே லக்ஷ்மீகாந்தம் விசித்திர விபூதிகம். ஸசிவ கமித: ஸம்பத்யாவிர்பவதி ஸஹஜ ஆக்ருதி: ஸ்புடதத் அப்ருதக் ஸித்தி: ஸித்யத் குணாஷ்டக தத்பலோ. பஜதி பரமம் ஸாம்யம் போகே நிவ்ருதி கதோஜ்ஜிதம்***

என விளக்குகிறார் ;

அதாவது,

ஸாலோக்ய, ஸாரூப்ய, ஸாமீப்ய நிலைகள் ஏற்படுகிறது.

இந்த ப்ரக்ருதிக்கு அப்பால் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில், வியக்க வைக்கும் இரண்டு விபூதிகைள (நித்ய விபூதி மற்றும் லீலா விபூதி) தன் வசத்தில் கொண்டவனாகிய, மஹாலக்ஷ்மி பிராட்டியின் நாயகனான, ஸ்ரீமந் நாராயணன் நித்ய வாஸம் செய்து கொண்டு உள்ளான் . சரணாகதன், ஆதிவாஹிகர்களால் வழி நடத்தப்பட்டு, அவனை அடைகிறான். அப்போது அந்த ஜீவனுக்கு உண்டான இயற்கையான தன்மைகள் வெளிப்படுகின்றன. அதாவது, பாப புண்ய கர்ம ஸம்பந்தத்தினால் ஏற்பட்ட சுருங்கிய ஞானம் அகன்று விடுகிறது. அனைத்தையும், அனைத்து கலத்திலும் உள்ளது உள்ள படி அறியும் தெளிவான ஞானம் உண்டாகிறது. தான் எம்பெருமானை விட்டு ஒரு போதும் அகல முடியாதவன் என உணர்கிறான். பாபம் அற்ற தன்மை போன்ற ஜீவனுக்கு உண்டான இயல்பான எட்டு நற்குணங்களை கிடைக்கப் பெறுகிறான். எம்பெருமானுக்கு ஸமமான ஸுக அநுபவங்களைப் பெறுகிறான். கர்மத்தின் அடிப்படையில் ப்ராக்ருத லோகத்திற்கு வரமுடியாத நிலையையும் அடைகிறான்.

ஆக, முக்தனாகப் போகும் ஜீவனின் ***ஸூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்*** அந்திம ப்ராக்ருத ஸ்தூல சரீர த்யாகத்தின் பிறகு, ப்ராக்ருத லோகங்களைக் கடந்து சென்று, அப்ராக்ருத லோகத்தை அடையும் முன்பு வ்ரஜா நதிக் கரையிலே ஏற்படுகிறது.

4. இந்த, ***ஸூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்*** பற்றிய ஸ்ரீராமானுஜர் அருளிய ***சரணாகதி கத்யம்*** :

# இந்த க்ரந்தத்தில், பகவானோடு உரையாடலாக, சரணாகதி அநுஷ்டிக்கப் பட்டது. சரணாகதனுக்கு, பகவத் அநுக்ரஹ ப்ரகாரம் இந்த வரிகளால் விளக்குகிறார், பகவத் ராமானுஜர். மோக்ஷ தசையில் ***தாற்காலிக பகவத் ஸாக்ஷாத்காரம்*** என்னும் பரக்ஞானம் ப்ரார்த்திக்கபடுகிறது :

***சரீரபாதஸமயே து கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபூத்த: மாமேவாவலோக்யந் அப்ரச்யூத பூர்வ ஸமஸ்கார மநோரத: ஜீர்ணமிவ வஸ்த்ரம் ஸுகேநேமாம் ப்ரக்ருதிம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபாம் விஸ்ருஜ்ய, ததாநீமேவ மத்ப்ரஸாதலப்த மச்சரணாரவிந்தயுகள ஐகாந்திகாத்யந்திக பரபக்தி பராக்ஞாந பரம பக்திக்ருத பரிபூர்ணாநவரத நித்யவிஷததம அநந்யப்ரயோஜந அநவதிகாதிஷய ப்ரிய மதநுபவஸ்த்வம் ததாவித மதநுபவஜநித அநவதிகாதிஷய ப்ரீதிகாரித அஷேஷாவஸ்தோசித அஷேஷஷேஷதைக ரதிரூப நித்யகிங்கரோ பவிஷ்யஸி***

அதாவது,

***சரீரபாதஸமயே து கேவலம் மதீயயைவ தயயா*** - சரீரம் விழும் போது பகவத் க்ருபையால் மட்டுமே

***அதிப்ரபூத்த: மாமேவாவலோக்யந்*** - குறைவற்ற பகவத் ஞானம்

***அப்ரச்யூத பூர்வ ஸமஸ்கார மநோரத:*** - தடையற்று முன்பு அபேக்ஷித்தபடி

***ஜீர்ணமிவ வஸ்த்ரம் ஸுகேநேமாம் ப்ரக்ருதிம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபாம் விஸ்ருஜ்ய*** - அழுக்கு வஸ்த்தரங்களைக் களைவது போல ஸ்தூல ஸூக்ஷ்ம ப்ராக்ருத உடலைக் களைந்து (அதாவது, வ்ரஜையைக் கடக்கும் போது தான் ஸூக்ஷ்ம உடல் களையப் படுகிறது)

***ததாநீமேவ மத்ப்ரஸாதலப்த மச்சரணாரவிந்தயுகள*** - மேல் காலத்தில், பகவத் அநுக்ரஹத்தால் பலன் பெற்று, (அதாவது பரமபதத்தில்)

***ஐகாந்திகாத்யந்திக பரபக்தி பராக்ஞாந பரம பக்திக்ருத*** - அதாவது, பகவத் திருவடிகளை வணங்கி பரபக்தி பரக்ஞான பரம் பக்தி ஆகியவை பெற்று

***பரிபூர்ணாநவரத நித்யவிஷததம அநந்யப்ரயோஜந*** - எல்லை அற்ற நிரந்தரமான ப்ரயோஜநான்தர ருசி முற்றிலும் விலகி

***அநவதிகாதிஷய ப்ரிய மதநுபவஸ்த்வம்*** - பகவத் ப்ரேமையும் பெருமையிம் உடைத்தான

*ததாவித மதநுபவஜநித அநவதிகாதிஷய ப்ரீதிகாரித* - அதிசயமான பகவத் அநுபவமானது

*அஷேஷாவஸ்தோசித அஷேஷஷேஷதைக ரதிரூப* - அன்போடு சேஷ வ்ருத்திகளாவது

*நித்யகிங்கரோ பவிஷ்யஸி* - நிரந்தரமாக கிடைக்கப் பெறட்டும், என்பது பகவத் வசனமாக அருளப் பெற்றது.

ஆக, இங்கு பரக்ஞானமாவது *ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபாம் விஸ்ருஜ்ய* என்கிறபடி, வ்ரஜா நதியைக் கடக்கும் போது ஸுக்ஷ்ம தேஹத்தையும் துறந்த பிறகு, அப்ராக்ருத திருமேனியோடே பகவத் தரிசனம் பெற்று, அஷ்ட குண ஆவிர்பாவம் பெறும் நிலையாகிறது.

லீலா விபூதியின் எல்லையில் (ப்ரக்ருதி மண்டலத்தின் முடிவில்) 'வ்ரஜா' ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த ஆற்றின் மறு பக்கம் நித்ய விபூதி. அந்த ஆற்றில் இரங்கியவாறே, மோக்ஷத்தை அடைகிற ஜீவர்களுடைய *சூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்* ஏற்படுகறது ; அதாவது, ஸுக்ஷ்மமான சரீரம் (இந்த்ரிய ப்ராணன் ஆகியவற்றோடு) களையப் படுகிறது.

5. இந்த, *சூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்* பற்றிய சில விசாரங்கள் :

# உபநிஷத் சாரமான வேத வ்யாஸர் அருளிய *ப்ருஹ்ம ஸுத்ரம்* (3-1-3)

***ப்ராண கதே: ச***

என்பதால் விளக்குகிறது.

இதனால், சரணாகதன் விஷயத்தில், வ்ரஜா நதி தீரத்தில், களையப் படும் இந்திரயங்கள், மற்றொரு ஜீவனுக்கும் தேவையாகாது ஏனெனில், ஸகல பத்த ஜீவர்கள் விஷயத்தில், ப்ரளய காலம் வரை அதே இந்திரயங்களோடு ஜீவன் செல்கிறான். இந்திரிய குறைபாடுகள், சம்சாரி ஜீவர்களுக்கு, கர்ம அனுகுணமாக ஏற்படுகிறது.

# இவ்விஷயத்தில், யதீந்திர மத தீபிகை வரிகளாவது :

***இந்த்ரியாணாம் முக்தி தசாயாம் அப்ராக்ருத தேச கமனா ஸம்பவாத் இஹைவ யாவத் ப்ரளயம் ஸ்திதி: கரண விதூரை: அன்யை: பரிக்ரஹோ வா***

அதாவது,

ஜீவன் மோக்ஷத்தை அடையும் போது, வ்ரஜா நதியைக் கடக்கும் முன்னர், *சூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்* ஏற்படுகறது ; அதாவது, ப்ராக்ருத இந்த்ரியங்களோடு ஸுக்ஷ்ம சரீரத்தை விட்டு விட்டு அப்ராக்ருத லோகத்தை அடைகிறான். ப்ரளய காலம் வரை இந்த இந்நரியங்கள் தேஹ சம்பந்தமின்றி இங்கு இருக்கும். ப்ரளய காலத்தில் அசேதன தத்வங்களான இந்திரியங்கள் ஸாதிவீக அஹங்கார தத்வங்களோடு லயத்தை அடையும் போது, முக்தனானவனின் இந்திரியங்களும் லயத்தை அடைகிறது.

வ்ரஜா தீரத்தில் விட்டு செல்லப் பட்ட இந்திரயங்கள், *கரண விதூரை: அன்யை: பரிக்ரஹோ வா* என்கிறபடி, அங்க ஹீனமுடைய மற்றவர்களால், ஒரு சில சமயம் உபயோகிக்கலாம், எனக் கூறப் பட்டிருக்கிறது. இதன் தாத்பர்யமாவது, அந்த இந்திரியங்கள் ப்ரளயம் வரை ப்ராக்ருத லோகத்தில், நிலைத்திருக்கும் என்பதை உறுதி படுத்தவே, ஆகிறது. ஒருவரின் ஸுக்ஷ்ம ப்ராக்ருத சரீரம் மற்றும் ப்ராண இந்த்ரியங்கள் மற்றவர் உபயோகிக்க முடியாது ஏனெனில், இந்த்ரியங்கள் வாசனை, ருசி போன்ற தன்மைகளுக்கு காரணமாவதால் ; சம்சாரி ஜீவர்களுக்குள் வாசனை, ருசி போன்ற தன்மைகளுக்கு வேறுபாடுகள் உண்டு.

# அசித் விலக்ஷணமான கைவல்ய விளக்கம், *யதீந்த்ர மத தீபிகையில்* சொல்லப் பட்டிருக்கிறது.

***ப்ரக்ருதி சம்பந்தம் போவதை ஆசைப்படுகிறவர்கள் கைவல்யத்தை ஆசைப் படுகிறார்கள் என்றும் பகவானுடைய அனுபவத்தை ஆசைப் படுகிறார்கள் என்றும் இருவகைப் படுவார்கள். கைவல்யம் என்பது உடம்பை விட்டு பிரிந்த ஆத்மாவை ஞான யோகத்தால் அடைந்து அதை அனுபவித்துக் கொண்டிருப்பது. இந்த அனுபவமானது அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரம்பதத்துக்கு போனவனுக்கே வரும் என்றும் … சிலர் சொல்லுவவார்கள். அர்ச்சிராதி மார்கத்திலே போனவன் திரும்பி வருகிறதில்லை என்று சொல்லப் படுகையால் ப்ரக்ருதி மண்டலத்திலேயே ஓர் இடத்தில் இந்த அனுபவம் என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள்***

கைவல்ய அநுபவம் பெற்றவர்களைப் பற்றிச் சொல்லும் முதல் பக்ஷம் ஸித்தாந்த ஏகதேசிகள் மதம் ; இரண்டாவது ஶ்ரீதேசிகன் ஶ்ரீபாஷ்யத்தை அனுசரித்துச் சொல்லுகிற மதம்.

ஆத்மாநுபவத்தைப் பெற்றவனுக்கு, அது அநுபவிக்கப் படுகிற இடம் எது என்பது ஶ்ரீவிஷ்ணு புராணத்தில் கூறப் படுகிறது.

***யோகிநாம் அம்ருதம் ஸ்தானம் ஸ்வாத்ம ஸந்தோஷ காரிணாம்***

ஸநகாதி யோகிகள் தங்கியிருக்கும் இடமே ஆத்மாநுபவம் செய்கிறவர்களுக்கு இடமாகும் என்று ஶ்ரீவிஷ்ணு புராணத்தில் கூறப் படுகிறது. ஸநகாதி யோகிகள் இருப்பது ப்ருக்ருதி மண்டலமேயாகையால் ஆத்மாநுபவம் பெறுவதும் ப்ரக்ருதி மண்டலமே என்பது இதனால் ஏற்படுகிறது. ஆத்மாநுபவம் பெறுகிற இடமே நிலையில்லாத இடமாக இருப்பதால் ஆத்மாநுபவமும் அநித்யம் - நிலையற்றது என்பது இதனால் ஏற்படுகிறது.

# மேலும், பகவத் ராமாநுஜர் கீதா பாஷ்யத்தில், கண்ணன் கீதையில் உரைத்ததை விளக்குகிறார் :

***ஆப்ரஹ்ம புவனால்லோகா: புநராவர்த்திநோர்ஜுந. மாமுபேத்யது கௌந்தேய புநர்ஜன்ம ந வித்யதே***

என்கிறான்; அதாவது, 'நான்முகனாகிய ப்ருஹ்மா இருக்கும் லோகம் உட்பட எல்லா லோகங்களும் அழிகின்றனவையே. என்னையே அடைகிறவர்கள் மட்டுமே மறு பிறவியை பெற மாட்டார்கள்' என்கிறான் கண்ணன்.

ஆக, பகவத் ப்ராப்திக்கு தடையான பாபங்கள், கைவல்யத்தை அநுபவிப்பவனுக்கும் நீங்கப் பெறாததால், அவனுக்கு வ்ரஜா நதியைக் கடத்தலும் ***சூக்ஷ்ம சரீர விஸர்ஜனமும்*** ஏற்படாது, என்பது ஶ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம் ; ஸ்வாமி தேசிக பக்ஷம்.

# அந்த நித்ய விபூதியை அடைந்தவர்கள், கர்ம அநுகுணமாக பிறவியை சந்திப்பதில்லை.

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, 'ப்ருஹ்ம ஸூத்ரம்' (4-4-6-22)

***அனாவ்ருத்தி சப்தாத் அனாவ்ருத்தி சப்தாத்***

அதாவது, மோக்ஷத்தை அடைந்தவன் திரும்புவதில்லை. இங்கு, 'மோக்ஷத்தை அடைந்த முக்த ஜீவர்களுக்கு பாப புண்ய கர்ம ஸம்பந்தமான பிறவிகள் ஒரு போதும் கிடையாது ' என்பதை விளக்கப் படுகிறது. மோக்ஷத்தை அடைந்தவன் திரும்புவதில்லை ஏன் என்றால் உபநிஷத் அவ்வாறு கூறுவதினால். கர்ம ஸம்பந்தமான பிறவிகள் வந்து சேருவதற்கு காரணங்கள், பாப புண்யங்கள்.

ஆக, முக்தனாகப் போகும் சம்சாரி ஜீவன் தன் கடைசி பிறவிக்குப் பிறகு, வ்ரஜா நதிக் கரையிலே ***சூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்*** ஏற்படுகறது

6. ஆக ***சூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்*** என்பதாவது, ஸுக்ஷ்ம ப்ராக்ருத சரீரம் மற்றும் ப்ராண இந்த்ரியங்களின் விடுகை :

# சதுர்வித புருஷார்த்தங்களில் உயர்ந்த பலனாக திகழக் கூடிய பரமபத ப்ராப்திக்கு முன்பு சம்சாரி ஜீவன் செய்து போகும் ***சூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்*** என்பது ப்ரக்ருதி சம்பந்தத்தின் கடைசி த்யாகம்.

# கைவல்ய பலனில், ***சூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்*** என்பது தாற்காலிகம் ஏனெனில், அந்த கைவல்ய அநுபவம் ப்ராக்ருத லோகத்திலே இருப்பதால் ; மேலும், கைவல்ய அநுபவத்தில், கர்ம சம்பந்தம் முற்றிலுமாக விடுபடாத காரணத்தால்.

# முக்தனாகப் போகும் ஜீவனின் ***சூக்ஷ்ம சரீர விஸர்ஜனம்*** (ஸூக்ஷ்ம ப்ராக்ருத சரீரம் மற்றும் ப்ராண இந்த்ரியங்களின் விடுகை) வ்ரஜா நதிக் கரையிலே ஸித்திக்கிறது ; அந்த ஸூக்ஷ்ம ப்ராக்ருத சரீரம் மற்றும் ப்ராண இந்த்ரியங்கள் பிறர் உபயோகிக்க ஏற்றதாகாது.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******